# வாழ்வின் காதல் கடிதங்கள்

*பலரின் வாழ்வை புரட்டிப் போட்ட ஓஷோவால் எழுதப்பட்ட கடிதங்கள்*

முகவுரை

எனது வார்த்தைகள் உனது காதுகளில் ஒலிப்பதாக நீ எழுதியிருக்கிறாய்: அவைகளின் எதிரொலி உன்னை, மௌனமே எல்லாமாயுள்ள வெற்றுவெளிக்குள் உன்னை சுமந்து செல்லவேண்டும் என்று நான் விரும்புகிறேன். வார்த்தைகளிலிருந்து மௌனவெளிக்குள் செல்லும் வழி இதுதான். அங்கு தன்னையே ஒருவர் சந்திக்கிறார். நான் ஆனந்தத்தில் திளைத்திருக்கிறேன். என்னுடைய அன்பை அள்ளிக்கொள். என்னிடமிருக்கும் ஒரே செல்வம் இதுதான், என்னிடம் கொடுப்பதற்கு வேறொன்றுமில்லை. எந்த அளவுக்கு அதிகமாக நீ கொடுக்கிறாயோ அந்த அளவுக்கு அது பெருகுகிறது என்பதே அதன் அற்புதம். உண்மையான செல்வம் என்பது அப்படித்தான் நீ கொடுக்க கொடுக்க அது வளர்கிறது. மேலும் அது குறைந்தால் அது செல்வமே அல்ல.

ஓஷோ..ஒரு கோப்பை தேநீர்.

# 1.

அன்பு.

நேற்றைக்கு முந்தையதினம் நான் டெல்லியிலிருந்து திரும்பிய பிறகு உனது கடிதத்தைப் பெற்றேன். நீ ஆனந்தமாகவும் நிறைவாகவுமிருக்கிறாய் என்பதையறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனந்தம் நமக்குள் வாழ்கிறது. ஆனால் நாம் அதைக் கண்டறிவதில்லை. ஏனெனில் நாம் அதனை வெளியில் தேடுகிறோம். ஒருமுறை உள்முகப்பயணம் தொடங்கிவிட்டால் ஆனந்தத்தின் புதிய ஆதாரங்கள் தொடர்ந்து திறந்து கொண்டேயிருக்கின்றன.

உள் ராஜ்யத்தில் சோகமோ, வலியோ, மரணமோயில்லை. ஒருமுறை நீ இந்த மரணமற்ற தளத்தையடைந்துவிட்டால் நீ மறுபிறப்பெடுப்பாய். மேலும் உன்னைப் பிணைக்கும் அனைத்தையும் நீ வெட்டிவிடுவாய். இந்த சுதந்திரமான நிலையை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள்.

இந்த நிலையில் தானும், மற்றவரும் உதிர்ந்துவிடுவார்கள். மேலும் எல்லைகளற்று, விவரிக்கமுடியாமல் உருவமோ, உருவகமோ அற்று இருப்பு மட்டுமேயிருக்கும்.

முன்பு நான் என்பதன் இருப்பு இருந்தது. இப்போது அங்கிருப்பது முழுமையின் இருப்பு. ஒருமுறை இது அடையப்பட்டுவிட்டால் எல்லாமும் அடையப்பட்டுவிட்டது.ஒருமுறை இது அறியப்பட்டுவிட்டால் எல்லாமும் அறியப்பட்டுவிட்டது.

நீ இந்த நிலையிருந்தால் வன்முறை, வெறுப்பு, சோகம், வலி, இறப்பு, இருள் எல்லாமும் மறைந்துவிடும். எது மிச்சமிருக்கிறதோ அது சச்சிதானந்தம். உண்மை, உணர்வு, ஆனந்தம்.

நீ சச்சிதானந்தத்தை அடையவேண்டுமென்பதே எனது விருப்பம்.

2.

அன்பு.

நிகழுமனைத்திலும் ஒவ்வொரு கணத்திலும் உண்மை வெளிப்படுகிறது. அது எப்பொழுதும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. தேவைப்படுவதெல்லாம் அதைப்பார்ப்பதற்குரிய விழிகள் மட்டுமே. அதனுடைய ஒளி எப்பொழுதுமிருக்கிறது.

ஒரு வருடத்திற்கு முன்பு நானொரு மரக்கன்று நட்டேன். அது இப்போது பூக்கத்தொடங்கியுள்ளது. இது நிகழ்வதற்கு முன்பு அங்கு ஒருவருட காத்திருத்தல் உள்ளது. ஆன்மீக வாழ்க்கையும் அப்படித்தான்.

பிரார்த்தனையில் நிறைந்து காத்திரு. விதைகளை தூவி விட்டுவிட்டு மலர்கள் மலர்வதற்காக காத்திரு. பொறுமைதான் தியானத்தின் சுவாசம். அதனுடைய காலம் கனியாமல் எதுவும் நிகழமுடியாது. எல்லாமும் வளர்வதற்கு அதற்குரிய நேரத்தை எடுத்துக்கொள்கிறது.

நான் உன்னுடைய கடிதத்தைப் பெற்றேன். நீ உன்னுடைய பயணத்தில் நகரும்பொழுது நீ நம்பிக்கைக்கும், விரக்திக்குமிடையே ஒரு பாதையை உருவாக்குகிறாய். இதை அறிவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க்கையின் பாதை பல சூழல்களை உடையது. மேலும் அது அப்படியிருப்பது நல்லது. அது உனது தைரியத்திற்கும், சந்திக்கும் ஒரு சவாலை உருவாக்குகிறது. வெற்றிக்கு மகிழ்ச்சியைச் சேர்க்கிறது.

பயணப்படாதவர்கள் மட்டுமே தோல்வியுற்றவர்கள் என்று அழைக்கப்படலாம். பயணிக்கத்தொடங்கியவர்கள் ஏற்கனவே பாதி யுத்தத்தை வென்றுவிட்டார்கள். மேலும் இடையில் வரும் தோல்விகளெல்லாம் தோல்விகளல்ல. அவை

வெற்றிகள் சிறப்பாக ஒளிர அமைந்த பின்புலங்கள் மட்டுமே. ஒவ்வொரு கணத்திலும் பிரபஞ்சம் உன்னுடன் உள்ளது. அதனால் குறிக்கோளை அடைவது நிச்சயம். நான் ஆனந்தத்தில் இருக்கிறேன்.

3.

அன்பு.

நான் ஆனந்தத்தில் இருக்கிறேன். சிறிதுகாலம் முன்பு நான் உனது கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதிலிருந்து நான் வெளியூரிலிருந்ததால் நான் பதில் போட தாமதமாகிவிட்டது. ஜசப்பூரிலும், இன்டோரிலும் பேசிவிட்டு நான் திரும்பியிருக்கிறேன்.

நான் தினமும் பார்க்கும் ஓர் உண்மை என்னவென்றால்,
ஆன்மீகம் இல்லாமல் யாரும் வாழமுடியாது.
ஆன்மீகம் இல்லாமல் ஒரு மனிதனில்
ஏதோவொன்று காலியாகவும், நிறைவடையாமலும் உள்ளது.
இந்த காலித்தன்மை அரிக்கத்தொடங்கும். ஆனால்
அதை நிரப்ப உனக்கு வழி ஏதும் தெரியாது.
இதுதான் இன்றைய மனிதனின் நிலை. நான் அதைப்பற்றி
கவலைப்படவில்லை. ஏனெனில்

மனித குலத்தின் எதிர்காலமும், பாதுகாப்பும் பற்றிய
ஒரே நம்பிக்கை இந்த நிலையில் இருக்கக்கூடும். இந்த வலியிலிருந்து
ஒரு தாகம் பிறக்கும். சரியாக திசை திருப்பப்பட்டால் அது
ஒரு உலகளாவிய ஆன்மீக மறுமலர்ச்சியாகக் கூடும்.
ஒரு இருண்ட இரவு உதய சூரியனால்
பின்தொடர்வதைப் போல மனிதனின் ஆத்மா
ஒரு புதிய விடியலுக்கு மிக அருகிலுள்ளது.

வரப்போகும் இந்த விடியலைப்பற்றிய செய்தி ஒவ்வொரு தனிமனிதனுக்கும் கொண்டு செல்லப்படவேண்டும். ஏனெனில் அது நம் ஒவ்வொருவருக்குள்ளும் தான் நிகழவேண்டும். மேலும் இந்த விடியல் நடப்பதற்கு நாம் அனைவரும் முயற்சி செய்யவேண்டும். நாம் அனைவரும் முயற்சி செய்தால் மட்டுமே அது வரும். அது தானாகவே வராது.

தன்னுணர்வு பிறப்பதற்கு முயற்சியும், பொறுமையும் தேவை. அது பிரசவ வலியைப் போன்றது. இந்த முயற்சியும், பொறுமையும் இந்த பிரசவ வலிகளும் வேதனையானவையல்ல. ஏனெனில் அவைகளின் மூலம் வரையறுக்குட்பட்டது எல்லையற்றதற்குள் செல்லமுடியும். தனக்குள் பரந்த தன்மைக்கு பிறப்பளிப்பதைப்போல பரவசமளிக்கக்கூடியது வேறொன்றுமில்லை.

வாழ்க்கையின் குறிக்கோளை நோக்கி நீ நகர்ந்து கொண்டிருக்கிறாய் என்பதையறிந்து நான் மகிழ்ச்சியோடிருக்கிறேன். நாம் நகர்ந்து கொண்டேயிருந்தால் நாம் கண்டிப்பாக அடைந்தே தீருவோம். தெய்வீகம் உன்னோடு இருக்கட்டும், அதுதான் என்னுடைய விருப்பம்.

4.

அன்பு.

நான் உனது கடிதம் கிடைக்கப்பெற்றேன். மேலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நீ அமைதி மற்றும் பரவசத்தின் புதிய ஆழங்களைத் தொடுகிறாய் என்பது என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. வாழ்க்கையின் பயணத்தில் அடைவதற்கு இதைவிட தகுதிவாய்ந்தது எதுவுமில்லை. எல்லாவற்றையும் இழந்தபிறகு, இந்த செல்வம் இன்னமும் உன்னுடன் இருக்கும். அதனால்தான் உண்மையில் ஒரே செல்வம் இதுதான். எல்லாமும் இருந்தாலும் இந்த செல்வம் இல்லாதவர்கள் - அவர்களிடம் எல்லா செல்வமும் இருந்தாலும் கூட - ஏழைகளே.

அதனால்தான் மிகப்பெரிய செல்வம் இருந்தாலும்கூட ஒருவர் வறியவராக இருக்கமுடியும். பணக்காரர் ஏழ்மையில் வாழமுடியும். ஏனெனில் அத்தகைய செல்வங்கள் ஒருவரின் ஏழ்மையை அழிப்பதைப்போன்ற மாயையை மட்டுமே உருவாக்குகின்றன. அவை அதனை அழிப்பதில்லை. அவை அதனை

மறைக்க மட்டுமே செய்கின்றன. மேலும் இந்த தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளுதல் முடிவில் மிகவும் விலையுயர்ந்த இழப்பாக அமைகிறது. ஏனெனில் உண்மையான புதையலை அடையக்கூடிய வாய்ப்பாக அமைந்த ஒரு வாழ்க்கை இந்த மாயையின் விளைவாக பயனற்றதாக
செலவழிந்து விடுகிறது.

வாழ்க்கையின் வெளிவட்டத்தில் அடையப்பெறும் செல்வத்தைப்பற்றி ஒருவர் சுதாரிப்பாக இருக்கவேண்டியது மிகவும் முக்கியம்.
அதன் இயல்பான மாயையைப் பற்றி அறிந்து கொண்டவர்கள் மட்டுமே வாழ்க்கையின் மையத்தில் மறைந்திருக்கும்
புதையலைத்தேடி கிளம்புவார்கள். இந்த செல்வத்தைக் கண்டறிவது ஏழ்மையை எப்போதைக்குமாக அழித்துவிடும். ஏனெனில் இத்தகைய செல்வம் ஒருபோதும் உன்னிடமிருந்து பறிக்கப்படமுடியாது. உன்னிடமிருந்து பறிக்கப்படமுடியாதது மட்டுமே உனது சொந்த செல்வம். உனது தனிப்பட்ட செல்வம்.

எது பறிக்கப்படமுடியாதோ அதைக் கண்டறியவும் முடியாது. ஏனெனில் எதைக் கண்டறிய முடியுமோ அது தொலையவும் கூடும். உள்முகச்செல்வம் வெறுமனே இருக்கிறது. அது எல்லா இடங்களிலும் இருக்கிறது. ஒருவர் வெறுமனே அதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் அவ்வளவே. உண்மையில் அதனை அடையாளம் கண்டு கொள்ளுதலே அதனை அடைதலாகும்.

நீ வாழ்க்கையில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் இந்த ஞானச்செல்வத்தை நோக்கி உன்னை அழைத்துச் செல்லட்டும் - அதுதான் எனது விருப்பம். நான் ஆனந்தத்தில் இருக்கிறேன். எனது அன்பை அங்குள்ள அன்பர்கள் அனைவருக்கும் கொடு.

5.

அன்பு.

உன்னுடைய மிகவும் அன்பான கடிதத்தைப் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உனது வாழ்க்கையின் நெருப்பு சத்தியத்தை நோக்கி புகையில்லாமல் தீப்பிழம்பாக எழட்டும். அதுதான் என்னுடைய ஒரே விருப்பம். தெய்வீகத்தை அடைவதற்கு ஒருவர் தன்னுடைய வாழ்க்கையை ஒளிவீசும் நெருப்பாக மாற்றிக்கொள்ள வேண்டும்.
நீ எப்போதும் இதை நினைவில் வைத்திருப்பாயாக.

தூங்கினாலும், விழித்திருந்தாலும் இந்த தவிப்பு
இந்த தாகம் இந்த நினைவு உனது ஒவ்வொரு மூச்சிலுமிருந்தால்
உன்னுடைய முழுப்பார்வையும் இதன் மேலிருந்தால் - பிறகு
வேறெதுவும் செய்யப்பட வேண்டியதில்லை.

தாகம்.... அதை அடைவதற்கு தாகம் மட்டுமே போதுமானது. கடல் மிகவும் அருகிலுள்ளது. ஆனால் நம்மிடம் எந்த தாகமுமில்லை. அதனுடைய கதவு மிகவும் அருகிலுள்ளது. ஆனால் நாம் தட்டுவதுகூட இல்லை.

தேவைப்படுவதெல்லாம் தெய்வீகம் எப்போதுமுள்ளது என்பதை பார்க்கக்கூடிய திறன் மட்டுமே. ஆனால் நமது கண்கள் மற்ற விஷயங்களில் குவிந்துள்ளன. நமது மனங்கள் தேவையில்லாதவை அனைத்தாலும் நிறைந்துள்ளன. அதனால்தான் நம்மால் இருப்பது எதுவோ அதைப் பார்க்க இயலவில்லை. இதயம் மற்றவைகளால் மூடப்பட்டுள்ளது. அதனால்தான் சுயம் மறக்கப்பட்டுவிட்டது. இந்த மூடுதல் விலக்கப்பட வேண்டும்.

தளைகளும், குப்பைகளும் சுத்தமான, தூய்மையான குளத்தின் தண்ணீரில் பரவியுள்ளது. அவை நீக்கப்பட வேண்டும். பிறகு நாம் எப்போதும் எதையும் இழந்ததில்லை என்பதைக் காண்போம். அதை இழக்கமுடியாது என்பதையும் காண்போம்.

நான் சத்தியத்திலேயே, இருப்பிலேயே வாழ்கிறேன். அதுதான் நான். மேலும் நீயும் அப்படித்தான். தத்துவமஸி, சுவத்கேது அதுதான் நான்.
சுவத்கேது.

விழித்தெழுந்து நினைவில்கொள். உன்னுடைய எல்லா செயல்களிலும் அவற்றை கவனிப்பது எதுவோ அதை நினைவுகொள்.

உன்னுடைய எல்லா எண்ணங்களிலும் உன்னுடைய பார்வை அவற்றின் பின்னாலிருப்பதில் இருக்கட்டும்.

நீ செயல்களற்ற, எண்ணங்களற்ற, அசைவுகளற்ற அந்த இடத்தைப் பற்றி விழிப்புக்கொள்ள வேண்டும். அது வெளியும், காலமும் கடந்தறியப்படுகிறது.

அங்கு அமைதியும், ஆனந்தமும், பரிநிர்வாணமும் இருக்கின்றன. ஒருமுறை அது கண்டறியப்பட்டுவிட்டால் பிறகு அங்கு அடையப்படவேண்டியது ஏதுமில்லை.

எனது அன்பர்கள் அனைவருக்கும்
எனதன்பைக் கூறு.

6.

அன்பு.

அதிக அன்பாலும் சத்தியத்தின் மீது உனக்கிருக்கும் தாகத்தாலும் நிறைந்திருந்த உனது கடிதத்தை நான் பெற்றேன். நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வளவு தாகமிருக்கும்பொழுது அடைதல் வெகுதொலைவில் இல்லை.

தாகமிருந்தால் வழி உருவாக்கப்படுகிறது. கதவிலிருக்குமொரு விளக்குப்போல சத்தியம் மிக அருகிலேயே இருக்கிறது. பிரச்சனை சத்தியமல்ல. பார்ப்பதற்குரிய விழியற்றிருப்பதே. உனக்கு விழியில்லை என்பதல்ல. அது இருக்கிறது. ஆனால் அது மூடியிருக்கிறது. அதைத் திறக்கமுடியும். தொடர்ந்து ஆன்மீக ஒழுக்கத்தின் மீது செய்யப்படும் தீர்மானத்தின் மூலம், முயற்சியின் மூலம் அதைத் திறக்கமுடியும்.

இந்தக் கண் எண்ணங்களாலும், மனதாலும், இச்சைகளின் வாசனையினால் மூடப்பட்டுள்ளது. எண்ணங்களில்லாத தன்னுணர்விருக்கும் பொழுது இது திறக்கும். பிறகு முழு வாழ்க்கையும் ஒளியினால் நிறைந்துவிடும். அதைத்தான் நான் கற்று தந்துக்கொண்டிருக்கிறேன். இந்த தூய்மையான, எண்ணங்களற்ற நிலையை நான் கற்றுத் தருகிறேன். என்னிடம் கற்றுத் தருவதற்கு வேறொன்றுமில்லை.

மூன்றாம் கண் திறக்கப்பட்டுவிட்டால் - அது மற்றவையனைத்தையும் உனக்கு சொல்லித்தரும். இந்தக் கண் திறப்பதை பரிசோதனை செய்ய மகாபலிஸ்வரர் புனாவில் பிப்ரவரி 13, 14, 15 - ல் 200 நண்பர்கள் ஒன்று கூடுகிறார்கள். நீ வரமுடிந்தால் நன்றாக இருக்கும். நீ மகாபலிஸ்வரருக்கு பிப்ரவரி 12 மாலை வந்து சேர வேண்டியிருக்கும். எனது மரியாதையுடைய நினைவுகூறல் அனைவருக்கும்.

அன்பு.

உனது கடிதம் கிடைக்கப் பெற்றதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்று உன்னை சந்தித்ததும் மிகவும் மகிழ்ச்சியாயுள்ளது.

சத்தியத்திற்காக உன்னிடமிருக்கும் தவிப்பும், தாகமும் ஒரு அபூர்வமான ஆசீர்வாதம். அது அங்கிருந்தால், பிறகு ஒருநாள் நீ தியானக்கடலில் குதிப்பது நிகழ்ந்தே தீரும். நீ கரையில் நிற்பதை நான் பார்க்கிறேன்.
ஒரு குதித்தல் மட்டுமே தேவை. தியானம் இயல்பாக ஆகுமளவிற்கு - அதில் முயற்சியும், பதட்டமும் குறைகிறது. நீ வேகமாக அதனுள் வளர்கிறாய். அது பயிற்சி செய்யப்பட வேண்டும்.

ஆனால் அதுவொரு பதட்டமாகவோ ஒரு சிந்தனையாகவோ மாறிவிடக்கூடாது. நானிந்த வழிமுறையை பயிற்சியற்ற முறையின் மூலம் பயிற்சி என்றழைக்கிறேன்.

சத்தியத்தை அடைவதற்கான உனது பொறுமையற்றத் தன்மையும், ஓய்வற்றத் தன்மையுமே பதட்டம். முயற்சியின் பதட்டம். எல்லையற்ற பொறுமையும், அமைதியும், காத்திருத்தலுமிருந்தால் இந்த முயற்சியின் பதட்டம்

மறைந்துவிடும். பிறகு மரத்தில் மலர்கள் இயல்பாக மலர்வதைப் போல முயற்சியற்று எதிர்பார்க்காத வகையில் தியானத்தில் வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

அங்கிருக்கும் அனைவருக்கும் எனதன்பைக் கூறு.

8.

அன்பு.

உனது முதல் கடிதம் என்னை நேரத்தில் வந்தடைந்தது. ஆனால் நான் சௌராஸ்ட்ராவில் இருந்தேன். எனவே என்னால் பதிலளிக்க முடியவில்லை. நான் திரும்பி வந்தவுடன் உனது இரண்டாம் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

நீ விரும்பினால் என்னால் வர இயலும். நீ அக்டோபர் முகாமிற்கு இங்கு வரும்பொழுது உன்னுடைய கடிதங்களையும் விவாதிக்கலாம்.

யாராவதொருவர் ஏதாவதொரு வழியில் உதவி பெறுவாரென்றால் நான் எங்கு வேண்டுமானாலும் செல்லத் தயார். இப்பொழுது என்னுடைய ஒரே மகிழ்ச்சி அதுதான்.

நீ விளக்கியுள்ள மனதின் நிலை என்னை மிகவும் மகிழ்ச்சியடைய செய்துள்ளது.

நீ சரியான திசையில் செல்கிறாய். உடலின் ஆசனங்களைப் பற்றியோ, அசைவுகளைப் பற்றியோ கவலைப்படாதே. அவை உனக்கு உதவி மட்டுமே செய்யும். பிறகு அவை மெதுவாக மறைந்துவிடும். எண்ணங்களற்ற தன்னுணர்வை வெறுமனே பயிற்சி செய். மற்றவையனைத்தும் ஒரு நிழலைப் போல பின்தொடரும். மனம் அமைதியாக இருக்கிறதென்றால் பிறகென்ன நிகழ்ந்தாலும் நல்லதே.

நீ பொதுவாக வாழ்க்கையைப் பற்றியுணரும் விரக்தி - மேலும் நடந்து கொண்டிருப்பதனைத்தும் நிலையற்றது. இதுவும் கடந்து போகும். பிறகு உனது சேவை உண்மையான சேவையாகயிருக்கும். நாம் சந்திக்கும்பொழுது இந்த விஷயங்களெல்லாவற்றைப் பற்றியும் விவரமாக விவாதிக்க இயலும்.

எது நிகழ்கிறதோ அது சரியான விஷயம் என்பதை மட்டும் நினைவில் கொள். மேலும் இதனுடைய விளைவும் உதவிகரமாகவும், நன்மையாக மட்டுமே இருக்கும்.

என்னுடைய அன்பை ஏற்றுக்கொள். பிரபஞ்சம் உனக்கு ஒளி வழங்கட்டும். அதுவே எனது விருப்பம்.

அன்பு.

உன்னுடைய கடிதம் கிடைக்கப்பெற்றேன். தன்னுணர்வு, தன்னையறிதல், விழிப்புணர்வு வளர்ந்து கொண்டிருத்தல் எனில் நீ மனதின் மயக்கமூட்டுகிற வட்டத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறாய் என்று பொருள்.

உணர்வற்ற தன்மையும், விழிப்புணர்வற்ற தன்மையும் வளர்ந்து கொண்டிருந்தால் - பிறகு மனதின் தூக்கம் இன்னும் ஆழமாகிக் கொண்டிருக்கிறதென்பதைக் கண்டிப்பாகக் கூறலாம்.

ஆனால் நீயே பரிசோதனை செய்யாமல் எந்த அனுபவமும் கிடைக்காது. சிந்தித்துக்கொண்டே இருக்காதே. எண்ணங்களை விட்டுவிட்டு உனக்குள் நுழை. எண்ணமென்பது கரையைத்தவிர வேறொன்றுமில்லை. எண்ணங்களற்ற தியானத்திலேயே வாழ்வின் சக்தியோட்டம் கண்டறியப்படுகிறது.

கபீர், " ஆழமாக குதித்த சாதகர்களே - அதனை கண்டறிந்திருக்கிறார்கள். நான் எனது தேடலை கள்ளம், கபடமற்று கரையில் இன்னமும் அமர்ந்து கொண்டே தொடங்கியிருக்கிறேன் ". என்று கூறுகிறார்.

அன்பு.

உன்னுடைய கடிதம் கிடைக்கப்பெற்று நீண்ட நாள்களாகிறது. இத்தனை காலம் நான் தொடர்ந்து சுற்றுலாவிலேயே இருந்தேன். அதனால்தான் என்னால் ஒரு வார்த்தை கூட பதிலெழுத முடியவில்லை. எப்படியிருந்தாலும் என்னுடைய பிரார்த்தனைகள் எப்போதும் உன்னுடனிருக்கின்றன.

உன்னுடைய இதயத்திலிருக்கும் தாகத்தையும், வலியையுமறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் ஆன்மீகத் தேடுதல் பிறப்பதற்குரிய விதை அவைகள்தான். உன்னுடைய வாழ்க்கையில் அமைதியான மற்றும் இயல்பான வழியில் பரிசோதனை செய்துகொண்டேயிரு.

அடியில் நீராதாரமில்லாத மண் ஏதுமில்லை, மேலும் பிரபஞ்ச சுயம் தனக்குள்ளில்லாத எந்த சுயமும் இங்கில்லை.

அங்கிருக்கும் அனைவரையும் நான் மரியாதையுடன் நினைவு கூறுகிறேன்.

அன்பு.

உன் கடிதத்திற்கான பதில் குறித்து, நான் வெளியே சென்றிருந்தேன். நேற்றைக்கு முந்தைய தினம்தான் நான் திரும்பி வந்தேன். இப்போது நான் பல்கலைக் கழகத்திலிருந்து விடுபட்டு விட்டேன். எனவேபயணம் மட்டுமே எனது வாழ்க்கை.

சத்தியமென்றால் என்ன?

இருப்புத்தன்மையின், இருப்பின் ஒருவருடைய வாழ்க்கையின் முழுமையான அனுபவமே சத்தியம். இருப்புத்தன்மையின் அனுபவம் எவ்வளவு உணர்வற்றதாக இருக்கிறதோ அந்தளவிற்கு வாழ்வு உண்மையற்றதாக இருக்கும்.

நான் இருக்கிறேன் என்பதை ஒவ்வொரு கணமும் ஆழமான தீவிரத்துடன் அனுபவி. ஒவ்வொரு மூச்சும் அதனால் நிறைந்திருக்கட்டும். இறுதியில் நான் என்பதும் மறைந்துவிடும். மேலும் இருக்கிறேன் என்பது மட்டுமே மிஞ்சும். அந்தக்கணத்தில் இருப்பது எதுவோ அது அறியப்படுகிறது, வாழப்படுகிறது.

மௌனத்தில் உரையாடல் சாத்தியமா?

உண்மையில் மௌனத்தில் மட்டுமே உரையாடல் சாத்தியம். வார்த்தைகள் மிகக்குறைவாக சொல்கின்றன. மேலும் அதைவிட அதிகமாக தடுக்கின்றன. ஆழத்தில் எல்லாமும் தொடர்புடையது. தொடர்புடைய தன்மையுடன் கூடிய இந்தத் தளத்தில் உணர்வுகள் மௌனத்தில் பரவுகின்றன. மௌனமான வெளிப்பாட்டிற்கு வார்த்தைகள் ஒரு மிகவும் வறிய மாற்று.

உண்மையை வார்த்தைகளில் சொல்லமுடியாது. அதை மௌனமான உள் குரலின் மூலமாக மட்டுமே வெளிப்படுத்த முடியும்!

நீ எனக்கு தரத்தொடங்கியிருக்கும் அறிவுரை குறித்து
நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அப்படிப்பட்ட அறிவுரைகளை எனக்குத் தந்து கொண்டேயிரு.

எல்லாவற்றையும் விட எனக்கு இந்த உலகினைப் பற்றி எதுவும் தெரியாது.

இந்த வார்த்தைகளில் மறைந்திருக்கும் என்னைப்பற்றிய உனது அன்பும், அக்கறையும் என்னை மிகவும் தொடுகின்றன.

அன்பு.

உன்னுடைய கடிதம் கிடைக்கப் பெற்றேன். உன்னுடைய ஆன்மீக முயற்சிகளும் அவை குறித்த உன்னுடைய பிரதிபலிப்புகள் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாட்டில் நிகழ்காலச் சூழ்நிலை குறித்து கவலைப்படுவது இயல்பானது. ஆனால் நீ எவ்வளவு கவலைப்படுகிறாயோ அந்தளவிற்கு பிரதிபலிக்க இல்லாமல் போய்விடும். கவலைப்படுதலும், பிரதிபலித்தலும் எதிர் எதிர் முனைகள்.

நீ மனதை மௌனமாக வைத்திருந்தால் - பிறகு மெதுவாக செய்வதற்குத்தகுதியான விஷயமெது என்பதைப் பற்றிய புரிதல்கள் எழத்தொடங்கும். ஒரு அமைதியான மனம் தன்னிச்சையாகவேசரியான வழியில் செல்லத்தொடங்குகிறது.

பிறகு, உள்ளிருப்பு பாதையாகவும், பாதையில் ஒளியாகவும், இரண்டாகவும் மாறிவிடுகிறது.

நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் எந்த அறிவுரையும் வழங்கமாட்டேன். முற்றிலும் அமைதியாகயிரு என்பதே எனது அறிவுரை. ஒருமுறை அது

நிகழ்ந்துவிட்டால் - உனது சுயஇருப்பு நீ என்ன செய்யவேண்டுமென்று சொல்லத்தொடங்கும். அது எப்போதும் சரியாகவே இருக்கும் - அங்கு மாற்று வழியின் சாத்தியமேயிருக்காது.

உனக்கு எந்த சந்தேகமோ, பயமோ இருக்காது. எண்ணங்கள் மூலமாக இல்லாமல் உள்ளுணர்வின் மூலம் வாழவேண்டுமென்பதே எனது அறிவுரை.

தியானம் செய்யும்பொழுது நீண்ட நேரம் அமர்வது உடல்நலக் காரணங்களினால் சாத்தியமில்லாமலிருந்தால் - பிறகு அதை படுத்துக்கொண்டே செய். நீ உட்கார்ந்திருக்கிறாயோ, படுத்திருக்கிறாயோ என்பது கேள்வியல்ல. உண்மையான கேள்வி உனது மனதின் நிலையைப் பற்றியதே. உனது பயணம் அடிப்படையில் மனதைப்பற்றியது, உடலைப் பற்றியதல்ல.

இப்போதைக்கு எந்தத் தியானமுகாமும் சமீபத்தில் வரவில்லை. அருகிலிருப்பதின் மூலம் நான் உனக்கு உதவமுடியுமாவென்று பார்க்கலாம். என்னுடைய அன்பு உன்னுடன் எப்போதுமிருப்பதை உணர்.

நான் மரியாதையுடன் நினைவு கூர்ந்ததாக அனைவரிடமும் தெரிவி.

அன்பு.

உன்னுடைய கடிதம் கிடைக்கப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். சத்தியத்திற்காக, அமைதிக்காக விடுதலைக்காக - நீ எவ்வளவு தீவிரமான தாகம் கொண்டிருக்கிறாய்!

இந்த தாகத்தை உணர்ந்தபிறகு, நான் உனக்காக என்ன செய்தாலும் அது சிறிதாகவே இருக்குமென்று தோன்றுகிறது. ஆனாலும் கூட என்னால் முடிந்தவரை முழுமையாக உனக்கு உதவவேண்டுமென்று விரும்புகிறேன்.

நான் ஏன் இதைச் செய்ய விரும்பவேண்டும்? ஒருவேளை செய்யாமலிருப்பது முற்றிலும் எனது கட்டுப்பாட்டில் இல்லை. பிரபஞ்சம் எனக்கு ஆணையிடுவதை நான் செய்தாக வேண்டும். மேலும் நீ தயாராகயிருப்பதைப் பார்க்கும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உன்னுடைய வாழ்க்கைப்பாதையின் திசையை நான் உனக்கு காட்டக்கூடிய கணம் எல்லா நேரங்களிலும் அருகில் வந்து கொண்டேயிருக்கிறது.

ஆம். கண்டிப்பாக உன்னைப்பற்றி என்ன எழுத விரும்புகிறாயோ அதை எழுது.

அன்பு.

நான் உனது கேள்விகளையும் கடிதத்தையும் பெற்றுக்கொண்டேன். நான் காரணமாகவே இறப்பு குறித்து அமைதியாக இருந்தேன். ஏனெனில் வாழ்வை பற்றிய விசாரணையை உனக்குள் எழுப்பவேண்டும் என்பதற்காகவே.

இறப்பு பற்றி சிந்திப்பவர்கள் எங்கும் சென்றடைவதில்லை - ஏனெனில் இறக்காமல் இறப்பைப் பற்றி எப்படி அறியமுடியும்? அதனால்தான் அப்படிப்பட்ட சிந்தனையின் ஒரே விளைவு ஆத்மா அழிவற்றது என்ற ஒரு நம்பிக்கையோ, அல்லது ஒருவருடைய வாழ்க்கை முடிந்துவிட்டால் அது முழுமையான முடிவு அதற்கு பிறகு எதுவும் மிச்சமிருக்காது என்ற நம்பிக்கையோ ஆகும்.

இரண்டுமே வெறும் நம்பிக்கைதான். ஒரு நம்பிக்கை மரணத்தின் மீதான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது மேலும் மற்றொன்று இந்த உடலின் முடிவே முழுமையான முடிவு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. நான் மக்கள் நம்பிக்கைகளிலும் கருத்துக்களிலும் சிக்கிக்கொள்வதை விரும்பவில்லை. ஏனெனில் அவை அனுபவித்தலின், அறிதலின் பரிமாணங்கள் அல்ல.

மரணத்தைப் பற்றி எண்ணுவதன் மூலம் நம்பிக்கைகளையும் சமயங்களையும் தவிர வேறு எதை கண்டறிந்துவிட முடியும்? எண்ணம் ஒருபோதும் ஒருவரை அறிந்தவற்றை கடந்து அழைத்து செல்வதில்லை. இறப்பு அறியாதது. எனவே அதனை சிந்திப்பதன் மூலம் அறிந்து கொள்ளமுடியாது. நான் உனது கவனத்தை வாழ்க்கையை நோக்கி திருப்ப விரும்பகிறேன். வாழ்க்கை இப்போது இங்கே இருக்கிறது. ஒருவர் அதனுள் நுழையமுடியும். இறப்பு ஒருபோதும் இப்போது இங்கே இருப்பதில்லை. இந்த நிதர்சனம் எப்போதாவது உனது கவனத்திற்கு வந்திருக்கிறதா - இறப்பு ஒருபோதும் நிகழ்காலத்தில் இல்லை? வாழ்க்கை எப்பொழுதும் நிகழ்காலத்தில் இருக்கிறது. அது கடந்தகாலத்திலோ, எதிர்காலத்திலோ இல்லை. வாழ்க்கை இருந்தால் அது இப்போது இருக்கிறது. இல்லாவிடில் அது இல்லை. எனவே அதை அறிய முடியும். ஏனெனில் அதை வாழமுடியும். அதைப்பற்றி சிந்திக்க தேவையில்லை. உண்மையில் அதைப்பற்றி சிந்திப்பவர்கள் அதை தவறவிட்டுவிடுவார்கள். ஏனெனில் எண்ணம் கடந்தகாலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ மட்டுமே நகர்கிறது. நிகழ்காலத்தில் எண்ணம் இருப்பதில்லை. எண்ணம் இறப்பின் ஒரு தோழன் வேறுவார்த்தைகளில் எண்ணம் இறந்த ஒன்று. வாழ்வின் எந்த பகுதியும் அதில் இல்லை. உயிரோட்டம் எப்பொழுதும் நிகழ்காலத்தில் உள்ளது. அதுதான் நிகழ்காலம், அதன் வெளிப்பாடே இப்போது. முற்றிலும் இப்பொழுது. இங்கே முற்றிலும் இங்கே. அதனால்தான் வாழ்க்கையைப் பற்றி எந்த சிந்தனையும்

இருக்கமுடியாது. அங்கு அனுபவித்தல் மட்டுமே இருக்கமுடியும். அனுபவம் அல்ல ஆனால் அனுபவித்தல்.

அனுபவம் என்பது ஏற்கனவே நடந்தது அனுபவித்தல் என்றால் நடந்துகொண்டிருக்கிறது என்று பொருள். அனுபவம் ஏற்கனவே ஒரு எண்ணமாகிவிட்டது, ஏனெனில் அது ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது. அனுபவித்தல், எண்ணங்களற்ற வார்த்தைகளற்ற, மௌனமான வெற்றுவெளி. அதனால்தான் எண்ணங்களற்ற விழிப்புணர்வே வாழ்வை அனுபவிக்க நுழைவாயில் என்று நான் கூறுகிறேன்.

மேலும் வாழ்வை அறிந்துகொள்ளும் ஒருவர் எல்லாவற்றையும் அறிந்துகொள்கிறார். அவர் இறப்பையும் அறிந்துகொள்கிறார். ஏனெனில் இறப்பு என்பது வாழ்வை அறிந்து கொள்ளாத காரணத்தால் எழுமொரு தவறான புரிதலைத்தவிர வேறொன்றுமில்லை. வாழ்வை அறிந்து கொள்ளாத ஒருவர் இயல்பாகவே தன்னுடைய உடலை தன்னுடைய சுயமென்று நம்புகிறார். உடல் இறப்பதால், உடல் அழிவதால், உடல் என அழைக்கப்படுவது எதுவோ அது மறைந்துவிடுவதால் இறப்பென்பது முடிவான இறுதி என்ற கருத்து தோன்றியுள்ளது. மடையர்களே இந்த நம்பிக்கையில் வாழ்வார்கள். உடலே நான் என்ற நம்பிக்கையினாலே மரணத்தைப்பற்றிய அச்சம் எழுகிறது. இந்த அச்சத்தால் சிரமப்படுபவர்கள் ஆத்மா அழிவற்றது ஆத்மா அழிவற்றது என்று ஜெபிக்கத் தொடங்குவார்கள். இந்த வழியில் பயந்தவர்களும்,

பலவீனமானவர்களும் அடைக்கலம் தேடிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு கோட்பாடுகளுமே ஒரே அதே தவறான புரிதலிலிருந்து பிறந்தவைதான். அவை அதே தவறான புரிதலின் இரு வடிவங்கள். மேலும் இரண்டு வேறுபட்ட விதமான மக்களின் இரண்டு வேறுபட்ட விதமான எதிர்வினைகள். ஆனால் நினைவில்கொள், இரண்டு விதமானவர்களும் அந்த தவறான புரிதலில்தான் இருக்கிறார்கள். மேலும் இருவிதத்திலும் அந்த தவறான புரிதல் மேலும் பலப்படுத்தப்படுகிறது.

இந்த தவறான புரிதலுக்கு எந்தவிதமான ஆதரவையும் அளிக்க நான் விரும்பவில்லை. நான் ஆத்மா அழிவற்றதல்ல என்று கூறினால் அது பொய்யாக இருக்கும். நான் ஆத்மா அழிவற்றது என்று கூறினால் பிறகு நீ என்னுடைய வார்த்தைகளை ஒரு நம்பிக்கைக் கோட்பாடாக மாற்றி உனக்கிருக்கும் மரணத்தைப்பற்றிய பயத்திலிருந்து தப்பிக்க உபயோகப்படுத்துவாய். ஆனால் பயத்தில் வாழ்பவர்கள் ஒருபோதும் சத்தியத்தை அறிய இயலாது. அதனால்தான் நான் இறப்பு அறிந்துகொள்ள முடியாது என்று கூறுகிறேன்.

வாழ்வை அறிந்துகொள். அதை மட்டுமே அறியமுடியும். மேலும் வாழ்வை அறிந்தால் அழிவற்றத்தன்மையும் அறிந்துகொள்ளப்படும். வாழ்க்கை நிரந்தரமானது. அதற்கு ஆரம்பமும் கிடையாது, முடிவும் கிடையாது. அது

வெளிப்படுகிறது. அது ஒரு உருவத்திலிருந்து இன்னொரு உருவத்திற்கு நகர்கிறது.

நமது அறியாமையில் மாற்றத்தின் அந்தப் புள்ளிகள் இறப்பைப்போல காட்சியளிக்கின்றன. ஆனால் அறிந்தவர்களுக்கு இறப்பு உனது வீட்டை மாற்றுவதைவிட பெரியதல்ல. கண்டிப்பாக மறுபிறப்பிருக்கிறது. ஆனால் எனக்கது கோட்பாடல்ல, அது ஒரு அனுபவம். மேலும் நான் அதனை மற்றவர்களுக்கு ஒரு கோட்பாடாக மாற்றவும் விரும்பவில்லை. கோட்பாடுகள் சத்தியத்தை மிகவும் மோசமாக சிதைக்கின்றன. நான் ஒவ்வொரு மனிதனும் அதனை அவனே அறியவேண்டுமென்று விரும்புகிறேன். யாரும் இதனை மற்றவர்களுக்காக செய்யமுடியாது. ஆனால் கோட்பாடுகளின் காரணமாக எல்லோரும் இதனை நம்புவதாகத் தோன்றுகிறது. மேலும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தேடுதலும் மந்தமானதாகவும், இறந்ததாகவும் ஆகிவிட்டது. நீ கோட்பாடுகளிலும் வேதங்களிலும் நம்பிக்கை கொண்டிருந்தால் நீ அமைதியாக இருந்துவிடலாம். நீ உனக்காக எதையும் அறிய வேண்டியதில்லை. சத்தியத்தை தேடுவது குறித்தும் எதுவும் செய்யவேண்டியதில்லை. இது முற்றிலும் தற்கொலைக்கு ஒப்பானது. அதனால்தான் கோட்பாடுகளைத் திரும்ப திரும்பச் சொல்லும் இந்த மனிதனைக் கொல்லும் இந்த பரந்த சூழ்ச்சியில் நான் எந்த பங்கும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் நிறுவப்பட்ட கோட்பாடுகள் அனைத்தையும் தலைகீழாக திருப்ப விரும்புகிறேன். ஏனெனில் என்னைப்

பொறுத்தவரை இதுவே கருணை கொண்டு செய்யப்படக்கூடிய ஒரே விஷயமாகத் தோன்றுகிறது. இந்த முறையில் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். ஆனால் சத்தியம் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை. அது எப்பொழுதும் அதன் நித்திய புத்துணர்ச்சியுடன் அதைத் தேடுபவர்களுக்கு கிடைக்கிறது.

நான் மரியாதையுடன் நினைவு கூர்ந்ததாக அனைவரிடமும் தெரிவி.

15.

அன்பு.

உனது இரு கடிதங்களுக்கு பதில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாய். நான் மிகவும் வேலையாக இருந்த காரணத்தால் தாமதத்திற்கு உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

1. அவதாரம், தீர்த்தங்கரர், தேவதூதர் என்று சொல்லப்படுவதெல்லாம் மனிதனின் இயலாமையைச் சுட்டிக்காட்டுவது மட்டுமே. சில மனிதர்கள் தன்னுணர்வு உயர்கிற பயணத்தில் ஒருவிதமான இடத்தை அடைந்துவிடுகிறார்கள். அதாவது அவர்களை வெறும் மனிதர்கள் என்றழைப்பது

அர்த்தமுடையதாகயில்லை என்பது மட்டும் நிச்சயம். ஆனாலும் ஒருவர் அவர்களை ஏதாவது ஒருவகையில் அழைத்தாக வேண்டும். எனவே இந்த வெளிப்பாடுகள் மனிதனின் கடந்தநிலைகளை குறிக்கப் பயன்படுத்தப்பட்டன.

2. ஆன்மீகக்கல்வி என்பதன் பொருள் உள்ளே செயலற்றிருப்பதை எழச்செய்வதே. கண்டிப்பாக வழிகாட்டிகள் தேவை. ஆனால் அவர்கள் நண்பர்களாக இருப்பார்கள். ஒரு குருவாக ஆவதற்குரிய முயற்சி என்பதன் பொருள் யாரோ ஒருவர் திணிக்கப்படுபவார் என்பதேயாகும். மனிதன் குருமார்களிடமிருந்து காக்கப்படவேண்டும்.

3. கடந்தகாலத்தில் மக்கள் ஒன்றுபோலவே இருந்தனர். அவர்கள் குறைவாகவே கல்வி கற்றிருந்தனர். எனவே அவர்கள் எல்லா வழியிலும் சுரண்டப்பட்டனர். சுரண்டியவர்கள் அவர்கள் எளிதாக சுரண்டப்படுவதை அவர்களுடைய எளிமை என்றழைத்தனர். இது அதிக மடத்தனமாகவும் எளிமையென்ற வகையில் மிகக் குறைவாகவுமிருந்தது. எந்த உருவத்திலிருந்தாலும் நான் மடத்தனத்திற்கு ஆதரவளிப்பவனல்ல. அறியாமை விளைவாக வரும் எளிமை ஒரு பைசா கூட பிரயோசனமில்லாதது. அறிவதன் மூலம் வரும் எளிமை மட்டுமே ஆன்மீக மதிப்பு வாய்ந்தது. இந்த மாறும் காலத்தில் அறிதல் தந்திரத்தைக் கொண்டுவருகிறது. இது இயல்புதான். ஆனால் மனிதகுலம் நன்றாக கல்விகற்றுவிட்டால் இந்த மாறுதல் பிரச்சனை

மறைந்துவிடும். பிறகு அறிதல், அதைப் பின்தொடரும் எளிமை. அவை மட்டுமே தேவைப்படும்.

4. ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுடைய சிந்தனை தவறாக இருக்கிறது. ஏழ்மை வாழ்க்கையைப்பற்றிய தவறான சிந்தனையின் விளைவு. அதனால்தான் நாம் வாழ்வைப் பார்க்கும் விதத்தில் சமுதாய அமைப்பும் மாறிவிடும். சிந்தனை அமைப்பை உருவாக்குகிறது. அமெரிக்கா செல்வச்செழிப்பாக இருப்பதற்கு காரணமில்லாமலில்லை. இந்தியா ஏழ்மையாக இருப்பதற்கு காரணமில்லாமலில்லை. நமது தத்துவம் ஏழ்மையின் தத்துவம் அவர்களின் தத்துவம் செல்வச்செழிப்பின் தத்துவம். அதனால்தான் நமது தத்துவம் மாறாதவரை ஏழ்மையும் மாறாதென்று நான் கூறுகிறேன்.

5. துன்பம் உடலுக்கும் நிகழ்வதில்லை. ஆன்மாவுக்கும் நிகழ்வதில்லை. துன்பம் இரண்டும் சேர்ந்த சேர்க்கைக்கு நிகழ்கிறது. அதாவது மனிதன். மனிதன் இரண்டும் சேர்ந்தவொரு சேர்க்கை.

தாக்கம் உடலில் ஏற்படுகிறது தாக்கம் உடல் சார்ந்தது - ஆனால் அனுபவம் ஆத்மாவிற்கு நிகழ்கிறது. அனுபவம் ஆன்மீகம். தாக்கமில்லாமல் எந்த அனுபவமும் இருக்கமுடியாது. அனுபவிப்பவரில்லாமல் தாக்கத்தைப்பற்றிய எந்தக் கருத்தும் இருக்கமுடியாது. அது காட்டுத்தீயிலிருந்து ஒரு குருடனும்

ஒரு முடவனும் இணைந்து இருவரின் வாழ்க்கையை காப்பாற்றிக் கொள்வதைப்போன்றது. தனித்தனியாக இருவரும் உயிர் பிழைத்திருக்க முடியாது. இணைந்து இருவரும் உயிர் பிழைத்துவிட்டனர். அவர்களுடைய இணைப்பு அவர்களை காப்பாற்றிவிட்டது. துன்பத்தின் அனுபவமும் அப்படிப்பட்டதுதான்.

6. மாறாததின் மீது, சத்தியத்தை அறிவதின் மீது ஆர்வம் எல்லோரிடமுள்ளது. அது எழுவதற்கு யார் கருவியாகயிருக்கிறார்கள் என்பதொரு பொருட்டல்ல. கருவி என்பதற்கு இரண்டாம் இடம்தான். சீடனுக்கு முதலிடம் குருவுக்கு இரண்டாமிடம் என்பதை மட்டுமே மனதில் வைத்துக்கொள்ளப்படவேண்டும். ஆனால் குருபீடம் இதற்கெதிர் மறையானதைச் சொல்லித்தருகிறது. என்னுடைய ஆட்சேபனை அதுமட்டும்தான்.

7. பண்டிட் சுக்லாலை நான் சந்தித்திருக்கிறேன். அவர் என்னுடைய புத்தகங்களோடும், பேச்சுக்களோடும் பரிச்சயம் கொண்டுள்ளார். எனது பதிவு செய்யப்பட்டுள்ள பேச்சுக்கள் பலவற்றை அவர் கேட்டுள்ளார்.

‘தர்ஸன் அவுர் சிந்தன்‘ என்ற அவருடைய ஹிந்திப்புத்தகத்தின் முதல் தொகுதியை நான் பார்த்துள்ளேன்.

8. மேற்கத்திய சிந்தனையாளர்களின் எண்ண ஓட்டங்களில் என்னுடைய எண்ண ஓட்டங்களுக்கு ஒத்ததாக இருக்கும் எண்ண ஓட்டத்தை பிரபஞ்சவியலாளர்களிடம் காணலாம். ஜென் சாதகர்களிடமும் சூபி ஞானிகளிடமும் கிருஷ்ணமூர்த்தி மற்றும் குருட்ஜிப்பிடமும் காணலாம்.

அங்கிருக்கும் அனைவரையும் நான் மரியாதையுடன் நினைவு கூறுகிறேன்.

16.

அன்பு.

உனது கடிதம் கிடைக்கப்பெற்றதில் மகிழ்ச்சியடைந்தேன்.

அன்று நீ என்னை சந்திக்க வந்தபொழுது நீ ஏன் மௌனமாக இருந்தாய் என்பதை நானறிவேன். மௌனம் பல விஷயங்களைக் கூறுகிறது. வார்த்தைகள் சொல்லத்தவறுவதை மௌனம் சொல்லிவிடக்கூடும்.

நீ காதலைக் குறித்தும், திருமணத்தைக் குறித்தும் கேட்டிருக்கிறாய். அன்பு அதிலேயே நிறைவடைந்திருப்பது. அது வேறெதையும் ஆசைப்படுவதில்லை. திருமணம் அதிகமாக ஏதோவொன்றை ஆசைப்படுவது - ஆனால் நீ இந்த பூரணமான காதலை எங்கு கண்டறிவாய்?

இந்த பூமியிலெதுவும் பூரணமல்ல - அதனால்தான் காதல் திருமணமாக மாறிவிடுகிறது. இது இயற்கைக்கு முரணானதல்ல. ஆனால் கண்டிப்பாக இது பிரச்சனையாக இருக்கப்போகிறது - ஏனெனில் காதல் வானத்தின் சுதந்திரம். மேலும் திருமணம் பூமியின் பிணைப்பு. ஒருவர் காதலால் நிறைவடைய முடிந்தால் சிறப்பு!
ஆனால் இதுவரை திருமணத்தால் யார் நிறைவடைந்திருக்கிறார்கள்?

வாழ்விலிருந்து ஒருபோதும் தப்பிக்காதே. தப்பிப்பதே தற்கொலை. அதனுடைய வெற்றிகளிலும் அதனுடைய தோல்விகளிலும் வாழ்க்கையை வாழ்.

தோல்வி மற்றும் வெற்றி இரண்டும் தேவைதான். மலர்களும், முட்களும், எல்லாவற்றையும் கடந்ததுதான் ஒருவர் பிரபஞ்சத்தின் கோயிலை அடைகிறார். ஒருபோதும் பிரபஞ்சத்திடமிருந்து எதையும் கேட்காதே ஏனெனில் கேட்பதற்கும், அன்பு செலுத்துவதற்குமிடையில் ஒரு முரண்பாடுள்ளது. அன்பு கொடுக்க மட்டுமே செய்கிறது - மேலும் எல்லாவற்றையும் கொடுக்குமொரு அன்பு தன்னைக்கூடக் கொடுக்குமொரு அன்பு பிரார்த்தனைத் தன்மையாக மாறுகிறது.

**பின்குறிப்பு**: நான் ஆஸ்மருக்கு வரும்போது நீயும் வா. உன்னுடைய கேள்விகள் நீ எனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பொழுது எளிதாக பதிலளிக்க முடியும்

என்ற வகையைச் சார்ந்தவை. ஏனெனில் பிறகு எதுவும் சொல்லப்படாமல் ஏராளமானது சொல்லப்பட்டுவிடும்.

17.

அன்பு.

நீ காதலின் கோயிலில் நுழையப்போகிறாய். நானங்கு இருக்க முடியவில்லை. இது எனது இதயத்தை வலிக்கச் செய்கிறது. ஆனால் என் நல்வாழ்த்துகள் கண்டிப்பாக அங்கிருக்கும். நீ அவைகளின் இருப்பை காற்றினில் உணருவாய். உன்னுடைய வாழ்க்கை அன்பின் வானத்தில் சுதந்தரமானதொரு வாழ்க்கையாய் இருக்கட்டும். என்பதே பிரபஞ்சத்திடம் நான் வேண்டுவது.

பல சமயங்களில் காதலின் பெயரால் சார்புநிலை அமைகிறது. மேலும் காதல் இறந்துவிடுகிறது. காதலின் மலர்கள் சுதந்திரத்தில் மட்டுமே மலரமுடியும். எனவே உனது திருமணமொரு திருமணமாக விட்டுவிடாதே. அது காதலாகவேயிருக்கட்டும். திருமணத்தின் பெயரால் எத்தனை காதலின் சமாதிகள் எழுந்துவிட்டன. ஒருவர்மீது ஒருவர் உரிமை கொள்ளாதீர்கள். மாறாக.... ஒருவருக்கொருவர் விடுதலையளியுங்கள். ஏனெனில் காதல் விடுவிக்கிறது. சங்கிலியிடுவது காதலல்ல.

அங்கிருக்கும் அனைவருக்கும் எனது மரியாதைக்குரிய வாழ்த்துக்கள்.

அன்பு.

உனது கடிதங்கள் வந்து சேர்ந்துவிட்டன. உனது ஆத்மாவின் பாடல்களுடனும் இசைக் கோர்வைகளுடனும் இசையாலும் நிறைந்து நீயே இங்கு வந்ததுபோல வந்து சேர்ந்துவிட்டன.

நீ வருவதை என்னை நோக்கி ஆடுவதை நீயொனக்குள் மறைந்துவிட
வருவதை நான் பார்க்கிறேன்.உன்னுடைய நுண்ணிய உடல் இந்த முறையில்
பலமுறை எனக்கருகில் வந்துள்ளது. உனக்கிது தெரியாதா?
உனக்கிது தெரியும். உனக்கிது கண்டிப்பாக தெரியும். உனக்கிது மிகவும்
நன்றாகவே தெரியும்.

அங்கிருக்கும் அனைவருக்கும் எனது அன்பு.

19.

அன்பு,

உன்னுடைய கடிதம் கிடைக்கப்பெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

.

வீட்டைத் தவறவிடுதல் இயல்பானதுதான் - நீ எல்லா இடங்களையும் உனது வீடாக மாற்றக் கற்றுக்கொள்ளும் வரை - அது உன்னை சித்ரவதை செய்கிறது.

இந்தக்கலை கற்றுக்கொள்ளத் தகுதியானதுதான். இப்போது நீ அங்கிருக்கும் வரை அந்த இடத்தை உனது வீடாக ஏற்றுக்கொண்டு வாழ்.

இந்த முழு பூமியும் நமது வீடு - மேலும் உயிரனங்கள் அனைத்தும் நமது குடும்பம். மீதம் நாம் சந்திக்கும் பொழுது.

அங்கே எல்லோரையும் நான் விசாரித்ததாகச் சொல்.

20.

அன்பு,

உன்னுடைய கடிதம் கிடைக்கப் பெற்றதில் மிகவும் மகிழ்ச்சி.

புதிய அனுபவங்களின் பெயர்தான் வாழ்க்கை - தினமும் புதியதை அனுபவிக்கும் திறனுடைய ஒருவர்தான் உயிரோட்டத்தோடு இருக்கிறார் - எனவே இந்த வெளிநாட்டை நேசத்தோடு அணுகு, புதியதைக் கற்றுக்கொள், தெரியாததை தெரிந்துகொள், அறிந்துகொள். அறியாதவற்றுடன் அறிமுகம் செய்துகொள். கண்டிப்பாக இதுவெல்லாவற்றிலும் நீ மாறியாக வேண்டும். பழைய பழக்கங்கள் இறந்துபோகும். எனவே அவை இறந்து போகட்டும். உன்னை மாற்றிக்கொள்ள பயப்படாதே. மாற்றம் எப்போதும் நல்லதுதான். தேங்குதல் எப்போதும் கெடுதல்தான் - மேலும் எப்போதும் கடந்தகாலத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பது.... அபாயகரமானது - ஏனெனில் அது எதிர்காலம் உருவாவதைத் தடுக்கிறது.

வாழ்க்கை எப்போதும் நமக்கு முன்னாலுள்ளது. பின்னாலல்ல - எனவே தொலைவில், மிகத்தொலைவில் முன்னால் பார். கனவுகளில் வாழ். நினைவுகளிலல்ல. அங்கு என்னயிருந்தாலும் அதனை கண்டனத்துடன் பார்க்காதே. அந்த வகையில் பார்ப்பது தவறு. நீ எங்கிருந்தாலும் எப்போதும் அழகானவற்றை, நல்லவற்றைப் பார். மேலும் அழகு... எல்லா இடங்களிலும் எல்லா மனிதர்களிடமும் உள்ளது. தேவைப்படுவதெல்லாம் அதைப்பார்ப்பதற்குரிய கண்கள் மட்டுமே. நாம் எதைப் பார்க்கிறோமோ அதுவாகவே மாறிவிடுகிறோம் என்பதை

நினைவில்கொள். நல்லதைப்பார்த்தால் நல்லவர்களாக தீயதைப்பார்த்தால் தீயவர்களாக. எனவே தீயவைகளைப் பார்க்காதே - அந்த இந்தியப் பழக்கத்தை விடுவது உனக்கு நன்மையாக இருக்கும். தீமையென்று எதுவுமில்லை தீயபார்வை மட்டுமேயுள்ளது என்பதை நானறிவேன்.

அங்கிருக்கும் அனைவருக்கும் எனது அன்பு.

21.

அன்பு,

உனது கடிதங்கள் கிடைக்கப்பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1. மதத்திற்கு பிறப்போடு எந்த சம்பந்தமுமில்லை - அவை சம்பந்தப்பட்டவையென்று கூறுபவர்கள் மதத்தை தசை, எலும்பு, மஜ்ஜைக்கு மேல் மதிக்கவில்லை. மதம் ஆத்மாவின் இயல்பு. ஆத்மாவிற்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை - அதனால்  சுய இயல்பைத்தேடு. அது மட்டுமே மதம்.

பிறப்போடு சம்பந்தப்பட்டிருக்கும் பிணைப்புகளை தவிர்த்துவிடு. ஜைனம், புத்தம், முஸ்லீம், கிறிஸ்துவம். மதத்தன்மைக்குரிய பாதையில் மதத்தைவிட பெரிய தடைகள் ஏதுமில்லை. மதங்களுக்கு விடைகொடு. எனவே

மதத்தன்மை உனக்குள் நுழையட்டும். மதங்களுக்கு மட்டுமே பெயர்களும், விளக்கங்களும் உள்ளன. மதத்தன்மை பெயரற்றது. தனித்தன்மை வாய்ந்ததை பெயரிடத் தேவையில்லை.

2. உபவாசம் என்றால் பட்டினி கிடப்பதல்ல. உபவாசம் என்பதன் பொருள் உனக்கருகிலிருப்பது. கண்டிப்பாக உனக்கருகில் இரு - ஆனால் உபவாசத்தை பட்டினி கிடப்பது என்று நினைத்துவிடாதே. இல்லாவிடில் நீ உணவுக்கருகில் மட்டுமே இருப்பாய் உனக்கருகில் இருக்க மாட்டாய்.

ஆமாம் சிலசமயங்களில் நீ முழுவதுமாக உணவைப்பற்றி மறந்துவிடக்கூடும் அது சாத்தியம் - ஏனெனில் நீ உனக்குள் மூழ்கியிருப்பாய் - ஆனால் அது முற்றிலும் வேறுபட்ட விஷயம். அப்படிப்பட்ட கணங்களை முன்கூட்டியே திட்டமிட முடியாது.

அப்படிப்பட்ட கணங்கள் உன்னிடமிருந்து எந்த முயற்சியும் இல்லாதபோது மட்டுமே வரும்.

3. ஒழுக்கம் ஒரு ஆன்மீகப் பயிற்சியல்ல. நீயதைப் பயிற்சி செய்தால் கூட நீயதைப் பெற முடியாது - ஏனெனில் ஒழுக்கம் ஒரு மறைமுக நிகழ்தல். ஒரு விழிப்புணர்வுடன் கூடிய புத்திசாலித்தனத்தின் நிழலது. விழிப்படைந்துவிட்டபின் ஒழுக்கம் வந்துவிட்டதென்பதை

நீ அறிவாய், நீ விழிப்படைவதற்கு முன் ஒழுக்கத்தைக் கொண்டுவர முயற்சி செய்தால் ஒழுக்கமென்ற பெயரில் அடக்குதலை மட்டுமே நீ கொண்டு வருவாய். அடக்குதலென்பது அனுபவித்தல் தலைகீழாக நிற்பதுவேயாகும். அது அனுபவித்தல் தலைகீழாக திரும்பியதைத் தவிர வேறொன்றுமில்லை. அதனால் ஏமாற்றப்பட்டுவிடாதே.

4. அனுபவித்தலோ, அடக்கிவைக்கப்பட்ட மனமோ தேவையில்லை - ஏனெனில் இரண்டுமே ஒரு உறக்க நிலைதான். தேவைப்படுவதொரு விழிப்பு பெற்ற மனம். ஏனெனில் ஒரு விழிப்பு பெற்ற மனமே ஒருவரின் இருப்புத்தன்மையின் கதவு.

5. கண்டிப்பாக கோவிலுக்குச் செல் - ஆனால் செங்களாலும், கற்களாலுமான ஒன்றிற்கல்ல. உண்மையான கோவில் இருப்பில் அறியப்படுகிறது. உண்மையான கோவில்  உள்ளேயுள்ளது. உள்ளே செல்... நீ கோவிலுக்குச் சென்றுவிட்டாய்.

6. அறிவுக்கும், காலத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? விடுதலைக்கும், யுகத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

அறிவு காலத்தை கடந்தது. மேலும் விடுதலை நித்தியமானது. எனவே நேரமும், யுகமும் அவைகளுக்கொரு தடையல்ல. இருட்டின் யுகம், கலியுகம் - அல்லது நல்லநேரம் இவையெல்லாம் அவைகளுக்கொரு

தடையல்ல. பிணைப்பு எப்போதும் சாத்தியமென்றால் விடுதலையும் எப்போதும் சாத்தியம்.

7. குடும்ப உறுப்பினர்கள் கண்டிப்பாக உனது வழியில் வருவார்கள். பிணைப்பிலிருக்கும் மக்களால் பிணைப்பிலிருந்து ஒருவர் வெளிவருவதைப் பார்க்க சகிக்க முடியாது - ஆனால் அவர்களிடம் ஒருபோதும் கோபப்படாதே. மாற்றாக எப்போதும் அவர்களிடம் பரிதாபம் கொள். அவர்கள் பரிதாபத்திற்கு மட்டுமே உரியவர்கள். அவர்கள் உன்னையொரு முட்டாளென்று அழைத்தால் மகிழ்ச்சியாக அனுபவி. இறுக்கமடையாதே. அவர்களுடைய செயல்களனைத்தையும் விளையாட்டாய் எடுத்துக்கொள்.

நீ சரியாகவும், உண்மையாகவும் உணர்பவற்றை பயமின்றி செய்து கொண்டேயிரு. மதத்தன்மையின் பாதை ரோஜாக்களால் ஆனதல்ல. ஆனால் முட்களைத் தாங்கிக்கொள்ளும் திறனுடையவர்கள் முடிவில் நித்திய மலர்களை பெறுபவர் ஆகிறார்கள்.

அங்கிருக்கும் அனைவருக்கும் எனது அன்பு.

அன்பு.

ஒவ்வொரு காலத்திலும் மதம் மறுபிறப்பெடுத்தாக வேண்டும். உடல்கள்.... எல்லாவிதமான உடல்களும் வயதாகி இறக்கின்றன மதக்குழுக்கள் மதங்களின் இறந்த உடல்கள். அவர்களுடைய ஆத்மா அவர்களை விட்டு வெகுகாலத்திற்கு முன்பே போய்விட்டது. அவர்களுடைய மொழிகள் காலாவதியாகிவிட்டன. அதனால்தான் அவை இப்போது இதயத்தைத் தொடுவதில்லை. அவைகளின் எதிரொலி மனித ஆத்மாவில் இப்போது எதிரொலிப்பதில்லை.

ஒருமுறை டாக்டர் ஜான் A. ஹட்டன் ஒரு மதகுருமார்களின் குழுவில் பேசிக்கொண்டிருந்த போது “ஏன் மதத்தலைவர்களின் போதனைகள் மிகவும் உயிர்துடிப்பற்றவையாகவும் மந்தமாகவும் உள்ளது?“. என்று கேட்டார். யாரும் எழுந்து நின்று பதிலளிக்காதபோது, அவரே "அவையெல்லாம் மந்தமாகவுள்ளன. ஏனெனில் “மத போதகர்கள் யாரும் கேட்காத கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள்“, என்று பதிலளித்தார்.

மதத்தன்மை நித்தியமானது - ஆனால் அதன் உடல் எப்பொழுதும் சமகாலத்துடையதாக இருக்க வேண்டும். உடல் நித்தியமானதல்ல. அது அப்படியிருக்கவும் முடியாது, மதத்தின் உடலும்கூட.

அன்பு.

மதக்குழுக்களிடமிருந்து அரசியல் விடுதலையடைந்தால் அது நல்லது. ஆனால் மதத்தன்மையிலிருந்து விடுதலையடைவது அரசியலுக்கு நல்லதல்ல.

மதத்தன்மை வாழ்வின் இதயத்துடிப்பு. அரசியல் வாழ்வின் வெளிவட்டத்தைத் தவிர வேறொன்றுமில்லை. மேலும் எப்படி மையமில்லாமல் வெளிப்புறமிருக்க முடியாதோ அதைப்போல மதத்தன்மையில்லாமல் அரசியல் கௌரவமானதாக இருக்க முடியாது.

ஆனால் ஆமாம், கௌரவமற்ற அரசியல் மதத்தன்மையில்லாமல் இருக்கமுடியும். மேலும் ஒருவேளை இன்று அரசியல் அவ்வாறாக குறைக்கப்பட்டுவிட்டதோ என்னவோ.

நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வெற்றிகரமான வழக்கறிஞர், ஒரு வெற்றிகரமான திருடன் மேலும் ஒரு வெற்றிகரமான அரசியல்வாதி ஒரே நேரத்தில் சொர்க்கத்தின் வாயிலை அடைந்தார்கள். அவர்கள் மூவரும் நண்பர்கள். அவர்கள்  தங்களது வாழ்க்கையை பலமுறை பல சூழ்நிலைகளில் சந்தித்திருக்கிறார்கள். எனவே அவர்கள் இறப்பில் சந்திக்க வேண்டுமென்பதில்

ஆச்சரியம் ஏதுமில்லை.

ஜெயின்ட் பீட்டர் அவர்களிடம்,“ நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் எத்தனைமுறை பொய் சொல்லியிருக்கிறீர்கள்?உண்மையை கூறுங்கள்!" என்று கேட்டார். திருடன், "மூன்று முறை" என்று கூறினான். ஜெயின்ட் பீட்டர் தண்டனையாக அவனை சொர்க்கத்தை மூன்றுமுறை சுற்றிவருமாறு கூறினார். வழக்கறிஞர், "முன்னூறு முறை" என்று கூறினார் வழக்கறிஞரும் முன்னூறு முறை சொர்க்கத்தை சுற்றிவந்த பின்பே சொர்க்கத்திற்குள் அனுமதிக்கப்பட்டார். ஆனால் ஜெயின்ட் பீட்டர் அரசியல்வாதிக்காக திரும்பியபொழுது அவரை காணவில்லை. அருகில் நின்றிருந்த வாயிற்காப்போன் ஜெயின்ட் பீட்டரிடம் அவர் தன்னுடைய மிதிவண்டியை எடுத்துவர போயிருப்பதாக தெரிவித்தார்.

24.

அன்பு.

நாம் என்ன சொல்கிறோமோ அதிலிருந்து மக்கள் கற்றுக் கொள்வதில்லை. ஆனால் நாம் என்னவாகயிருக்கிறோம் என்பதைப் பார்த்து மட்டுமே கற்றுக்கொள்கிறார்கள். வார்த்தைகள் காதுகளை மட்டும் சென்றடைகின்றன. அல்லது அதிகபட்சமாக நமது மனங்களை சென்றடைகின்றன. ஆனால்

ஒரு மனிதனுடைய தனித்தன்மையின் எதிரொலி அடியாழம் வரை ஊடுருவுகிறது. புல்டன் சீன் முன்னேற்பாடு ஏதுமின்றி அவருடைய சொற்பொழிவுகளை ஆற்றுவது வழக்கம். அவருடைய சில நண்பர்கள் அதன் ரகசியமென்ன என்று கேட்டபோது, அவர், ஒரு வயதான பெண் எழுதப்பட்ட உரையிலிருந்து ஒருவர் படித்துக் கொண்டிருந்ததை பார்த்துவிட்டு இந்த மனிதன் தன்னுடைய சொந்த பேச்சையே ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாதபோது, நாங்கள் அதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எங்ஙனம் எதிர்பார்க்கிறான் என்று கேட்டாள். அதனால்தான் என்றார்.

உண்மையில் நாம் இல்லாதவகையில் மற்றவர்கள் இருக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. மேலும் நாம் எப்படியிருக்கிறோமோ அப்படி மற்றவர்கள் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் நாம் எப்படியிருக்கிறோமோ - அது அதன் இயல்புபடியே தொற்றிக்கொள்ளக்கூடியது,.

அன்பு.

நாம் வாழ்வென்று அழைப்பது உறக்கத்தை தவிர வேறொன்றுமில்லை. அனைத்தும் தூக்கத்திலேயே செய்யப்படுகிறது. இல்லாவிடில் மனிதன் என்ன செய்கிறானோ அதை செய்வது சாத்தியமற்றது. விழிப்பு நிலையில் உனக்கொரு நரகத்தை உருவாக்கிக் கொள்வது சாத்தியமற்றது.

ஒருநாள் காலையில் மதபோதகர் தேவாலயத்தில் ஒரு மனிதன் ஆனந்தமாக தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறியவேண்டும் என்பதற்காக போதகர், "உங்களில் சொர்க்கத்திற்கு செல்ல விரும்புகிறவர்கள் தயவுசெய்து எழுந்து நிற்கவும்" என்று கூறினார். தூங்கிக் கொண்டிருந்த மனிதனைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். அனைவரும் திரும்பவும் அமர்ந்த பிறகு "இப்போது உங்களில் நரகத்திற்கு செல்ல வேண்டும் என விரும்புபவர்கள் எழுந்து நில்லுங்கள்" என்று கூறினார். தூங்கிக் கொண்டிருந்த மனிதன் கலவரமடைந்து எழுந்து நின்றான். ஆனால் அவன் தான் மட்டுமே எழுந்து நிற்பதைப் பார்த்து போதகரிடம், "நாம் எதற்காக வாக்களிக்கிறோம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நீங்களும் நானும் சிறுபான்மையாக இருக்கிறோம்" என்ற கூறினான்.

அன்பு.

வாழ்க்கை மனதினொரு விளையாட்டு. மகிழ்ச்சி, மகிழ்ச்சியற்ற தன்மை அமைதி, ஓய்வற்றதன்மை அனைத்தும் மனதின் நீட்சிகளே.

வெயில்காலத்தில் சளி பிடித்துக்கொள்ளும் மனிதன் ஒருவன் இருந்தான். ஒரு மருத்துவர் அவனை பரிசோதித்து அவனுடைய உடலில் எந்தக் குறையும் இல்லை என்பதை கண்டறிந்தார். அவர் நோயாளியிடம் தினமும் வெப்பமான சூரியஒளி உனது தலையில் விழுவதாக நீ கற்பனை செய்து கொள்ள வேண்டும். மேலும் குளிர்காலத்தில்கூட நீ கதகதப்பாக உணர்வாய். நீ சளி பிடிப்பதைப் பற்றி கவலைப்பட தேவையில்லை என்று அறிவுரை கூறினார். ஆனால் ஒரு வாரத்திற்கு முன்பாகவே அந்த மனிதனுடைய மனைவி மருத்துவரை அழைத்து மிகவும் பதட்டமான குரலில் தயவுசெய்து விரைந்து வாருங்கள். எனது கணவர் மிகவும் உடல்நலமில்லாமல் இருக்கிறார் என்று கூறினாள். மருத்துவர் என்ன நடந்ததென்று கேட்டார். வீட்டிற்குள் அமர்ந்திருந்தபோது அவருக்கு திடீரென வெயிலால் மயக்கம் வந்துவிட்டதென்று அவள் பதிலளித்தாள்.

அன்பு.

முனைகள் எப்போதும் பதட்டம்தான். முனைகளற்று இருந்தால் ஓய்வுத்தன்மை. ஆனால் மனிதமனம் முனைகளிலேயே வாழ்கிறது.

நண்பன் அல்லது எதிரி ஆனால் ஒருபோதும் நடுநிலையில் இருப்பதில்லை. அனுபவிப்பவர் அல்லது துறப்பவர் ஆனால் ஒருபோதும் நடுநிலை வகிப்பதில்லை. இந்தமுனை அல்லது அந்தமுனை ஆனால் ஒருபோதும் நடுவில் இருப்பதில்லை. மனம் இடைநிலை என்பதையே அறியாததைப் போல! இதுதான் மனிதனின் வேதனை. இதுதான் மனிதனின் நரகம். நடுவில்தான் சொர்க்கமுள்ளது. இரண்டு நரகங்களுக்கு நடுவில், இரண்டு முனைகளுக்கு நடுவில், நடுநிலையே சொர்க்கம். நடுநிலையே விடுதலை.

ஒரு மனிதன் ஜென்மாஸ்டர் ஹிக்கியிடம், "என்னுடைய மனைவி மிகவும் கஞ்சத்தனமாக இருக்கிறாள். என்னுடைய வீடு ஒரு நரகமாக மாறிவிட்டது. தயவுசெய்து எனக்காக ஏதாவது செய்யுங்கள்" என்று கேட்டான்.
ஹிக்கி போய் அவனுடைய மனைவியைப் பார்த்து அவளிடம் தனது மூடப்பட்ட கையைக் காட்டினார். இயல்பாக அந்தப் பெண் "இதனால் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?" என்று கேட்டாள். ஹிக்கி, "என்னுடைய கைகள் எப்போதும் இப்படியேயிருந்தால் அவற்றை நீ என்னவென்று கூறுவாய்?" என்று

கேட்டார். அந்தப்பெண் சிரித்துவிட்டு "உங்களுடைய கை உருக்குலைந்து சிதைந்து விடும்!" என்றாள். பிறகு அவர் கையை அவளுடைய முகத்திற்கு நேராக கொண்டுவந்து அவருடைய கையை முழுவதுமாக விரித்து, "இது எப்போதும் இப்படியேயிருந்தால் என்னவாகும்?" என்று கேட்டார். அந்தப் பெண் சிரித்துவிட்டு "இன்னொருவிதமான உருக்குலைவு" என்று கூறினாள். இப்போது சிரிப்பது ஹிக்கியின் முறை. அவர் சிரித்தவாறே கிளம்ப தொடங்கினார்.
அந்தப்பெண் "இதற்கென்ன பொருள்?" என்று கேட்டாள். ஹிக்கி, "இப்போது நான் சொல்ல ஏதுமில்லை. இதுவரை நீ புரிந்து கொண்டுவிட்டால் நீ எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விடுவாய். எல்லா புனித புத்தகங்களும் எல்லா விழிப்புணர்வு பெற்றவர்களும் இதை விட அதிகமாக எதையும் சொல்வதில்லை. முனைகள் அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில் முனைகள வக்கிரமானவை. முனைகள் உனது இயல்பல்ல. மேலும் உனது இயல்பில் இருப்பதே மத்த்தன்மை" என்று கூறிவிட்டு ஹிக்கி சென்றுவிட்டார்.
மேலும் அந்தப்பெண் நிலைமாற்றமடைந்துவிட்டாள்.
அந்தப்பெண் புத்திசாலி.
இத்தகைய குறிப்புகளை புரிந்து கொள்பவர்கள் புத்திசாலிகள். ஆனால் புத்திசாலிதனமுடைய மக்கள் இந்த உலகத்தில் மிகச் சிலரே.

.

28.

அன்பு.

ஆத்திகம் ஒரு கோட்பாடல்ல. ஆத்திகம் ஒரு சாஸ்திரமல்ல. ஆத்திகம் வாழ்க்கையைப் பார்க்கும், வாழ்க்கையை வாழும் ஒருமுறை. அழகைப் பார்க்கும் அழகை வாழும் ஒருமுறை. சத்தியத்தைப் பார்க்கும் சத்தியத்தை வாழும் ஒருமுறை தெய்வீகத்தன்மையை பார்க்கும் தெய்வீகத்தன்மையை வாழும் ஒருமுறை.

ஒருநாள் வெயிட்பீல்ட், "கடவுள் எதை உருவாக்கியிருந்தாலும் அது மிகச் சரியானது. அவருடைய படைப்புகளில் தவறுகளேயில்லை" என்றார். இதைக்கேட்டவுடன் கூட்டத்திலிருந்து ஒரு கூனன் எழுந்து, "என்னைப்பற்றி உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டான். கேள்வி தேவாலயத்தில் பலத்த மௌனத்தை உருவாக்கியது. வெயிட்பீல்ட் அவரை மிகவும் கனிவுடன் பார்த்து "உங்களைப்பற்றி எனது கருத்து என்னவென்றால் தவறுகளில்லாத ஒரு கூனனை கடவுள் உருவாக்கியுள்ளார் என்பதுவேயாகும்." என்றார்.

29.

அன்பு.

ஒவ்வொரு கணமும் வாழ். உனது வழியில் என்ன வேலை வந்தாலும் அதனைச் செய். நாளை என எதையும் விட்டுவிடாதே.  தள்ளிப்போடும் பழக்கம் தற்கொலைக்கு ஒப்பானது. நாளை எங்கேயுள்ளது?

என்னவோ அது இன்று. எதுவோ அது இப்போது. இப்போது அது வாழப்பட வேண்டும். இந்தக் கணம் வாழப்பட வேண்டும் கணம் மட்டுமே உண்மை. கணத்தை வாழும் திறனுடையவர் எவரோ அவரே நித்தியத்தை அடைகிறார். வாழப்பட்ட கணம் நித்தியமாகி விடுகிறது. வாழப்படாவிட்டால் நித்தியம் கூட கணநேரம்தான்.

30.

அன்பு,

இந்த பயத்தை விட்டுவிடு. ஏனெனில் நீ பயத்தைப் பிடித்துக் கொள்ளும் கணத்தில் அது அதிகரிக்கிறது. அதனை பிடித்துக்கொள்வது அதனை வளப்பதாகும். ஆனால் அதனுடன் சண்டையிடுவது என்பதல்ல. சண்டையிடுவதும் அதனை பிடித்து வைத்துக் கொள்வதேயாகும். பயம் இருக்கிறது. அதனை வெறுமனே அறிந்துகொள். அதனிடமிருந்து விலகியோடாதே. அதனிடமிருந்து தப்பிக்காதே.

வாழ்க்கையில் பயமிருக்கிறது, வாழ்க்கையில் பாதுகாப்பற்றத் தன்மையிருக்கிறது, மரணம் இருக்கிறது, வெறுமனே அதை அறிந்துகொள். அது அப்படித்தானிருக்கிறது. இவையனைத்தும் வாழ்க்கையின் நிதர்சனங்கள் நீ எங்கு ஓடுவாய்? நீ எப்படி தப்பிப்பாய்? இதுதான் வாழ்க்கையின் வழி. அதனை ஏற்றுக்கொள்ளுதல், அதனை இயல்பாக ஏற்றுக்கொள்ளுதல் பயத்திலிருந்து விடுதலையடைவதாகும்.

பயம் ஒருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், பிறகு அது எங்கேயிருக்கிறது? இறப்பு ஒருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால்,பிறகு அது எங்கேயிருக்கிறது? பாதுகாப்பற்றத்தன்மை ஒருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், பிறகு அது எங்கேயிருக்கிறது? வாழ்வின் முழுமையை ஏற்றுக் கொள்ளுதலையே நான் சந்நியாசம் என்றழைக்கிறேன்.

31.

அன்பு,

உனது தீர்மானத்திற்கு வழியில் தடையாக வருபவற்றை பிரபஞ்சத்திடமிருந்து வரும்பரிசுகள் என்றெடுத்துக்கொள். ஏனெனில் அவையில்லாமல் உன்னுடைய தீர்மானம் தீவிரமடைய வாய்ப்பேயில்லை.

விவேகமுடையவர்களுக்கு வழியிலிருக்கும் பாறைகள் தடைகளல்ல.... படிகற்கள். முடிவில் எல்லாமும் உன்னைப் பொறுத்தேயிருக்கிறது. அமுதம் விஷமாக மாறமுடியும். விஷம் அமிர்தமாகவும் மாறமுடியும். மலர்கள் முட்களுக்கிடையே மறைந்துள்ளன. விலகியோடுபவன் தேவையில்லாமல் மலர்களை தவறவிட்டுவிடுகிறான். சுரங்கங்களுக்குள் வைரங்கள் மறைந்துள்ளன. ஆனால் நீ முதலில் அவைகளை தேடும்பொழுது கற்களும், கூழாங்கற்களும் கைகளுக்கு கிடைக்கின்றன. நீ மனமுடைந்து விட்டால் நீ அந்த வைரங்களை கண்டறிவதை எப்போதைக்குமாக இழந்துவிடுகிறாய். எல்லாக்கணமும் முக்கியமானதே. காலம் ஒருபோதும் பின்நோக்கி நகர்வதில்லை. மேலும் இழக்கப்பட்ட வாய்ப்புகள் வாழ்நாள் முழுமைக்கும் இழக்கப்பட்டதாகவே ஆகிவிடுகின்றன. இருட்டு அடர்த்தியானதாக இருக்கும்பொழுது விடியல் பக்கத்திலிருப்பதை அறிந்துகொள்.

32.

அன்பு,

ஒரு மனிதனின் ஆளுமையில் பல மையங்களுள்ளன. ஆனால் ஒரு நூல்கண்டு சிக்கிக்கொள்வதைப் போல அவனுக்குள் எல்லாமும் குழம்பியுள்ளன. மனம் காம மையமாக செயல்படுகிறது. மேலும் இதன் காரணமாக மூளையில் காமம் வக்கிரமாக இருந்துள்ளது.

எனக்கொரு கதை நினைவுக்கு வருகிறது.

நெப்போலியனின் அரசவையிலிருக்கும் ஒரு அமைச்சர் ஒரு பயணத்திலிருந்து சீக்கிரமாகத் திரும்பினார். வீட்டிற்கு வந்து அவருடைய மனைவி தலைநகரத்தின் தலைமைபூசாரியின் கரங்களிலிருப்பதைப் பார்த்தார். ஒருகணம் அவர் திகைத்துவிட்டார். ஆனால் பிறகு அவர் மிகவும் நளினமாக சாளரத்திற்குச் சென்று அங்கு நின்று வெளியிலிருக்கும் மக்களை ஆசீர்வதிக்கத் தொடங்கினார். அவருடைய மனைவி பதட்டமான குரலில் "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டாள். அவர் "தலைமைபூசாரி என்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார், நான் அவருடைய வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

மனதின் மையத்தில் இப்படிப்பட்ட விஷயங்கள் நடப்பது சரியல்ல. ஆனால் அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இயல்பாகவே அதன் விளைவை எல்லா இடங்களிலும் பார்க்க இயலும். புத்திசாலித்தனம் குறைவாகவுள்ளது. தன்னுணர்வு குறைவாகவுள்ளது. பைத்தியக்காரத்தனம் அதிகமாகவுள்ளது. மனிதன் ஒரு பைத்தியக்காரத்தனமான விலங்காக மாறிவிட்டான். மனம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமென்றால் ஒவ்வொரு மையங்களும் அதனுடைய சுயவேலையைச் செய்யவேண்டும். மற்றவைகளின் வேலையைச் செய்யக்கூடாது. மனதின் மையங்களனைத்தும் அவைகளிடத்திலேயே

வேர்கொண்டிருக்கும் பொழுது, பிறகு மனிதனும் அவனிடத்தில் வேர்கொண்டிருப்பான். தன்னிடத்தில் வேர்கொண்டிருப்பதே ஆரோக்கியமாக இருப்பதாகும்.

33.

அன்பு,

விடியல் வரப்போகிறது. இப்போது இரவின் உளறல் கவிதைகளை விட்டுவிட்டு கதிரவனை வரவேற்கத் தயாராகு. கடைசி காலை நட்சத்திரம் மறைந்து கொண்டிருக்கிறது. கடந்தகாலத்தை மறந்துவிட்டு உனக்கு முன்புள்ள எதிர்காலத்தைப் பார். உனது பிரார்த்தனைகள் கேட்கப்பட்டுவிட்டன. மேலும் தெய்வீகக் கோவிலின் கதவுகள் திறக்கப்போகின்றன. அவைகளை கவனி.

உனது கண்களை அங்குமிங்கும் அலையவிட வேண்டாம். உனது காதுகளை வேறெதையும் கேட்கவிடாதே. உனது இதயத்தை வேறெதையும் கவனிக்கவிடாதே. பிரார்த்தனையால் நிறைந்து காத்திருத்தல். பிரார்த்தனையால் நிறைதல். காத்திருத்தல்.

34

அன்பு.

சென்று கொண்டேயிரு. அறிகுறிகள் நன்றாகவுள்ளன. தியானத்தின் கங்கை இன்னமும் கங்கோத்திரியில், உற்பத்தி ஸ்தானத்திலேயே உள்ளது. ஆனால் அது கடலையடைய தவிக்கிறது. மேலும் கடல் வெகுதொலைவிலில்லை. உனது தீர்மானம் முழுமையாக இருந்தால் - அந்த கங்கோத்ரி கடலையடைந்து விடும். தீர்மானமின்மையே கடலிலிருந்து இந்த தொலைவை உருவாக்குகிறது. உனது தீர்மானத்தை உறுதியாக்கு. ஏனெனில் சிதறடிக்கப்பட்ட தீர்மானம் தனை குறைக்கிறது. சேகரிக்கப்பட்ட சூரிய ஒளிக்கற்றைகள் நெருப்பாவதைப்போல சேகரிக்கப்பட்ட தீர்மானம் சக்தியாக மாறும். இந்த சக்தி அனைவரிடமும் உள்ளது. இந்த சக்தியொரு உள்ளார்ந்த உரிமை. அதனை எழுப்பு. அதனை சேகரி அதன் உறக்கமே இந்த உலகம். அதன் எழுதலே இறுதியான விடுதலை.

35.

அன்பு.

இல்லை, எதுவும் மனிதனின் கைகளில் இல்லை. ஏனெனில் மனிதன் கடலிலொரு அலை. அதனை கடலிலிருந்து பிரிக்கமுடியாது. எனவே சிந்திக்காதே. வெறுமனே இந்தக் கணத்தில் இப்போது, இங்கு வாழ். மேலும் ஒப்பிடாதே. இரு கணங்களை ஒப்பிடுவது பைத்தியக்காரத்தனம். கணங்கள் அணுவைப் போன்றவை.நீ ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட வழியேயில்லை. வாழ்தல் மட்டுமே ஒரே வாய்ப்பு. வாழ்தலைத் தவிர அறிதலுக்கு வேறு வழியேயில்லை. வாழ்தல் மட்டுமே அறிதல் என்பதை மட்டும் அறிந்துகொள்.

மேலும் பரவசம் மட்டுமே எல்லையற்றுள்ளது. ஏனெனில் ஒப்பிடும் ஒரு மனதை தவிர வேறெங்கும் பரவசத்திற்கு ஒரு குறையுமில்லை.

36.

அன்பு.

கொட்டு, வீசு. சாற்றை உன்னைச் சுற்றி ஊற்று. அதனை பிடித்து வைத்துக் கொள்ளாதே. பகிர்ந்துகொள். ஏனெனில் பகிர்ந்து கொள்ளப்பட்டால் அது வளரும். நீ பகிர்ந்து கொள்ளுதலை நிறுத்தியவுடன் அது இறந்துவிடும். எல்லா கலைகளின் தொடக்கமும் இந்த சாறை பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திலேயே இருக்கின்றன. வெளிப்பட வேண்டுமென்ற ஆர்வத்திலிந்த சாறு கலையாகிறது; ஒரு பாடலாகிறது; ஒரு சிற்பமாகிறது; ஒரு புத்தராக, ஒரு கபீராக, ஒரு கிருஷ்ணனாக மாறுகிறது.

சாற்றை கொட்டு, வீசு, ஊற்று. எழுந்தாலும், அமர்ந்தாலும் தூங்கினாலும், விழித்திருந்தாலும் அதனைப் பகிர்ந்து கொள். நிறுத்திவிட்டால் அச்சாறு விஷமாகிறது. பகிர்ந்தால் அது அமிர்தமாகிறது.

37.

அன்பு.

பிரபஞ்சத்தின் லீலை அற்புதமானது. எதிர்ப்பவர்களின் மூலமாகவே எனது வேலை நிகழ்கிறது. ஒருவேளை அது இல்லாமல் இது நிகழாது. அதனால்தான் என்னை எதிர்ப்பவர்கள் மீது நான் நன்றியுணர்வு மட்டுமே கொள்கிறேன். ஏசுவை சிலுவையில் அறைந்தவர்கள் சரியாக புரிந்துகொள்ளப்படவில்லை. ஏனெனில் அவர்களில்லாமல் போயிருந்தால் யாரும் யேசுவை அறிந்திருக்க மாட்டார்கள். யேசுவின் கோவில் எழுவதற்கு ஆதாரமாக இருந்த சிலுவை அவருடைய எதிரிகளால் உருவாக்கப்பட்டது. அய்யோ பாவம், அவர்கள்மட்டும் அதை அறிந்திருந்தால்.......!

ஆனால் யேசுவிற்கு கண்டிப்பாக இது தெரியும். யேசு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கு தெரியவில்லை என்று கூடக் கூறியுள்ளார்.

சாகரடீஸ் போன்ற மக்களுக்கு காரணமில்லாமல் விஷம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கண்டிப்பாக அதற்கு தகுதியானவர்கள்தான். அவர்களுக்கு அது தேவைதான். ஏனெனில் அந்த விஷமே அவர்களுடைய செய்திகளுக்கு அமிர்தமாக மாறிவிட்டது. அதனால்தான் தான் பிரபஞ்சத்து லீலை அற்புதமானதென்று கூறுகிறேன்.

அன்பு.

தன்னைப்பற்றி கவலைப்படுவதை நிறுத்திவிட்டவர்களைப் பற்றி பிரபஞ்சம் கவலைப்படுகிறது. ஆனால் நான் என்பது இருக்கும்வரை இந்த கவலைப்படுவது எங்கும் போகாது. உண்மையில் நானென்ற ஒன்றிருப்பதே உண்மையான பிரச்சனை. மற்ற அனைத்து பிரச்சனைகளும் இந்த அடிப்படை பிரச்சனையின் தூரத்து எதிரொலிகள். இந்த அடிப்படை ஆதாரத்தை புரிந்துகொள்ளாமல் மனிதன் தன் முழு வாழ்க்கையையும் இந்த ஆதாரத்தின் நிழல்களை அழிக்க முயற்சி செய்வதில் வீணாக்குகிறான். ஆனால் இராவணின் தலைகளைப் போல ஒருதலை விழுவதற்கு முன் புதிய தலையொன்று அங்கே வளர்ந்துவிடுகிறது.

நாம் வேர்களுக்கு தண்ணீர் விட்டுக்கொண்டே கிளைகளோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த முட்டாள்தனமே மனமாக இருக்கிறது. ஆனால் கிளைகளை கைகளில் கொண்டுள்ள ஒருவன் வேர்களை தேடவும் முடியும். கிளைகளோடு  சண்டை போடாதே. அதைவிட அவைகளின் உதவியோடு ஆழத்திற்குச் சென்று வேர்களைத் தேடு. அங்கு நீ கவலைப்பட ஏதுமில்லை. நானென்ற ஆணவ உணர்வு அங்கிருக்கும். ஆனால் அது மறைவதற்கு அதைப் பார்ப்பது மட்டுமே போதுமானது. இருளில் மறைந்திருக்கும்போது மட்டுமே அது வாழமுடியும்.

39.

அன்பு.

சத்தியத்தின் பாதையில் சில அல்ல பல முட்கள் உள்ளன. ஆனால் அங்குதான் அன்பு மற்றும் சத்தியத்தின் சோதனை கண்டறியப்படுகிறது. சத்தியத்தின் மலர்களைக் கண்டறிய விரும்புமொருவன் - இந்த முட்களின் மூலமாகவே செல்லவேண்டும். சத்தியம் ஒருபோதும் மலிவானதாக இருந்ததில்லை, சத்தியம் ஒருபோதும் மலிவானதாக இருக்காது. விலையைக் கொடு, பயப்படாதே. சிலுவைக்கப்பால் சிம்மாசனமுள்ளது.

40.

அன்பு.

தினசரி வேலைகளை வாழ்க்கையென தவறாக எடுத்துக்கொள்ளாதே. அவை வாழ்வதற்குத் தேவை, ஆனால் அவை வாழ்க்கையல்ல.

வழியை குறிக்கோளாக தவறாக புரிந்துகொள்ளும் ஒருவர் தேவையில்லாமல் வாழ்வின் மையத்திலிருந்து விழுந்துவிடுகிறார். யாரால் வெறுமையாக

இருக்க முடியவில்லையோ, யாருக்கு செய்வதற்கேதுமற்ற கணம் சுமையாகவும், சலிப்பாகவும் இருக்கிறதோ... அவன் வெறுமனே தன்னைத்தான் ஏமாற்றிக் கொண்டு தன்னையும் உண்மையையும் பார்ப்பதை தவிர்த்துக் கொள்கிறான். அவனுடைய வாழ்க்கையின் பயனற்ற தன்மையை தான் பார்ப்பதை அவன் அனுமதிப்பதில்லை. எதுவாயிருக்கிறதோ அதைப்பார்க்க அவன் தன்னை அனுமதிப்பதில்லை. இப்படிப்பட்டதொரு தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதில் உறங்குவது நோய்.

செய்வதற்கேதுமற்ற கணங்களில் ஆனந்தமாக இருப்பவர் மட்டுமே ஆரோக்கியமானவர். தன்னிலிருந்து தப்பிப்பதற்கு ஆர்வம் கொள்ளாதவர் மட்டுமே ஆரோக்கியமானவர். தன்னிலேயே ஆனந்தமாகவும் நிறைவாகவும் இருப்பவர் மட்டுமே ஆரோக்கியமானவர். எனவே கோபம் அங்கிருந்தால் அது குறித்து வருத்தப்படுவதில் எதுவும் வரப்போவதில்லை. கோபம் அங்கிருந்தால் அதனை வாழ். அதனை அறிந்துகொள். அதற்குள் செல். அதன் விஷத்தைக்குடி அதன் நெருப்பில் வேகு. கோபத்தின் நெருப்பை முழுமையாக அனுபவிப்பது அதனிலிருந்து வெளிவருவதற்கு வழிவகுக்கும். வருத்தப்படுவதம், விரும்புவதும் கோபத்தை என்றும் இருக்கச்செய்யும் கருவிகளே. வருத்தத்திற்கு பிறகு கோபத்திற்கு முன்பிருந்த நிலையைத்தவிர

வேறெதுவும் அடையப்போவதில்லை. அது கோபம் திரும்பவும் நிகழ்வதற்காகவே. வருத்தம் ஆணவம் தன்னை திரும்பவும்நிலை நிறுத்திக்கொள்ளுதலேயாகும். வருத்தத்தின் கண்ணீர் ஒரு தந்திரமான மனதின் வேலையிலிருந்து வருகிறது - இல்லாவிடில் திரும்பவும் கோபப்படுவது சாத்தியமற்றதாக இருக்கும். இல்லையா?

சொர்க்கத்தின் பாதை தவிர்க்கமுடியாமல் நரகத்தின் வழியாகவே செல்கிறது. ஆனால் தனது கண்களை மூடிக்கொள்ளும் திறமை படைத்தவர்கள் தாங்கள் நரகத்திலிருப்பதையும் அங்கேயே சிக்கிக் கொண்டிருப்பதையும் காண்கிறார்கள். உனது கண்களைத் திற. உன்னை ஏமாற்றிக்கொள்ளாதே. கோபம் அங்கிருந்தால் பிறகு நான் கோபமென்பதை அறிந்துகொள். இஙகுமங்கும் ஓடாதே. நிதர்சனத்தோடிரு. நெருப்பில் இரு, பிறகு நெருப்பிலிருந்து வெளியே, இந்த நரகத்திலிருந்து வெளியே குதித்துவிடு. ஆனால் மனிதனின் தந்திரமான மனம் நான் கட்டவனல்ல எனக்கு கோபம் வந்தால் - அது என்னை மீறி வருகிறது. தீயவை என்னுள் இல்லை. தீயவை சூழ்நிலைகளிலுள்ளது - அல்லது தீயவை அடுத்தவரிடமுள்ளது. அந்த தந்திரத்தைப் புரிந்துகொள்.

இந்த தந்திரம் மிகவும் விலையுயர்ந்தது. ஏனெனில் நரகம் இதன் அஸ்திவாரத்தில்தான் கட்டப்பட்டுள்ளது. கோபத்தைக் கவனி. அதன் காரணங்களை கண்டறிவதில் உன்னை ஈடுபடுத்திக்கொள்ளாதே.

அப்படிச்செய்தால் அதன்பொருள் நீ கோபத்தைப் பார்ப்பதை தவிர்க்கிறாய் என்பதே. கோபத்திலிருந்துஉன்னை காப்பாற்றும் ஒரு விஷயம் அதைப் பார்ப்பதுவேயாகும்.

மனிதன் தனியாக இருக்கிறான். முற்றிலும் தனியாக இருக்கிறான். அதனால்தான் அன்பிருக்கிறது. அதனால்தான் காதலிருக்கிறது. ஆனால் இந்த தேடுதல் கண்டிப்பாக தோல்வியடையும். மனிதன் அவனைத்தவிர வேறெதையும் கண்டறிய முடியாத காரணத்தால் அது கண்டிப்பாக தோல்வியடையும். இதுதான் அவனது விதி. இதுதான் வாழ்க்கையின் நியதி. அதனால்தான் மற்றவரைத் தேடுவதில் ஆர்வம் கொண்ட காதலும், பிரார்த்தனையும் எப்போதும் துன்பத்தில் முடிகிறது.

அவர்கள் இதைச் செய்யும்பொழுது அது யாருடைய குற்றமுமல்ல. அது வெறுமனே வாழ்வின் நியதிகளை அறியாத அவர்களின் அறியாமை. ஆனால் அவற்றை பொருட்படுத்தாததன் பலனை அவர்கள் அனுபவித்தாக வேண்டும்.

ஆமாம், இன்னொரு அன்பும் அங்கிருக்கிறது. இன்னொரு பிரார்த்தனையும் அங்கிருக்கிறது. ஆனால் அவை தன்னைத் தேடுவதன் மூலமும் தன்னை அடைவதன் மூலமும் வருகிறது. பிறகு அன்பு ஒரு வேட்கையல்ல. ,அது

கொடுத்தல். பிறகு பிரார்த்தனை ஒரு ஆசையல்ல - அது நன்றி நிறைந்துள்ள மனதின் நன்றியுணர்வு.

41.

அன்பு.

அது நானல்ல. ஆனால் பிரபஞ்சமே உன்னை ஏற்றுக்கொண்டு விட்டது. நான் இங்கு இருக்கிறேனா, பார், நான் எங்காவது தெரிகிறேனா? என்னை கைவிட்டுவிட்டதால் நான் ஒளியுடல் கொண்டவனாகி விட்டேன். அதனால்தான் கண்கள் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் என்னை கடந்து பார்க்க முடியும். உனக்கு அந்த கண்கள் உள்ளன. உன்னுடைய வெட்கத்தை விட்டுவிட்டு பார். நான் எங்காவது தெரிகிறேனா? என்னை பார்க்கமுடியாது. இப்போது பிரபஞ்சம் மட்டுமே உள்ளது. நான் நான் என்று கூறும்போது அதுவும் பிரபஞ்சத்தினாலேயே சொல்லப்படுகிறது. எனவே பல சமயங்களில் என்னுடைய நான் பணிவானதாக கூட தோன்றுவதில்லை. ஏனெனில் அது முற்றிலும் என்னுடையதல்ல. அது யாருடையதோ அதற்கு பணிவென்ன ஆணவமென்ன?

அன்பு.

குறியீடுகள் மிகவும் நன்றாக உள்ளன. அடையவேண்டிய இடம் வெகுதொலைவில் இல்லை. பிரார்த்தனையில் நிறைந்து முன்னால் சென்று கொண்டிரு. என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறதோ என்ன அனுபவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறதோ அவை அபூர்வமானவை. ஆனால் அவைகளைப் பற்றி யோசிக்காதே. அவைகளுக்கு வெறுமொரு சாட்சியாக இரு.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் எண்ணங்கள் ஒரு தடையாகும். ஆராய்ச்சி அதனை சேதப்படுத்தும், விளக்கம் அதனை அழித்துவிடும். பாதையில் உனக்கு தனித்தன்மை வாய்ந்த புரிதல்கள் வரும். ஆனால் ஒவ்வொரு முறையும் அவைகளை வெறுமனே பார்த்துவிட்டு முன்னால் நகர்ந்து கொண்டேயிரு. ஒருகணம் கூட நீ அவைகளுக்காக நிற்கக்கூடாது. இப்போதிலிருந்து இந்த புரிதல்களுக்காக நிற்காமலிருப்பதே உனது ஆன்மீக ஒழுக்கமாகும். வெறெதையும் செய்யத் தேவையில்லை. வெறுமனே ஒரு சாட்சியாக இரு. இந்த கணங்கள் பரிசோதிக்கக் கூடியவை. மேலும் நினைவில் கொள். ஆயிரத்தில் ஒருவர்தான் இந்த திசையில் பயணிக்கிறார்,

அவ்வாறு பயணிப்பவர்களில் ஆயிரத்தில் ஒருவர்தான் செல்வதை தொடர்கிறார், அவ்வாறு செல்வதை தொடர்பவர்களில் ஆயிரத்தில் ஒருவர்தான் சென்று சேர்கிறார். ஆனால் உன்னைப்பற்றி நான் முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளேன்.

43.

அன்பு.

சிந்தனைக்கு ஒரு வசிய சக்தியுள்ளது. அதனால்தான் நீ என்ன சிந்திக்கிறாயோ அதாகவே நீ ஆகிவிடுகிறாய். எண்ணங்களின் விதைகளில் கவனமாக இரு. ஏனெனில் நீ எதை விதைக்கிறாயோ, அதையே அறுவடை செய்வாய். நீ தைரியமில்லாதவன் என்று நீ நம்பினால் நீ அவ்வாறே ஆகிவிடுவாய். நினைவில் கொள். நீ அப்படியிருப்பதால் நீ அதை சிந்திப்பதில்லை. அதற்குபதிலாக நீ அப்படி இருக்கிறாய், ஏனெனில் நீ அப்படி இருப்பதாக நீ நினைக்கிறாய். மனிதன் தான் எப்படியிருப்பதாக நினைக்கிறானோ அப்படி இருக்கிறான். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து உருவங்களும் எண்ண பிரதிபலிப்புகளே. அதனால் எங்கு எந்த எண்ணமுமில்லையோ அங்கு யாருமில்லை. அதனால்தான் எண்ணமில்லாத இடத்தில் உருவமில்லாதது மட்டுமே இருக்கிறது. அதனால்தான் எண்ணமில்லாத

இடத்தில் குணமற்றது மட்டுமே இருக்கிறது. எண்ணமில்லாத தன்னுணர்வு தெய்வீகத்தன்மை.

நீ ஏதோவொன்றுக்கு உருவமளிக்க விரும்பினால் அதனை புத்திசாலித்தனத்துடன் கொடு. இல்லாவிடில் எதையும் கொடுக்காதே. நீ சிந்திக்க விரும்பினால் முழு கவனத்துடன் இரு. இல்லாவிடில் எந்தக் கவலையும் படாமல் எண்ணமற்ற தன்மைக்குள் குதித்துவிடு. நீ ஏதோவொன்றாக இருக்க விரும்பினால் சிந்தித்து செயல்படு. ஆமாம். நீ இல்லாமலிருக்க விரும்பினால் பிறகு அங்கு எண்ணத்திற்கு இடமில்லை. ஆனால் சிந்தனையில்லாமலிருப்பது அபாயகரமானது. ஏனெனில் பிறகு உருவங்கள் சிதைந்தும், அசிங்கமாகவும் மாறிவிடும்.

நீ இன்னமும் சத்தியத்தைத் தேட முடியாது என்றால், பிறகு குறைந்தபட்சம் அழகைத் தேடு. பிறகு அழகின் தேடுதல் மெதுமெதுவாக உன்னை சத்தியத்தின் தேடலுக்கு அழைத்துச் சென்றுவிடும். ஏனெனில் சத்தியமே... உச்ச அழகு. மேலும் உருவமற்ற தன்மையே மிகச்சரியான உருவம்.

அன்பு.

இப்போது தாமதப்படுத்தாதே. தியானத்தில் மூழ்கு. நீ ஏற்கனவே மிக அதிகமாக தாமதப்படுத்திவிட்டாய். பல பிறவிகளாகவே இதுதான் உனது ஆசையாக இருந்து வந்துள்ளது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள முயற்சி செய். இப்போது அதை நினைவுபடுத்திக் கொண்டு இப்போது உறுதியெடு. துணிச்சலில்லாமல் போனால் பல பிறவிகள் உன்னை கடந்து போய்க் கொண்டிருக்கும். உறுதி இல்லாமல் போனால் வாய்ப்புக்கு பின் வாய்ப்பு பலனில்லாமல் வீணாக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். உறுதி இல்லாமல் வாழ்க்கை ஒரு கனவு. உறுதி இருந்தால் கனவுகள் கூட உண்மையாகி விடும். உறுதி இல்லாவிட்டால் உண்மைகள் கூட கனவுகளாகவே இருக்கும். கற்களையும் கூழாங்கற்களையும் வைரங்களாக மாற்றும் ரசவாதம் உறுதிதான்.

அன்பு.

நீ அறியாமையிலிருக்கிறாய் என்று உணர்ந்து கொள்வது ஒரு மிகப்பெரிய சாதனைதான். அறிதலின் கோவிலுக்குள் செல்வதற்கு அதுவொரு அடிப்படை நிபந்தனையாகும். உன்னுடைய விஷய ஞானம் மறைந்து கொண்டிருக்கிறது. அது நல்லது. கடன் வாங்கப்பட்ட விஷயஞானம் எப்போதும் கடைசியில் பயனற்றதாகவே ஆகிறது. அது அப்படி மாறாமல் இருப்பது மட்டுமே அபாயம். அறியாமையை மறைத்தல் விஷயஞானம், அறியாமையை மறந்துவிடுதல் விஷயஞானம். மக்கள் அதைத்தான் அப்படி அழைக்கிறார்கள். மேலும் இந்த விதமான விஷயஞானம் ஏதாவதொரு உண்மையான விவேகம் உள்ளே வருவதற்கு வழியில் தடையாக நிற்கும். அப்படிப்பட்ட விஷயஞானத்தை கருணையில்லாமல் தூக்கி எறி. அதை குப்பையைப் போல தூக்கியெறி. மேலும் அதை திரும்பிப்பார்த்து கொண்டே இருக்காதே. முன்னால் செல். முன்னால் அறிவு சுயத்தை அறியும் அறிவாக, சுய அனுபவமாக, தியானமாக, ஞானமாக சூரியனைப்போல ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அன்பு.

நான் உனக்காக சாத்தியப்படக்கூடிய எல்லாவற்றையும் செய்வேன். மேலும் சாத்தியப்படாதவற்றையும் செய்வேன். ஏனெனில் சாத்தியபடாதவொன்று எதுவுமில்லை. உனக்கு உதவி பலவிதங்களில் தரப்படலாம். தெரிந்தும், தெரியாமலும் இரண்டுவிதமாகவும். நீ அதனை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். மெதுமெதுவாக அனுபவம் மேலும் தெளிவாகும். பார்க்க முடியாதவற்றைப் பிடிக்க தன்னை தயார்படுத்திக்கொள்ள மனதிற்கு சிறிது காலமாகும். ஆனால் என்ன அனுபவமாக இருந்தாலும் அதை மூடிய கண்களுடன் தியானத்தன்மையுடன் கவனி. பிறகு மெதுமெதுவாக உனது மூன்றாம் கண் செயல்படத் தொடங்கும். நீ இதுவரை அறிந்த புலன்கள் பார்க்க இயலாதவற்றின் தளங்களில் பயன்படாது. ஏனெனில் அவைகளுக்கென ஒரு வரையறை உள்ளது. அந்த தரிசனங்கள் நுண்ணியவை. மற்றும் உடலியல் சாராதவை. அவற்றுடனான உனது முதல் மற்றும் மெல்லிய அனுபவம் தொடங்கியுள்ளது. இது நல்லது. நான் மகிழ்ச்சியடைகிறேன்.

47.

அன்பு.

வாழ்க்கை ஒரு கனவு. பிறப்பிலிருந்து இறப்பிற்கு விரியுமொரு வானவில். அது இருக்கிறது- ஆனால் அது இல்லை. அது இல்லாதபோது அதுவும் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. எனவே உடலைப்பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு உனது சுயத்தை உனது தன்னுணர்வை எது உடலில் இருக்கிறதோ, ஆனால் எது உடல் அல்லவோ தனைத் தேடு. உடலற்ற தன்மையைப்பற்றி ஒருவன் விழிப்படைந்து விட்டால் எல்லாமும் நிலைமாற்றம் அடைந்துவிடும். நடுநிசியில் திடீரென சூரியன் எழுந்ததைப்போல- அல்லது பாலைவனத்தில் திடீரென கங்கை பொங்கியதைப்போல எல்லாமும் நிலைமாற்றம் அடைந்துவிடும். எனவே உனது நேரத்தை அர்த்தமற்ற கவலைப்படுதலிலோ அர்த்தமற்ற நடவடிக்கைகளிலோ வீணாக்காதே. ஏனெனில் வாழ்க்கையில் நம்பிக்கை இல்லை ஆனால் ஆன்மாவுள்ளது.

48.

அன்பு.

மனம் விளக்கில் எரியும் சுடர் காற்றில் அலைபாய்வதைப் போன்றது.

அது அலைபாயும். அது சந்தேகத்தில் விழும். அது இரண்டுபட்டே இருக்கும். நீ கண்டிப்பாக அதனை கடந்து செல்ல வேண்டும். அதிலிருந்து உன்னை விலக்கிக் கொள். அதனை விட்டு மேலே செல். அதனை பின்னால் விட்டு விடு. அதனா கீழே விட்டுவிடு. நீ மனமல்ல. மனதை அறிவது எதுவோ அதுவே நீ. அதன் நடுக்கத்தை, அதன் சந்தேகத்தை அறிவது. இந்த அறிவது எதுவோ அதில் வேர் கொள். இந்த சாட்சிபாவத்தில் மகிழ்ச்சி கொள். வெறுமனே இந்த சாட்சிபாவமாக இரு. மேலும் இந்த கடந்து செல்லுதலின் விளைவாக மனம் அமைதிபெறும். காற்று நின்றவுடன் விளக்கின் சுடர் அலைபாய்வதை நிறுத்திவிடுவதைப்போல. மனதோடு அடையாளப்படுத்திக் கொள்வது காற்றைப்போன்றது. அடையாளப்படுத்திக் கொள்வது நின்றுவிட்டால் புயல் நின்றுவிடுகிறது. மேலும் புயலில்லாத போது அங்கு பரவசமிருக்கிறது.

49.

அன்பு.

காரணமில்லாமல் மீரா காதலரின் காதல்மெத்தை ஒரு சிலுவையென்று பாடவில்லை. அது உண்மைதான். அல்லது சிலுவை ஒரு காதல் படுக்கையா ஆனால் காதலரைத்தேடும் பரவசத்தில் ஒருவர் சிலுவைகளைப்பற்றி கவலைப்படுவதில்லை. காதலை நோக்கி செல்லும் வழியிலிருக்கும் முட்கள்

திடீரென மலர்களாகி விடுகின்றன. அங்கு இருள்கூட ஒளியாகிவிடுகிறது. விஷம் அமிர்தமாகி விடுகிறது. அப்படிப்பட்ட விஷம் அமிர்தம் என்று அறியாதவர்கள் துரதிர்ஷ்டசாலிகள். ஆனால் நீ இதை அறியத் தொடங்கியிருக்கிறாய். நீ அதனை மேலும் மேலும் அறியத் தொடங்குவாய். எனவே இதனை அறியாதவர்கள் உன்னைக் கண்டு பொறாமை படுவதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

50.

அன்பு.

சந்நியாசம் உலகத்தை எதிர்த்து, சமுதாயத்தை எதிர்த்து, பாரம்பரியத்தை எதிர்த்து மிகப் பெரும் கிளர்ச்சி. அதுவொரு மதிப்பீடுகளை மாற்றுதல். அது தனக்குள் சுயத்தில் தானாகவே தன்னுடைய சுயத்தில் செய்துகொள்ளும் ஒரு புரட்சி. அதனால்தான் எல்லாவிதமான கஷ்டங்களையும் படவேண்டியிருக்கிறது. எதிர்ப்பிருக்கும், கேலியிருக்கும். இவை அனைத்திற்கும் சாட்சியாய் இரு. இதுவொரு சோதனை. நீ இதன் மூலம் மெருகேறி இன்னும் பிரகாசமாக வெளிவருவாய். உனக்கு தொந்தரவு கொடுப்பவர்கள் மீது நன்றியுணர்வுடன் இரு. அவர்கள் நீ பரிசோதனை செய்துகொள்ள ஒரு வாய்ப்பை வழங்குகிறார்கள். அதனை பணிவுடன் பொறுத்துக் கொள். அதை

அனைத்தையும் நிறைவுடன் ஏற்றுக்கொள். பிறகு தன்னுடைய சுய ஆணவத்தைத் தவிர வேறுயாரும் இந்த உலகத்தில் எதிரியில்லை என்பதை நீ அறிவாய்.

51.

அன்பு.

வாழ்க்கை ஒரு பல பரிமாணம் கொண்ட சவால். அதனால்தான் வாழ்க்கை நிலையில்லாமல் முடிவில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே வாழ்க்கையையொரு சவாலாக எடுத்து கொள்ளாதவர்கள் சுத்தமாக வாழ்வதே இல்லை. அவர்கள் ஒரு மெதுவான இறப்பை இறந்து கொண்டு மட்டுமே இருக்கிறார்கள். அவ்வளவே.

அவர்களுடைய முழு வாழ்க்கையும் பிறப்பிலிருந்து இறப்பு வரை ஒரு திசையில் இறப்பை நோக்கி மட்டுமே நகர்கிறது. அவர்களுடைய சேருமிடம் முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஏனெனில் அவர்களுடைய குறிக்கோள் இறப்பு.

வாழ்வு நிச்சயமற்றது. ஒவ்வொரு கணமும் புதியது. திட்டமிடப்படாதது; எதிர்பார்க்காதது; வாழ்க்கையை கணிக்கமுடியாது. வாழ்க்கைக்கு எந்த

ஜாதகமும் கிடையாது. எல்லா ஜாதகங்களும் இறப்பைப் பற்றியதே. குறிப்பாக அதனால்தான் வாழ்க்கையொரு சவால். மேலும் இறப்பு ஒரு ஓய்வு கொள்ளல். வாழ்க்கையொரு போராட்டம். ஆனால் வாழ்க்கையின் போராட்டத்தை சந்தித்தவர்களுக்கு மட்டுமே இறப்பு ஒரு ஓய்வு. வாழாதவர்களுக்கு இறப்பு பயத்தைத்தவிர வேறெதையும் கொண்டு வருவதில்லை. உயிரோட்டத்தோடு இருப்பவருக்கு இறப்பு இருப்பதில்லை.

வாழ்க்கையின் போராட்டங்களின் வாயிலாக ஒரு ஓய்வு நிறைந்த இறப்பு ஈட்டப்படுகிறது. அது வாழ்வதன் மூலமாக ஈட்டப்படுகிறது. ஆதலால் ஈட்டப்பட்ட இறப்பை இறப்பவன் ஒரு யேசுவைப்போல ஒரு சாக்ரடீஸைப்போல இறப்பற்ற தன்மையை அடைகிறான். இறப்பை ஈட்டு. அது மட்டுமே வாழ்வின் அடிப்படையான சவால்.

52.

அன்பு.

பயப்படாதே. தியானத்தில் என்ன நிகழ்ந்தாலும் நிகழட்டும். விட்டுவிடு. மனம் புலம்பிக் கொண்டிருந்தாலும் அதனை நிறுத்தாதே. அது தூய்மையடைவதற்கு இது ஒன்றுதான் வழி. உணர்வற்ற தன்மையில் என்ன அடக்கி வைக்கப்பட்டிருக்கிறதோ அது மேல்மட்டத்திற்கு வரும்.
அதற்கு வழிவிடு. எனவே நீ அதிலிருந்து விடுதலை அடையலாம். நீ அதனை

அடக்கும் கணத்தில் தியானம் வீணாக்கப்படுகிறது. மேலும் எவ்வளவு விரைவாக அதிலிருந்து விடுபடுகிறாயோ அவ்வளவு விரைவாக தியானம் உணரப்படும். எனவே மேலே வரும் ஒவ்வொரு விஷயத்தையும் வரவேற்று உதவி செய். ஏனெனில் சுயமாக செய்ய நீண்ட நேரமெடுக்குமொரு வேலை. உதவியிருந்தால் சீக்கிரமே முடிந்துவிடும்.

53.

அன்பு.

நீ ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டாய். நீ எப்படியிருக்கிறாயோ அப்படியே எப்போதைக்குமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டாய். பிரபஞ்சக் கோவிலின் கதவுகள் நிபந்தனையின்றி எப்போதும் திறந்துள்ளன.

தன்னைத்தானே ஏற்றுக்கொள்ளாத மனிதனைத்தவிர வேறு எவரும் பிரபஞ்சத்தின் கோவிலில் நிராகரிக்கப்பட்டதில்லை. ஆனால் ஏற்றுக்கொள்ளாததன் பொறுப்பு நம்மை மட்டுமே சார்ந்தது. சுய கண்டனம் மதத்தன்மையற்றது. மதத்தன்மையற்ற ஒரே விஷயம் அதுதான். சுயகண்டனம் மட்டுமே, உண்மையான பாவமாகும். ஏனெனில் தன்னைத்தானே கண்டனம் செய்துகொள்ளும் ஒரு மனிதன் தன்னை பிரபஞ்சத்திற்கு அளிக்கமுடியாது.

வாழ்க்கையில் தன்னை முற்றிலும் ஏற்றுக்கொள்ளும் மலர் மட்டுமே தெய்வீகத்தின் காலடியில் சமர்பிக்கப்படுகிறது.

**<u>பின்குறிப்பு:-</u>**

சுத்ஜிக்கு எனது அன்பு. அவரது உடல்நிலை இப்போது எப்படியிருக்கிறது? அவரை கவனித்துக்கொள்ளுதலே உனது சாதனா; உனது தியானம்.

54.

அன்பு.

தியானத்தையடைவது காலத்தைப்பற்றிய கேள்வியல்ல. அது வைராக்கியத்தைப் பற்றியது. வைராக்கியம் முழுமையாக இருந்தால் தியானம் எந்தக் கணத்திலும் நிகழலாம். ஆனால் வைராக்கியமில்லாத ஒரு மனம் பிறவி பிறவியாக சுற்றியலையும். வைராக்கியத்தை தீவிரப்படுத்து. வைராக்கியத்தை ஒன்றாக்கு. வைராக்கியத்தை முழுமைப்படுத்து. பிறகு தியானம் அதுவாகவே உனது கதவைத்தட்டும். தியானம் இல்லாதவரை உனது மனம் நிச்சயமாக உன்னை சித்ரவதை செய்யும். தியானம் இல்லை என்பதற்குரிய பெயர்தான் மனம். ஒளியற்ற தன்மைக்கு பெயர்

இருள் என்பதைப் போல. அது போலவேதான். ஒளி வர வர இருள் மறைந்துவிடும். தியானம் வர வர  மனம் விலகிப்போய்விடும். எனவே இப்போது உன்னை தியானத்தில் ஆழ்த்திக்கொள். மற்றவையனைத்தும் தானாகவே அதனை பின்தொடரும்.

55.

அன்பு.

நீ ஏன் நம்பிக்கையற்று போய்விட்டாய்? நம்பிக்கையற்ற தன்மை என்பது அதிகபட்ச நம்பிக்கையின் வினாவல்லவா? நீ ஏன் சோகமடைந்து விட்டாய்? சோகமென்பது அதிகபட்ச எதிர்பார்ப்பின் நிழலல்லவா? நம்பிக்கையற்ற தன்மை முழுமையாக இருந்தால் நம்பிக்கையற்றதன்மை வளர இடமிருக்காதே. சோகம் முழுமையாக இருந்தால் சோகம் கூட கொண்டாட்டமாக மாறிவிடுகிறது. அதனால்தான் எல்லா இருமைகளையும் விட்டுவிடு என்று நான் கூறுகிறேன்.

வெளிச்சம் மற்றும் நிழல் ஆகியவற்றின் எல்லா விளையாட்டுகளையும் விட்டுவிடு. எழு... எது இருக்கிறதோ அது இருக்கிறது என்று  அறிந்துகொள். அங்கு இருளிருந்தால், பின் அங்கு இருளிருக்கிறது. அங்கு இறப்பிருந்தால், பின்

அங்கு இறப்பிருக்கிறது. அங்கு விஷமிருந்தால், பின் அங்கு விஷமிருக்கிறது. பிறகு பார்... இருளெங்கே இருக்கிறது? பிறகு தேடு.... இறப்பெங்கே இருக்கிறது?

ஒளியின் மீதிருக்கும் ஆசைகளினாலேயே இருள் அறியப்படுகிறது. வாழ்வின் மீதிருக்கும் முடிவற்ற வேட்கையினாலேயே இறப்பு அறியப்படுகிறது. மேலும் விஷமென்பது அழிவில்லாத அமுதத்தை கேட்பதேயின்றி வேறொன்றுமில்லை.

56.

அன்பு.

உலகம் துன்பத்திலுமில்லை; ஆனந்தத்திலுமில்லை. நாம் எதைத் தேடுகிறோமோ அதுவே உலகமாகிறது. நமது பார்வைக்கோணம் நமது உலகமாகிறது. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த உலகத்தை படைத்துக்கொள்கிறோம்.

வாழ்வின் ஒவ்வொரு கணமும் உனக்கு துன்பத்தைக் கொண்டு வந்தால், பின் எங்கோ ஓரிடத்தில் உனது பார்வைக்கோணத்தில் தவறுள்ளது, மேலும் உன்னைச்சுற்றி நீ பார்பதனைத்தும் இருளாக இருந்தால், பின் நீ கண்டிப்பாக ஒளியைப் பார்க்கக்கூடிய அதே கண்களை நீ மூடிக்கொண்டுவிட்டாய்.

உன்னைச்சுற்றி திரும்பவும் சிந்தித்துப்பார். உன்னை புதிதாகப்பார். நீ மற்றவர்களை குறைகூறினால் உன்னுடைய சொந்த தவறுகளை உன்னால் தேடமுடியாது. நீ சூழ்நிலைகளை குறை கூறினால் உன்னுடைய மனம் நிற்கும் கோணத்தின் ஆழமான வேர்கள்வரை உன்னால் செல்லமுடியாது.

அதனால்தான் எந்தவிதமான சூழ்நிலையில் நீ இருந்தாலும் எப்போதும் காரணங்களை நீ முதலில் உனக்குள் தேடு. காரணங்கள் எப்போதும் தனக்குள்ளேயே கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் அவை எப்போதும் அடுத்தவர்களிடமிருப்பதாகவே தோன்றும் நீ இந்த தவறான புரிதலை தவிர்த்துவிட்டால் துன்பத்தை பிடித்து தொங்கிக் கொண்டிருப்பது கடினம்.

மற்றவர்கள் வெறுமனே கண்ணாடிகளாக செயல்படுகிறார்கள். முகம் எப்போதும் நம்முடையதேயாகும். வாழ்க்கையொரு பெரிய கொண்டாட்டமாக இருக்கமுடியும். ஆனால் நாம் நம்மை புதிதாக படைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேலை கடினமானதல்ல. ஏனெனில் நமது சொந்த பார்வையிலுள்ள முட்டாள்தனத்தை நாம் கண்டுகொள்ளும் தருணத்தில் அந்த முட்டாள்த்தனம் இறந்து போகத் தொடங்கிவிடுகிறது. ஒரு புதிய மனிதன் பிறக்கத் தொடங்கிவிடுகிறான்.

அன்பு.

சந்நியாசம் என்பது வாழ்விலுள்ள நல்ல, அழகான உண்மையானவற்றின் சேர்ந்திசை.

சந்நியாசமில்லாமல் வாழ்வில் எந்த மணமுமில்லை. வாழ்வு என்பது வேர்களைத் தவிர வேறொன்றுமில்லை.

சந்நியாசத்தின் மலர்கள் மலராதவரை, வாழ்க்கை அதன் அர்த்தத்தை, பரவசத்தை, நன்றியுணர்வை அடையாது.

சுயபுரட்சியின் இந்த அபூர்வ கணம் உனது வாழ்க்கையில் வந்துவிட்டது என்பதையறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். நான் அந்த கணத்தை உனது கண்களில் கண்டேன்.

விடியலில் கதிரவன் எழுவதற்கு முன்பு வானம் செந்நிறத்தால் நிரம்பி இருப்பதைப் போல அந்த விடியலின் நிறங்கள் உனது இதயத்தில் பரவுவதை நான் கண்டேன். பறவைகள் வரவேற்புப் பாடலை பாடுகின்றன. செயலற்றிருந்த செடிகள் எழுகின்றன. இனிமேலும் தாமதப்படுத்துவது சரியல்ல.ஏற்கனவே போதுமான அளவு தாமதமாகி விடவில்லையா?

அன்பு.

சரணடைவதைத் தவிர முழுமையாக தன்னை கைவிட்டு விடுவதைத் தவிர தெய்வீகத்தன்மையின் ஆலயத்தை அடைவதற்கு வேறெந்த வழியுமில்லை. விட்டுவிடு. எல்லாவற்றையும் அதனிடம் விட்டுவிடு. தேவையில்லாத சுமையை உனது தலையில் சுமக்காதே.

**"வாழ்க்கை என்ன விரும்புகிறதோ"**

இந்த சூத்திரத்தை எப்போதைக்குமாக உனது நினைவில் வை.

யேசு "அவரது விருப்பமே நடக்கட்டும்" என்று கூறியுள்ளார். இதை நீ உனக்கு சொல்லிக் கொண்டேயிரு. இது தன்னுணர்விலிருந்து தன்னுணர்வற்ற நிலைவரை வழியெங்கும் அதிரத் தொடங்கட்டும். விழித்திருந்தாலும், தூங்கிக் கொண்டிருந்தாலும் இந்த இசை உனக்குள் ஓடிக் கொண்டிருக்கட்டும். பிறகு ஏதாவதொரு கணத்தில் உன்னுடைய கைவிடுதல் முழுமையடையும் பொழுது ஞானமடைதல் நிகழ்ந்துவிடும். கைவிடுதலில் இறுதி நிலையே ஞானம். 'நான்' கலைந்து பரவிவிடுதலே கைவிடுதல்.

"வாழ்க்கை என்ன விரும்புகிறதோ" என்று சொல்லி உள்ளே பார். ஏதோவொன்று கரைவதையும், மறைவதையும் நீ பார்க்கவில்லையா?

அறிமுகமில்லாத புதிய ஏதோவொரு இருப்பு பிறப்பதை நீ பார்க்கவில்லையா?

59.

அன்பு.

உன்னுடன் சண்டை போடாதே. அது வீண். ஏனெனில் அப்படிப்பட்டதொரு சண்டையின் மூலமாக எநதவொரு வெற்றியும் ஈட்டப்பட்டதில்லை. உன்னுடன் சண்டையிட்டுக் கொள்வதென்பது ஒரு மெதுவான தற்கொலையைத் தவிர வேறொன்றுமில்லை. உன்னை மகிழ்ச்சியாக, நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள். இருப்பதெல்லாம் நல்லதே.

காமமும் கூட, கோபமும் கூட, ஏனெனில் எது இருக்கிறதோ அது பிரபஞ்சத்திலிருந்து வந்துள்ளது. அதனை ஏற்றுக்கொள். அதனை புரிந்துகொள்.

தேடு.... அதற்குள் மறைந்திருக்கும் வாய்ப்புகளை வெளியே எடு. பின் காமம் கூட தெய்வீகத்தன்மையின் விதையாக பார்க்கப்படும். மேலும் கோபம் கூட மன்னிப்பின் கதவாக மாறிவிடும். தீமையென்பது நன்மையின் எதிரியல்ல. பதிலாக தீமை தடை செய்யப்பட்ட நன்மை. அவ்வளவே.

அன்பு.

உலகம் ஒரு கனவு. திறந்த விழிகளோடு காணும் ஒரு கனவு. பிறப்பிற்கும், இறப்பிற்குமிடையே உள்ளது சத்தியமல்ல. ஏனெனில் சத்தியத்திற்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை. எல்லா பிறப்புகளும் ஒரு கனவே. எல்லா இறப்புகளும்கூட ஒரு கனவே. எதற்கு தொடக்கமும் முடிவும் உள்ளதோ அது ஒரு கனவு.

எதற்கு தொடக்கமும் முடிவும் இல்லையோ அது சத்தியம். அப்படிப்பட்ட சத்தியத்தைத் தேடாமலிருந்தால் வாழ்க்கை வீண். இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் இந்த சத்தியம் தனக்குள் உள்ளது. நீ அதைத்தேடி காசிக்கோ, காபாவுக்கோ செல்ல வேண்டியதில்லை. அதை தேடுவதற்குரிய காலத்திற்காகவோ அல்லது அதை தேடுவதற்குரிய வாய்ப்புக்காகவோ நீ காத்திருக்கவேண்டிய தேவையில்லை. அது இப்போது இங்கே கிடைக்கும். ஆனால் மனிதன் அதை தன்னைத்தவிர மற்ற எல்லா இடங்களிலும் தேடுகிறான். அவன் தன்னைத்தவிர மற்றெல்லா இடங்களிலும் தேடுகிறான். அதன் விளைவாக அவன் தன்னைத்தவிர எல்லா இடங்களையும் சென்றடைகிறான். தன்னையிழந்து மற்றனைத்தையும் அவன் அடைகிறான்.

இந்த முறையில் ஒரு பேரரசராக ஆகியிருக்க கூடியவன் தனது சொந்த செய்கையினால் ஒரு பிச்சைக்காரனாக மாறுகிறான். அப்படிப்பட்ட ஒரு பொய்யான வாழ்க்கையில் இனி விழாதே. தியானத்திற்குள் ஆழமாகச் செல். அதன்மூலம் உன்னைப்பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்ளக்கூடும்.

இந்த உலகமெனும் கனவை புரிந்துகொள். அதன்மூலம் நீ உன்னைப்பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்ளக்கூடும். அறியாதது, பிறக்காதது எதுவோ அதனைத் தேடு. அதன் மூலம் - நீ அழிவற்றதை கண்டறியலாம்.

61.

அன்பு.

தியானத்திற்காக முயற்சி செய். மனதின் எல்லா பிரச்சனைகளும் மறைந்து விடும். உண்மையில் மனம்தான் பிரச்சனை. மற்ற அனைத்து பிரச்சனைகளும் மனதின் எதிரொலிகள் மட்டுமே. தனித்தனியாக ஒவ்வொரு பிரச்சனையுடன் சண்டையிடுவது எதையும் தீர்க்காது. எதிரொலிகளுடன் சண்டையிடுவது வீண். தோல்வியைத்தவிர வேறொதுவும் நடவாது. கிளைகளைக் கத்திரிக்காதே. ஏனெனில் ஒரு கிளையின் இடத்தில் நான்கு வளரும். நீ கிளைகளை நறுக்கும்போது மரங்கள் இன்னும் அதிகமாக வளரும். பிரச்சனை

கிளைகளில் இல்லை. நீ ஏதோவொன்றை வெட்ட விரும்பினால் - பின் வேர்களை வெட்டு. ஏனெனில் வேர்களை வெட்டுவதன் மூலம் கிளைகள் தாமாகவே மறைந்துவிடும். மனம்தான் வேர், இந்த வேரை தியானத்தினால் வெட்டு. மனம்தான் பிரச்சனை தியானம்தான் தீர்வு. மனதிற்குள் எந்த தீர்வுமில்லை. தியானத்தில் எந்த பிரச்சனையுமில்லை. ஏனெனில் மனதில் தியானமில்லை. மேலும் தியானத்தில் மனமில்லை.

தியானமின்மையே மனம். மனமின்மையே தியானம். அதனால்தான் தியானத்திற்காக முயற்சி செய் என்று கூறுகிறேன்.

62.

அன்பு.

நான் எப்போதும் உன்னுடன் இருக்கிறேன். எப்பொழுதெல்லாம் உனது தியானத்தில் நீ அலை பாய்கிறாயோ அப்பொழுதெல்லாம் என்னை நினைத்துக்கொள்.

புலப்படாத கரங்களின் வழியே உதவி வந்தடைவதை நீ அறிவாய். பார்க்கப்படக்கூடிய சக்திகள் மட்டுமே சக்திகளல்ல. உண்மையில் அவை புலப்படாத சக்திகளின் கடலிலிருந்து வரும் சிறு ஓடைகளைத் தவிர

வேறில்லை. அவைகளின் ஆதாரமும் கண்களுக்கு புலப்படாததேயாகும். ஆனால் கண்களுக்கு புலப்படாததலிருந்து உதவியை பெற்றுக்கொள்ளுதல் ஒரு கலை. ஒருவேளை இதுவே உச்சகட்ட கலை.

மௌனமாக, இயலாமையில் புலப்படாததின் கரங்களில் தன்னை விட்டுவிட்டால் கடந்ததின் பரந்த தன்மையோடு ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது.

இப்போது நான் இடையிலொரு ஏணியாக மட்டுமே செயல்படுகிறேன். நீ நேரடித்தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட கணத்தில் ஏணியை விட்டாக வேண்டும். ஒருவர் ஏணிக்கு மேலே சென்று பின் அதனை விடவும் வேண்டும். இப்போது நீ என்னை நினைவில் வைத்துக்கொள். பின் நீ என்னை மறக்கவேண்டும். ஆனால் முதலில் நினைவில் கொள்பவரால்தான் பின் மறக்கமுடியும்.

## 63.

அன்பு.

நீ ஒருவேளை தகுதியற்றவனாக இருந்தால் உன்னை தகுதியுடையவனாக

மாற்றுவது வெகு சுலபம். தூங்குபவனை எழுப்புவதில் என்ன சிரமம் இருக்கிறது? ஆனால் விழித்துக் கொண்டவர்களை எழுப்புவது மிகவும் கடினம். இல்லையா?

தகுதியற்றவர்கள் யாருமில்லை. அதுதான் சிரமம்.

தெய்வீகம் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் உள்ளது. எனவே எது தகுதியற்ற தன்மை? கடவுள்தன்மை மட்டுமேயிருக்கிறது, வேறொன்றுமில்லை. எனவே தகுதியற்ற தன்மை எங்கிருக்கிறது?

ஆதலால் உன்னை மட்டுமே நினைவில் வைத்துக்கொள். நான் எப்போதும் உன்னருகில் இருப்பதை நினைவில் வைத்துக்கொள். வீட்டிலல்ல.... உனது இதயத்தில்.

உனது கண்களை மூடிப்பார், நானங்கு இருக்கிறேனல்லவா?

64.

அன்பு.

தியானத்தின் மரத்தில் கனி தோன்றத் தொடங்கியுள்ளது.
ஆடு, கொண்டாடு. பிரபஞ்சத்திற்கு நன்றி சொல். பல பிறவிகளாக

இருக்குமொரு தாகம் தீரப்போகிறது. நீ எப்போதும் ஆசைப்பட்ட ஒன்று நிகழப்போகிறது. என்ன நிகழ்ந்தாலும் பயப்படாதே. இறப்பு நிகழ்வது போலத் தோன்றினாலும் ஒரு பரவச சாட்சியாக இரு. தியானத்தில் நிகழும் இறப்பைக் கடந்தது ஞானம். ஞானம் இறப்பற்றது. இப்போதிலிருந்து அதுவொரு செங்குத்தான ஏற்றமாக இருக்கும். ஏனெனில் உச்சி அருகிலுள்ளது. ஆனால் பொறுமையுடன் பிரார்த்தனையில் நிறைந்து நகர்ந்து கொண்டேயிரு.

நீ சிக்கிக் கொள்ளும்பொழுது அல்லது வழிதவறி விட்டதாக தோன்றும்பொழுது அல்லது நீ துணிச்சலை இழக்க தொடங்கும்பொழுது அல்லது சந்தேகம் உன்னை ஆட்க்கொள்ளும்பொழுது உடனடியாக என்னை நினைத்துக் கொள்.

ஆனால் முடிந்தவரை தினசரி விஷயங்களுக்கு என்னை அழைக்காதே. இந்த சூழ்நிலைகளை நீயே சமாளி. அவைகளோடு நீயே சண்டையிடு. வேறெந்த வழியுமில்லாதபோது நீ இயலாமையில் இருக்கும்போது மட்டுமே என்னை நினைத்துக்கொள்.

இருந்தாலும் நீ கூப்பிடாவிட்டாலும் கூட தேவையானவற்றை நான் செய்துகொண்டுதான் இருப்பேன்.

அன்பு.

கவலைப்படாதே. வாழ்க்கையில் கவலையென்று ஏதுமில்லை. எல்லாமும் ஒரு கனவுதான் என்பதை புரிந்துகொள். உண்மையில் அது அப்படித்தான். இன்றிருந்து நாளையில்லாமல் போவது ஒரு கனவைத்தவிர வேறொன்றுமில்லை. அதில் உன்னை அளவுக்கதிகமாக மூழ்கடித்துக்கொள்ளாதே.

இந்த மூழ்கடித்துக் கொள்வதினாலேயே கவலை உருவாகிறது. கனவிலிருந்து வெளியே வா. உன்னை ஒரு சிறிது விலக்கிக் கொள். பிறகு விஷயங்களைப் பார். சிறிதளவு ஒரு கவனிப்பவனாக மாறு.

ஒரு கனவில் உன்னை மூழ்கடித்துக் கொள்வது துன்பமாகும். கனவு கண்டு கொண்டிருக்கும்பொழுது எழுவது கனவை உடைத்துவிடும். அது தன்னிலையிலேயே பரவசத்தைக் கொண்டுள்ளது.

அன்பு.

வாழ்வு உண்மையில் தெய்வீகத்தன்மையில்லாமல் முடிவடைவதில்லை. அதனால்தான் அது உனக்கு முழுமை பெறாததாகத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் வெறுமையைப் பற்றிய இந்த விழிப்புணர்வு முழுமை பெறாத தன்மையைப் பற்றிய இந்த உணர்தல் அதிர்ஷ்டவசமானது. ஏனெனில் இந்த உணர்தலிலிருந்து மேலும் இந்த உணர்தலின் காரணமாக இறுதியானதை தேடும் ஆராய்ச்சி தொடங்குகிறது.

இத்தகைய விழிப்புணர்வை தவிர்க்காதே. இப்படிப்பட்ட வெறுமையிலிருந்து தப்பியோடாதே. இப்படிப்பட்ட உணர்விலிருந்து தப்பிக்காதே. மனம் தப்பித்தலை மட்டுமே பரிந்துரைத்தாலும்கூட. மேலும் அந்த தப்பித்தல் என்பது உலகம்.

உலகம் ஒரு தப்பித்தலாகும். உலகின் முழுபரபரப்புத்தன்மையும் தப்பித்தலாகும். அது இந்த வெறுமையை நிறைக்கசெய்யும் வீணான முயற்சியாகும். எனவே இந்த பந்தயத்திலிருந்து வேதனை மட்டுமே விளையும்.

கடவுள்தன்மையே தேவைப்படுவது. ஆனால் நாமிந்த வெறுமையை பொருட்களைக் கொண்டு நிரப்புகிறோம். மதத்தன்மையே தேவைப்படுவது.

ஆனால் நாம் அதனை பணத்தைக் கொண்டு நிரப்புகிறோம். சுயமே தேவைப்படுவது. ஆனால் நாம் அதனை மற்றவரைக் கொண்டு நிரப்புகிறோம். பிறகு அனைத்தும் அடையப்படுகிறது, ஆனால் எதுவும் அடையப்படுவதில்லை. பிறகு வெறுமை மேலும் மேலும் தீவிரமடைகிறது.

இப்படிப்பட்ட கணங்கள் அபூர்வமானவை. ஏனெனில் அவையே தேர்ந்தெடுக்கும், தீர்மானிக்கும் கணங்களாகும். எனவே நீ தப்பித்தலை தேர்ந்தெடுக்கலாம். அல்லது தப்பிக்காமலிருப்பதை தேர்ந்தெடுக்கலாம். நீ தப்பித்தலை தேர்ந்தெடுத்தால் பிறகு வழக்கமான விளைவுதான். பிறவி பிறவியாக எப்போதும் அதே விளைவுதான் நடந்து வந்துள்ளது. இப்போது நிறுத்து. தப்பித்தலை தேர்ந்தெடுக்காதே. வெறுமையிலிருந்து விலகி ஓடாதே. அதற்கு பதிலாக வெறுமையில் நிலை கொள். வெறுமையை நிரப்பாதே. அதற்கு பதிலாக உன்னை வெறுமை முழுமையாக ஆக்ரமிக்க அனுமதி. பிறகு சந்நியாசமென்று அழைக்கப்படும் அந்த மாற்றம் நிகழும்.

மேலும் எல்லா வெறுமையும் அழிந்துவிட்ட ஒரு புள்ளியை நீ அடைவாய். ஆனால் நினைவில் கொள். இது அறிவுபூர்வமாக நிகழ்வதல்ல. சிந்திக்காதே. இப்போது அறிந்துகொள். இப்போது அனுபவி. நீ போதுமான அளவு சிந்தித்து விட்டாய், அல்லவா?

67.

அன்பு.

அவசரப்படாதே. பொறுமையாக இரு. பொறுமை தியானத்தின் நிலத்தை பதப்படுத்துகிறது. தியானத்தை வளர்த்துக் கொண்டேயிரு. கனி கண்டிப்பாக வரும். அது எப்போதும் வருகிறது. கனியைப்பற்றி கவலைப்படாதே. ஏனெனில் உனது கவலைப்படுதலே அது வருவதை தடைசெய்யும்.

அந்த கவலைப்படுதலே தியானத்திலிருந்து உன்னை விலகச்செய்யும். தியானத்திற்கு உனது முழுகவனமும் தேவை. ஒரு பிளவுபட்ட இருப்பு போதாது. பகுதியாக இருத்தல் போதாது. உனது முழுமையும் பங்கெடுக்காமல் தியானம் சாத்தியமில்லை. எனவே தியானம் செய்வதில் கவனத்தைக் குவி. தியானத்தின் கனியை பிரபஞ்சத்தின் கைகளில் விட்டுவிடு. அந்தக்கனி வரும். ஏனெனில் தியானத்தில் முழுமையாக மூழ்குதல் அதை உருவாக்குகிறது.

68.

அன்பு.

நான் உனது மனதை பார்க்கிறேன். நான் உனது மனதை பார்த்துக் கொண்டிருக்கிறேன். இப்போது அது வெப்பமாகவும், குளிர்ச்சியாகவும்

இருக்கிறது. உனது பாதம் பாதையில் தடுமாறுகிறது. திரும்ப திரும்ப தவறவிட்டு கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறாய். நான் இவையனைத்தையும் கவனித்துக்கொண்டிருக்கிறேன். நான் கருணையை உணர்கிறேன்.
நான் என்ன செய்தாலும், என்ன செய்ய முடிந்தாலும், நான் விஷயங்களை விரைவு படுத்த முடியாது ஆனாலும் கூட நான் செய்து கொண்டிருக்கிறேன்.

ஏனெனில் ஒவ்வொரு விதையும் தனது சொந்த நேரத்தில்தான் முளைவிடுகிறது. அதற்காக காத்திருத்தல் ஒரு கட்டாயம்.

இன்னும் என்ன இருக்கிறது? மனிதமனம் இரு எதிர்பதமான வாய்ப்புகளை ஒரே நேரத்தில் சமாளிக்க முயற்சி செய்து தன்னை ஓய்வில்லாது ஆக்கிக் கொள்ளலாம். பிறகு சூழ்நிலை இன்னமும் சிக்கலாக மாறிவிடும்.
நீ ஒரே சமயத்தில் இரு படகுகளில் ஏறி இருக்கிறாய் என்பதை உன்னால் பார்க்க முடியவில்லையா? .....

69.

அன்பு.

வாழ்வு காலத்திலோ, வெளியிலோ பிளவுபட வில்லை. வாழ்வு ஏதாவதொன்றாக இருக்கிறதென்றால் அது பிளவுபடாத தன்மையாக இருக்கிறது.

ஒரு தடையற்ற ஓட்டம். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் இவை காலத்தின் தடையற்ற ஓட்டத்தில் மனிதனால் வரையப்பட்ட கோடுகள். உண்மையில் அவை மனிதனின் மனதைத் தவிர வேறெங்குமில்லை. மனமே காலம். வெளியும் பிளவுபடாததுதான். நான் எனது உடலோடு முடிந்து விடுவதில்லை. உண்மையில் என்னுடைய எல்லை முழுமையின் எல்லையற்ற தன்மையே.

ஆனால் மனத்தால் பிளவுபடுத்தாமல் ஓய்வு கொள்ளமுடியாது. அதுவொரு முப்பட்டகத்தைப் போன்றது. பிளவுபடுத்துதல் அதன் இயல்பிலேயே உள்ளது. பிரபஞ்சத்தின் ஒளிக்கற்றை மனதை கடந்து செல்லும்போது பல வேறுபட்ட ஒளிக்கற்றைகளாகவும் வண்ணங்களாகவும் பிளவுபட்டு விடுகிறது.

வேரில் ஒரே விஷயமாக இருப்பது கிளைகளில் பல விஷயங்களாக மாறுகிறது. வேர் நிரந்தரமானது. தொடக்கமற்றது, முடிவற்றது. கிளைகள் தற்காலிகமானவை. அவைகளுக்கு முடிவும் உண்டு, தொடக்கமும் உண்டு. கிளைகள் மாறும். வேர்கள் எப்போதுமிருக்கும். வேர்கள் மாறாது, அவைகளை மாற்றமுடியாது. ஆமாம். மாற்ற ஆசைப்படலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு ஆசை உன்னை தவிர்க்கவியலாத தோல்விக்கும், துன்பத்திற்குமே அழைத்துச் செல்லும். கிளைகள் மாறிக்கொண்டேயிருக்கும். அவைகள் மாறிக்கொண்டிருப்பதை உன்னால் நிறுத்தமுடியாது. ஆனால்

ஒரு மாறாத நிலைக்கு கண்டிப்பாக ஆசைப்படலாம். பிறகு அப்படிப்பட்ட ஒரு ஆசை தவிர்க்க இயலாத தோல்விக்கும், துன்பத்திற்கும் வழிவகை செய்கிறது.

மேற்கு முதல்விதமான தோல்வியிலும், துன்பத்திலுமுள்ளது.
கிழக்கு இரண்டாம் விதமான தோல்வியிலும், துன்பத்திலுமுள்ளது.
இப்போது வரை வெற்றியும் பெற்று கனியும் கொடுக்கும்
ஒரு பண்பாட்டை கொண்டுவர மனிதனால் முடியவில்லை.

நான் பேசும் இரண்டு உண்மைகளுக்கிடையே வேர்களின் உண்மை கிளைகளின் உண்மை நிரந்தரத்தின் நியதி மாற்றத்தின் நியதி இவைகளுக்கிடையே ஒரு இசைவான சூழ்நிலையிருந்தால் மட்டுமே ஒரு பண்பாடு முடமாகாமல், ஒரு பக்கமாகாமல், கட்டிட வல்லுநர்கள் முக்கோண வளைவு அமைக்கும்போது எதிர்முனைகளின் இறுக்கத்தை பயன்படுத்துவதைப் போல பயன்படுத்துவது உருவாகும். வாழ்க்கையின் சத்தியம் பன்முகத்தன்மை கொண்டது. பல வகைகளை உள்ளடக்கியது.

வாழ்க்கையின் நீரோட்டம் எப்பொழுதும் எதிர்முனைகளின் இரு கரைகளுக்கிடையே ஓடுகிறது.

அன்பு.

நெருக்கம், தொலைவு அனைத்தும் கனவுகள். சத்தியமென்பது ஒருமை அதனால்தான் நீ அருகிலிருக்கும் போது கூட அங்கு நெருக்கம் இருப்பதில்லை. மேலும் நீ தொலைவிலிருந்தாலும்கூட அங்கு எந்த தூரமுமில்லை. அனைத்தும் ஒரு கனவுக்குள் நிகழ்கின்றன. ஆனாலும்கூட எதுவும் நிகழ்வதில்லை. அதனால்தான் அது ஒரு கனவு. இப்போது கனவை விட்டு வெளியே வா.

நீ பலபிறவிகளாக பல கனவுகளை பார்த்திருக்கிறாய். இப்போது விழித்தெழு. நீ மகிழ்ச்சியை பார்த்திருக்கிறாய் நீ சோகத்தை பார்த்திருக்கிறாய் நீ பல பிறப்புகள் பிறந்திருக்கிறாய், நீ பல இறப்புகள் இறந்திருக்கிறாய். ஆனால் இப்போது வாழ்க்கையில் விழித்தெழு. இப்போது பரவசத்தில் நிலைகொள்.

நெருக்கத்தை கைவிடு தொலைவை கைவிடு இப்போது ஒன்றுபடுதலில், ஒருமையை தேடு.

அன்பு.

நான் பரவசத்திலிருக்கிறேன் என்று அறிவதற்கு நீ பரவசத்திலிருக்க வேண்டும். பரவசம் உனது சுயஇயல்பு. அதனால்தான் நீ அதற்காக ஏங்குகிறாய். மகிழ்ச்சியற்ற தன்மை இயல்புக்கு மாறானது. அது சுயத்திலிருந்து கீழே விழுதல். அதனால்தான் நீ அதிலிருந்து விடுதலையடைய முயற்சி செய்கிறாய். நாம் யாராக இருக்கிறோமோ அவர்களாக நாம் இல்லையென்பதே வலி. நாம் எதுவாக அதுவாக நாம் இல்லையென்பதே பதட்டம். நீ உனக்குள் நிலை கொள்ளும் கணத்தில்  அங்கு ஆரோக்கியமிருக்கிறது. நீ உன்னிடம் திரும்பிவந்து விடும் கணத்தில்  அங்கு அமைதியிருக்கிறது.  அலைபாய்தல் மேல்மட்டத்திலிருக்கிறது. நீ மையத்தில் நிலைகொள்கிறாய். நீ நிலைகொள்வது என்றால் என்னவென்ற முதல் அனுபவத்தை பெற்றுவிட்டாய். உனது மையத்திலிருந்து முதல் ஒளிக்கீற்று உன்னைத் தொட்டுவிட்டது. இப்போது நீ இன்னும் ஆழமாக செல்லவேண்டும். ஏனெனில் சுயத்தின் மையம்கூட தொலைந்து விடும்போது மட்டுமே சுயத்தின் முழுமையான ஆழம் கண்டறியப்படுவாய்.

அன்பு.

வாழ்வதற்கு இன்று போதுமானது. இன்றைய நாளை அழிப்பதற்கு நாளை என்ன வரும் என்று கவலைப்படுவதே போதுமானது. சமயக்குழு உருவாக்கப்பட்டால் பிறகு அதை அழிப்பதற்குரிய மக்களும் பிறப்பார்கள். அவர்களுடைய வேலையை முழுமையாக நிறுத்துவதற்கு என்னைப் போன்ற அழிப்பவர்களும் பிறப்பார்கள்.

ஒருவர் கட்டமைக்க வேண்டும். மேலும் ஒருவர் அழிக்கவேண்டும். ஒருவர் அழிக்கவேண்டும். ஒருவர் கட்டவேண்டும். இரண்டையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக பார்க்கக் கூடியவர்கள் இரண்டிலிருந்தும் விடுதலை பெற்று விடுகிறார்கள்.

இறந்த சத்தியங்கள் பாரம்பரியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் பிறந்தது இறந்தேயாக வேண்டும். நாளை அவர்களுக்கு ஒரு கல்லறை தோண்டப்படுமென்ற பயத்தினால் நீ குழந்தைகள் பிறப்பதை தடுக்கமுடியாது. பிணங்கள் உயிரோடிருந்தன என்பதால் அவை இப்போது உயிரோடு இருக்கின்றன என்று அர்த்தமல்ல பிறப்பு வரும், ஆனால் இறப்பும் தொடரும். ஒரு மதம் பிறக்கிறது, அது இறக்கும்பொழுது, அதுவொரு

சமயக்குழு ஆகிறது. கல்லறைக்கு போய்தானாக வேண்டும். மதம் திரும்பவும் பிறக்கும், திரும்பவும் ஒரு சமயக்குழு உருவாகும். யார் ஒரு மதத்தின் பிறப்புக்காக போராடுகிறார்களோ, அவர்கள் போக போக புதிய சமயக்குழுக்களுக்கு தோற்றமளித்து விடுவார்கள். ஒரு மதத்திற்கு மறுபிறப்பளிப்பவர்கள் தன் போன்ற மக்களுடனேயே சண்டைபோடும் ஒரு நாடகத்தில் பங்கேற்கவேண்டும்.

உபநிடதங்கள், வேதங்களோடு சண்டையிடுவதைப்போல பாசாங்கு செய்தாகவேண்டும். அதனால்தான் அவைகளின் பெயர் வேதாந்தி. வேதங்களை முடிவுக்கு கொண்டுவருபவர் என்பதே அதன் பொருள். எவ்வளவு முரண். அவர்கள் வேதங்களைத்தான் திரும்பவும் நிலைநிறுத்துகிறார்கள். மேலும் அவர்கள் வேதங்களை எதிர்த்துத்தான் சண்டையிடுகிறார்கள்.

உபநிடதங்களுக்கு எதிராக புத்தர் சண்டையிருகிறார். மேலும் புத்தரை விட சிறந்த வேதாந்தவாதி யாருமில்லை. சங்கரரோ புத்தருடன் சண்டையிடுகிறார். சங்கரரை விட சிறந்த புத்தமதவாதி எங்கிருக்கிறார்?

அன்பு.

அங்கு அன்பிருந்தால் எந்த கேள்வியுமில்லை. ஏனெனில் அன்பு எப்பொழுதும் எல்லாவற்றையும் இழப்பதற்கு தயாராக இருக்கிறது. ஆனால் அங்கு அன்பு இல்லையென்றால், பின் கேள்விகள், மேலும் கேள்விகள் மட்டுமே. இதுதான் நிலையென்றால் பிறகு ஆறுதல்கள், மேலும் அப்படிப்பட்ட விஷயங்கள் தேவை.

அன்பு பைத்தியக்காரத்தனமானது, அல்லது பார்வையற்றது, அன்பின் பைத்தியக்காரத்தனம் அன்பில்லாமல் விவேகமாக இருப்பதைவிடவும் அளவில்லாத ஆசீர்வாதங்களை கொண்டுவருகிறது. மேலும் அன்பில்லாமல் கண்களோடு இருப்பதை விட அன்பினால் பார்வையற்றிருப்பது ளவிடமுடியாத அளவிற்கு அதிக தகுதி வாய்ந்தது.

ஆனால் அன்பு அங்கிருக்கும் போது அங்கிருக்கிறது அங்கில்லாதபோது அங்கில்லை. அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் அப்படிப்பட்ட குருட்டுத்தனம் அங்கிருக்கிறதா இல்லையா என்பதை ஒருவர் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அன்பில்லாமல் பைத்தியக்காரத்தனம் மட்டுமிருந்தால் அன்பில்லாமல் குருட்டுத்தனம் மட்டுமிருந்தால், பிறகு ஒருவர் சமுதாயம் சொல்வதை கவனமாக கேட்கவேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட

சூழ்நிலைகளில் சமுதாயம் காலப்போகில் தான் சரியென்பதை நிரூபிக்கும். மேலும் அன்பு ஒருபோதும் இப்படிப்பட்ட விஷயங்களை யோசிக்காது என்பதை நினைவில் கொள்.

அன்பு ஏதாவதொன்றாக இருக்குமென்றால் அது அபாயம். அது அறியாதவற்றின் கைகளில் தன்னை ஒப்படைப்பது. அன்பு பாதுகாப்பற்றதன்மைக்குள் குதிப்பது. சமுதாயம் ஒரு பாதுகாப்பு இயக்கம். அதனால்தான் போராட்டம் இயல்பானது. ஆனால் அந்த போராட்டம் பார்ப்பதற்கு தோன்றுவதைப்போல ஒருவருக்கும் சமுதாயத்திற்குமானதல்ல. போராட்டம் ஒருவருடைய சுய பாதுகாப்புக்கும், பாதுகாப்பற்ற தன்மைக்கும் ஆனது.

அங்கு அன்பிருந்தால், பிறகு சமுதாயம் எங்கிருக்கிறது? அங்கு அன்பில்லையென்றால், பின் சமுதாயத்தைத் தவிர வேறென்ன இருக்கிறது?

74.

அன்பு.

தியானத்தின் நீரில் குளித்துக்கொண்டேயிரு. சந்நியாசத்தின் மலர் மலர்ந்தே தீரும். ஆனால் ஒரு தொடர்ந்த முயற்சி தேவை.

தியானத்தின் எதிரொலி உனது ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் கேட்க வேண்டும். சந்நியாசம் எளிமையானது. ஆனால் மலிவானதல்ல. மேலும் அது மலிவாக இல்லாமலிருக்க காரணம் அது எளிமையானது. எளிமையானதை அடைவதே வாழ்வில் கடினமான விஷயம்.

மீரா, என்னுடைய கண்ணீரை ஊற்றியதால் அன்பின் செடி வளர்ந்திருக்கிறதென்று கூறியிருக்கிறார். மீராவுக்கு அன்புதான் தியானம். உனக்கு தியானம் அன்பாக இருக்கும். எப்படியிருந்தாலும் இரண்டும் ஒரு உண்மையின் இரு முனைகள்.

75.

அன்பு.

தோல்வியின் ஆதாரம் அதற்குள் இல்லை. அதனால்தான் திரும்ப திரும்ப அதை கொல்ல முயற்சி செய்தாலும்கூட மனிதனால் தோல்வியை கொல்ல முடிவதில்லை. அதனால்தான் உன்னாலும் அப்படிசெய்ய இயலாது.

நீ ஒரு அரக்கன் அவனுடைய உயிரை ஒரு கிளிக்குள்ளோ அல்லது வேறொரு விலங்கினுள்ளோ மறைத்து வைத்திருப்பதையும் அவன் உயிரை மறைத்து வைத்திருக்கும் பறவையோ, விலங்கோ முதலில் கொல்லப்பட்டால் மட்டுமே அவனை கொல்லமுடியுமென்ற கதைகளை நிச்சயம் படித்திருப்பாய்.

தோல்வியும் அதேபோல பாதுகாக்கப்படுகிறது. அதன் வாழ்வு அதனுள் கண்டறியப்படுவதில்லை. அதன் வாழ்வு வெற்றிக்கான வேட்கைக்குள் உள்ளது. அதனால்தான் வெற்றியை விரும்புபவர்கள் தோல்வியிலிருந்து விடுதலையடைய முடியாது. ஏனெனில் வெற்றியிலிருந்து விடுதலையடைந்தவர்கள் மட்டுமே தோல்வியிலிருந்தும் விடுதலையடைகிறார்கள்.

உன்னுடைய தோல்விகளின் காரணமாக உன்னுடைய தாழ்வு மனப்பான்மை அதிகரிப்பதாக எழுதியிருந்தாய். இல்லை, எனது சகோதரனே! உன்னுடைய ஆராய்ச்சி மாட்டை வண்டியின் பின் கட்டப்பட்டுள்ளது. தாழ்வு மனப்பான்மை தோல்விகளின் காரணமாக அதிகரிப்பதில்லை. மாறாக நீ தாழ்வாக உணர்வதால் நீ வெற்றியை விரும்புகிறாய்.  அது தோல்வியாக மாறுகிறது. ஆனால் நீ ஏன் தாழ்வாக உணர்கிறாய்?.

எல்லோரும் எப்படியிருக்கிறார்களோ... தனிப்பட்ட விதமாக நிகரற்று, ஒப்பிட இயலாத வகையில் இருக்கிறார்கள்.

ஒப்பீடு சாத்தியமற்றது. ஆனால் ஒப்பிடுதல்தான் கற்றுக்கொடுக்கப்படுகிறது,.

ஒப்பிடுதல் உனது பழக்கம். தவறாக சொல்லிக்கொடுக்கப்பட்ட தவறான, அபாயகரமான, அறியாமையில் பிறந்த பழக்கத்தை புரிந்துகொள். ஏனெனில் தவறை தவறென்று அறிந்து கொள்வதே அதிலிருந்து விடுதலையடைவதாகும்.

76.

அன்பு.

கடல் ஒன்றுதான். அலைகளும் அப்படித்தான். அலைகள் நிறைய இருப்பதுபோலத் தோன்றுகிறது. அவைகள் நிறைய இருக்கமுடியாது. ஒவ்வொரு அலைக்குள்ளும் அதே கடல்தான் உள்ளது. அது மட்டுமே உள்ளே வருகிறது. அது மட்டுமே வெளியே செல்கிறது. அலைகள் பார்க்கப்படுகின்றன. ஏனெனில் அவைகள் கடலின் காலடிதடங்கள். அதன் வருவதும் போவதும்.

ஆனால் அலைகள் வெறுமனே அங்கில்லை. கடல் மட்டுமே அங்கிருக்கிறது. ஆனால் பார்க்கப்படுவது அலைகள். கடல் பார்க்கப்படுவதில்லை. வார்த்தைகள் பார்க்கப்படுகின்றன. சத்தியம் பார்க்கப்படுவதில்லை. உடல்கள் பார்க்கப்படுகின்றன. ஆனால் இருப்புத்தன்மை பார்க்கப்படுவதில்லை.

77.

அன்பு.

கடல் அலைகளை பார்த்துக்கொள்கிறது. அலைகள் எப்போதும் கவலைப்பட தேவையில்லை. வானம் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொள்கிறது. மேலும் நட்சத்திரங்கள் எப்போதும் பரவசத்தில் இருக்கின்றன. மனிதன் எப்போதும் கவலைப்படுகின்றான். அவன் துன்பத்தில் மூழ்கி விடுகிறான். அவன் வேதனையால் மூடப்படுகிறான், ஏனெனில் அவன் தன்னைத்தானே கவனித்துக்கொள்ளும் பைத்தியக்காரத்தனத்தில் விழுந்துவிட்டான்.

78.

அன்பு.

தன்னையிழப்பது எல்லாவற்றையும் அடைவதாகும். ஆனால் அந்த இழத்தல் முழுமையானதாக இருக்கவேண்டும். ஏனெனில் சுயத்தின் ஒரு பகுதி பிடித்து வைக்கப்பட்டிருந்தாலும்கூட எல்லாமும் பிடித்துவைக்கப்பட்டுள்ளது. அது ஏதுமில்லை அல்லது எல்லாமும். அங்கு நடுவழி எதுவுமில்லை. சுயத்திற்கு நடுவழி எதுவுமில்லை.

79.

அன்பு.

உலகம் ஒரு ஆனந்தமயமான விளையாட்டாக மாறும்பொழுது சந்நியாசம் நிகழ்கிறது.

ஒரு உலகியல் மனிதன் ஒரு சுமையைப் போல உலகத்தை இழுத்துக்கொண்டே வாழ்கிறான். உலகம் ஒரு விளையாட்டு என்று அறிவதே சந்நியாசம்.

சந்நியாசம் உலகத்திற்கு எதிரானதல்ல. மாறாக அது உலகத்தைப் பற்றிய உனது அணுகுமுறையை மாற்றிக்கொள்வதேயாகும். மற்றும் இன்பம், துன்பம் விருப்பு, வெறுப்பு புகழ், மறதி அனைத்தும் நமது அணுகுமுறை மாறும் கணத்தில் மாறிவிடுகின்றன.

நமது அணுகுமுறை, நாம் உலகைப் பார்க்கும் விதம், நமது வாழ்வை வடிவமைக்கிறது.

சந்நியாசம் விவாதமோ, கோட்பாடோ அல்ல. என்னுடைய பார்வையில் உலகத்தை சந்நியாசத்தின் பார்வையில் பார்க்காதபோதுதான் விவாதங்களும், கோட்பாடுகளும் நிகழ்கின்றன. சந்நியாஸ் என்பது, உச்சகட்ட சாறு, உச்சகட்ட அனுபவமிலை தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் சந்நியாஸ் என்பதன் பொருள் பிரபஞ்சத்தோடு இணைந்து பங்கெடுத்துக் கொள்வது. பல சமயங்களில்

பாறைகளோடும், கூழாங்கற்களோடும் நமக்கிருக்கும் பிணைப்பே நம்மை வைரசுரங்கள்வரை செல்ல அனுமதிப்பதில்லை. ஆனால் நான் உன்னை விடமாட்டேன். வைரச்சுரங்கம் அருகில்தான் உள்ளது. நீ அதனை அடைந்தாக வேண்டும்.

80.

அன்பு.

ஒருவேளை உனக்கு சாறைப்பற்றி எந்த கருத்துமில்லை. ஆனால் அங்கு தாகம் மட்டுமே இருந்தாலும்கூட அது போதுமானது. இந்த சாறை உடலில் நீ எங்கு கண்டறிவாய்? அங்கு அதன் பிரதிபலிப்பு மட்டுமே உள்ளது. சாறு ஆத்மாவில் கண்டறியப்படுகிறது. அல்லது ஒருவேளை ஆத்மாதான் சாறு என்று சொல்வது சிறப்பாக இருக்கும். இந்த சாறின் எதிரொலிதான் உடலில் கேட்கப்படுகிறது. இந்த எதிரொலியைப் பிடித்து அதன் மூலத்தைத் தேடு. இல்லாவிடில் உடல் காலப்போக்கில் பலவீனமடைந்து குழந்தை போல ஆகிவிடும். பிறகு எதிரொலி கேட்காது. இது மட்டுமே உடலின் துன்பம். இது மட்டுமே அனுபவித்தலின் துன்பம். இது மட்டுமே புலன்களின் துன்பம்.

இதனால்தான் இன்னும் நேரமிருக்கும்பொழுதே சக்தி இருக்கும்பொழுதே

உண்மையான சாறு கண்டிப்பாக கண்டறியப்பட வேண்டும். இல்லாவிடில், பின்னர் வருத்தங்கள் மட்டுமே மிச்சமிருக்கும்.

நீ சொல்வதைப் போல பறவைகள் தானியங்களை ஏற்கனவே தின்றபிறகு வருத்தப்பட்டு என்ன பயன்?

81.

அன்பு.

அங்கு காத்திருத்தல் இருக்காது. பிரபஞ்சத்தின் கதவுகளில் காத்திருத்தல் எப்படி இருக்க முடியும்? ஆனால் இப்போதைக்கு காத்திருத்தல் தேவை. உனக்காக காத்திருத்தல் தேவை.

திடீர் பரவசத்தையோ அல்லது திடீரென பொங்கிவரும் சக்தியோ உன்னால் தாங்க இயலாது. அதனால்தான் காலம் தேவை. எல்லா விஷயத்திற்கும் காலம் தேவைப்படுகிறது. ஒரு விதை உடைபட நேரம் எடுத்துக் கொள்கிறது. ஒரு முளை தோன்ற நேரம் எடுத்துக் கொள்கிறது.ஒரு மரம் மரமாக நேரம் எடுத்துக் கொள்கிறது. அதனுடைய கனி வளர நேரம் எடுத்துக் கொள்கிறது. அதற்கு பிறகும்கூட கனி கனிவதற்கு நேரமெடுத்துக் கொள்கிறது.

எது அதனுடைய சொந்த நேரத்தில் நிகழ்கிறதோ, அது மட்டுமே மங்களகரமானது.

82.

அன்பு.

நமக்கு வாழ்க்கையை சுத்தமாகத் தெரியாது. அதனால்தான் நாம் சலிப்படைகிறோம். நாம் வாழ்க்கையை இயந்திரத்தனமான ஏதோவொன்றாக மாற்றிவிடுகிறோம். அதனால்தான் நாம் சலிப்படைகிறோம்.

நாம் வாழ்க்கையை வாழும் விதத்தினாலேயே, அதனை இழுத்துக்கொண்டு செல்வதினாலேயே நாம் சலிப்படைகிறோம். வாழ்க்கையில் சலிப்பு கிடையாது. நாம் வாழ்வதற்கு பயப்படுவதிலிருந்து அது வருகிறது. நாம் இறப்பைக் கண்டு மட்டுமல்ல, வாழ்க்கையைக் கண்டும் பயப்படுகிறோம்.

உண்மையில் நாம் வாழ்வைக்கண்டு பயப்படுவதினாலேயே இறப்பைக் கண்டு பயப்படுகிறோம். இறப்பு வாழ்வின் முடிவல்ல, அது வாழ்வின் உச்சகட்டம். அதனால்தான் நான் வாழு, அச்சமின்றி வாழு என்று கூறுகிறேன்.

கடந்தகாலத்திற்கு விடையளித்துவிடு. மனிதன் பயத்தின் காரணமாக

அதனை பிடித்துக் கொண்டிருக்கிறான். எதிர்கால கனவுகளை அமைத்துக்கொள்ளாதே. நீ எதிர்காலத்தில் வாழ்வதைப்பற்றி திட்டமிட்டுக்கொண்டேயிருக்கிறாய். ஏனெனில் நீ இன்று வாழ்வதை தவிர்க்க விரும்புகிறாய்.

இன்று இப்போது இங்கே வாழ்.

வருவதும் கடந்ததும் ஏமாற்று வேலைகள். இந்த கணம் மட்டுமே உண்மை. இந்த கணம் மட்டுமே நித்தியமானது.

83.

அன்பு.

தெய்வீகத்தின் மீது பித்தாவது ஒரு கலை.
அது ஒருவகையான பித்து. எனவே கண்டிப்பாக பித்தனாக மாறு. ஆனால் நிச்சயமாக முறையை மறந்துவிடாதே.

நான் முறையை தியானமென்று அழைக்கிறேன். மீரா அன்பு என்று அழைக்கிறாள். மஹாவீரர் எளிமையென்று அழைக்கிறார். நீ என்ன பெயர் கொடுக்கிறாய் என்பது பொருட்டல்ல, முக்கியமாக அதனை மறந்துவிடாதே. மனம் அதனை மறக்கவிரும்புகிறது.

எப்படியிருந்தாலும் மனதிற்கு அது மரணம்.

தியானத்தை மறப்பதற்கு மனம் பயன்படுத்தும் மிக எளிமையான மிகுந்த தந்திரம் வாய்ந்த யுக்தி என்னவென்று உனக்குத் தெரியுமா?

தியானத்தைப்பற்றி சிந்தித்தல். எனவே நினைவில் கொள். நீ தியானத்தைப்பற்றி சிந்திக்கப்போவதில்லை. நீ அதனை செய்யப்போகிறாய்.

84.

அன்பு.

வாழ்வு ஒரு மர்மம். அதனை வாழ முடியும். வாழ்வதன் மூலம் அதனை அறிந்து கொள்ள முடியும். ஆனால் ஒரு கணக்கைப் போல அதனை தீர்க்க முடியாது. அதுவொரு பிரச்சனையல்ல அதுவொரு சவால். அதுவொரு கேள்வியல்ல. அதுவொரு சாகசம்.

அதனால்தான் வாழ்க்கையைபற்றி கேள்விகள் மட்டுமே கேட்டுக்கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் விடைகளின்றியே இருக்கிறார்கள். அது அவர்களுடைய சொந்த செயல்பாடு அல்லது அவர்கள் கண்டறியும் விடைகள் விடைகளல்ல. அப்படிப்பட்ட விடைகளை புனிதநூல்களில் கண்டறியலாம்.

உண்மையில் மற்றவரிடமிருந்து பெறப்படும் எந்த விடையும் விடையல்ல. ஏனெனில் வாழ்க்கையின் சத்தியத்தை கடன் வாங்கமுடியாது. அல்லது கேள்வி கேட்பவர்களே அவர்களுடைய சொந்த விடையை உருவாக்கி விடுவார்கள். இந்த வழியில் அவர்கள் ஆறுதல் அடையலாம். ஆனால் தீர்வுகளை அடையமுடியாது.

ஏனெனில், உருவாக்கப்பட்ட விடைகள் விடைகளே அல்ல. அறியப்பட்ட விடைகள் மட்டுமே விடைகளாக இருக்கமுடியும். அதனால்தான் கேட்காதே வாழ்ந்து அறிந்துகொள் என்று நான் கூறுகிறேன்.

இது மட்டுமே மதத்தன்மைக்கும் தத்துவத்திற்கும் உள்ள வித்தியாசம். தத்துவம் கேள்வி கேட்கிறது. மதத்தன்மை வாழ்கிறது. மேலும் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் தத்துவம் கேள்வி கேட்கிறது, ஆனால் ஒருபோதும் விடைகளை கண்டறிவதில்லை. மதம் கேள்வியே கேட்பதில்லை, ஆனாலும் விடைகளை கண்டறிகிறது.

85.

அன்பு.

அன்பின், மரியாதையின் இசை ஒவ்வொரு இதயத்திலும் எதிரொலிக்க வேண்டும். மனிதனின் இதயக்கோவில் காலியாகவும், வெறுமையாகவும் உள்ளது. தர்க்கத்தின் சாம்பலைத்தவிர அங்கு வேறொதுவுமில்லை.

சாம்பலில் மகிழ்ச்சி கொள்ள இதயம் குளிர் காயும் இடமல்ல. இதயத்திற்கு தெய்வீகத்தின், பிரார்த்தனையின், அன்பின் மலர்கள் தேவை. இதயத்திற்கு அழிவற்றதின் புலனாகாததின் இருப்பின் இசை தேவை.

இதயம் தாகத்தை தீர்த்துக் கொள்ள அதற்கு ஒளி, பரவசம், நன்றியுணர்வு தேவை.

தாகத்தோடு இருப்பவர்களிடம் செல். பாடு....பிரார்த்தனைத்தன்மையே அவர்களின் இதயங்களில் மொழி. ஆடு....அவர்களையும் அழைத்து உனது ஆடலில் சேர்ந்துக்கொள். மீரா உன்னில் மறுபிறப்பெடுக்கட்டும். அது மட்டுமே உனது சேருமிடம். அதற்காக மட்டுமே நான் உனக்கு அழைப்பு விடுத்தேன். மருத்துவருக்கு எனது அன்பு.



அன்பு.

நான் வருவேன். உனது தூக்கத்தில் கூட நான் வருவேன். எப்படியிருந்தாலும் உனது தூக்கம் கலைக்கப்பட வேண்டும். உனது கனவுகளில் நான் நுழைவேன். ஏனெனில் உனக்கு அந்த கனவிலிருந்து விடுதலை அளிக்க வேண்டும். ஆனால் நீ எதை உனது விழிப்பு நிலையென்று சொல்கிறாயோ அது உண்மையிலேயே அதுதானா அல்லது அது இன்னொரு விதமான தூக்கமா? விழிப்போடிருக்கிறாய் என்பதற்கு உனது கண்கள் திறந்திருக்கின்றன என்பது மட்டுமே போதாது. விழிப்போடு இருப்பது அவ்வளவு சுலபமாக இருந்திருந்தால்!!

உனது கண்கள் திறந்திருக்கும் காரணத்தால் கனவுகள் நிற்பதில்லை. நமது விழித்திருக்கும் நிலை வழக்கமாக நாம் விழித்திருக்கிறோம் என்ற மாயையே. மேலும், நான் சிந்தனையென்று சொல்வது நமது கனவுகள் வார்த்தைகளாக மாறுவதேயாகும். ஆனால், நீ இந்த உறக்கத்தை அடையாளம் கண்டு கொண்டால், நீ அதிலிருந்து எழத் தொடங்குவாய். மேலும், நீ இந்தக் கனவுகளைப்பற்றி உணர்வடைந்தால் அவை நிற்கத் தொடங்கிவிடும். கனவுகள் இல்லா இடத்தில் உறக்கமில்லை. உறக்கமில்லா இடத்தில் மாயையில்லை. மேலும் மாயையில்லாத போது எது இருக்கிறதோ அதைத்தான் நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்.

87.

அன்பு.

தத்துவத்தில் நேரத்தை வீணடிக்காதே. தீர்வு பிரபஞ்சத்தின் ஆழத்தில் கண்டறியப்படுகிறது. எண்ணங்களின் அலை மேல்மட்டத்திற்கு கீழே போவதில்லை. வைரங்கள் கடலின் ஆழங்களில் கண்டறியப்படுகின்றன. அவைகளை அலைகளின் நுரைகளில் தேடுபவன் வீணாக தேடிக் கொண்டிருக்கிறான்.

தத்துவம் என்பது நமது எண்ணங்களென்னும் அலைகளின் மேலெழும் நுரைகளைத்தவிர வேறொன்றுமில்லை. அந்த நுரைகளின் மீது கதிரவனின் ஒளிக்கற்றைகள் படும்போது அவைகள் மிக அழகாக தோன்றுகின்றன. ஆனாலும்கூட அவை வெறும் நுரைதான். நீ கையிலெடுக்கும் கணத்தில் அவை மறைந்துவிடும். அதனால்தான் சிந்தனையல்ல, தியானமே கதவு. வார்த்தைகளல்ல, வெறுமைதான் கதவு என்று நான் கூறுகிறேன்.

பிரபஞ்சம் ஏன் இருக்கிறது என்று கேட்காதே, பிரபஞ்சம் என்னவென்று தேடு.

88.

அன்பு.

கடவுள் தன்மையின் கோவிலுக்கான பாதை பல பிறவிகள் தேடியபிறகு

கிடைக்கிறது. ஆனால் கண்டறிந்தபிறகும் நாம் பலமுறை பாதையை தவறவிட்டு விடுகிறோம்.

இன்று நீ அந்த பாதையின் கதவில் நிற்கிறாய். இப்போது தவறான வழியில் செல்லாதே. தீர்மானத்தோடு முன்னால் சென்று கொண்டே இரு.

பல கவர்ச்சிகள் உன்னை நிறுத்தும். பல பழக்க வழக்கங்கள் உன்னை நிறுத்தும். சோம்பேறித்தனம் உன்னை நிறுத்தும். மனம் இதற்கு பதிலான வேறு மாற்றங்களை பரிந்துரைக்கும். இந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் கவனத்துடனிரு.

ஏனெனில் நீ பல பிறவிகளாக தேடிவரும் கதவு சில கணங்களில் தவற விடப்படலாம், அறியாததைப்பற்றியதொரு பயம் உன்னை சூழ்ந்துகொள்ளும். அறியாதவற்றுள் நுழைவது குறித்து நீ பாதுகாப்பின்மையை உணர்வாய். ஆனால் துணிச்சலை சேகரித்துக்கொண்டு அறியாததை தழுவிக்கொள்.

ஏனெனில் இந்த அறிமுகமற்ற தன்மைதான், இந்த அறியாததுதான் கதவு.

89.

அன்பு.

அன்பு எப்போதும் காரணமற்றது. அதனால்தான் காரணத்தோடு கூடிய அன்பு அன்பாக இருப்பதில்லை. அன்பு ஒரு ஒப்பந்தமல்ல. அது ஆதாயங்களின் வியாபார உலகத்தை கடந்தது. அதுதான் அதன் அழகு.

இந்த பொருளியல் பூமியில் பொருளியலை கடந்த ஒளிக்கற்றை அன்பு. அதனால்தான் அன்பின் மூலமாக ஒருவர் பிரார்த்தனை தன்மையை அடையமுடியும். பிரார்த்தனைத் தன்மை மூலமாக கடவுளை அடையமுடியும். அதனால்தான் நான் அன்பைத்தவிர வேறு மதமேயில்லையென்று கூறுகிறேன்.

90.

அன்பு.

மதக்கொள்கைகள் இறுதியில் எந்த மதிப்புமில்லாதவை. மதிப்பு அனுபவங்களில் பெறப்படுகிறது. பெரும்பாலும் மதக்கொள்கைகள் நீயொரு அனுபவத்தில் நுழைவதை தடை செய்யும். ஏனெனில் மதக்கொள்கைகள் உனது தன்னுணர்வை மூடியிடுகின்றன. தன்னுணர்வு சுதந்திரமாக புதியதைப் பற்றிய ஆர்வத்துடன் பிறந்திருக்க வேண்டும். தன்னுணர்வு அறியாததை வரவேற்க வேண்டும். அறியாததை, அறிமுகமற்ற உண்மையை தழுவிக்கொள்ள ஆர்வத்துடன் தயாராக இருக்கவேண்டும்.

நீ அப்படிப்பட்ட ஒரு தன்னுணர்வை கொண்டிருக்கிறாய் என்பதையறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதுவொரு சிறந்த புதையல். மேலும் சத்தியத்தை தேடும் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் ஒரு சாதகனுக்கு அடிப்படையான முன்னேற்பாடாகும்.

மதங்களில் உண்மை கண்டறியப்படுவதில்லை. அங்கு அது கண்டறியப்படவும் முடியாது. சத்தியமும் புனிதநூல்களும் எப்போதும் சந்திப்பதில்லை. மதங்கள் மிகவும் குறுகியவை. புனிதநூல்கள் மிகவும் வரையறுக்கப்பட்டவை. மேலும் வார்த்தைகளில் சத்தியத்திற்கு எங்கு இடமுள்ளது?

91.

அன்பு.

அங்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை. அங்கு தொடக்கமற்ற, முடிவுமற்ற வாழ்க்கை மட்டுமே உள்ளது. பிறப்புக்கு முன்னும் வாழ்க்கையுள்ளது. இல்லாவிடில் யார் பிறக்கிறார்கள்? அது இறப்புக்கு பிறகுமுள்ளது இல்லாவிடில் யார் இறக்கிறார்கள்.?

பிறப்பும் வாழ்க்கையின் தொடக்கமல்ல. இறப்பு வாழ்க்கையின் முடிவல்ல.

பிறப்பு, இறப்பு ஆகியவை வாழ்க்கைக்குள் நிகழும் நிகழ்ச்சிகள். நீர்குமிழிகள் உருவாகி ஒரு ஆற்றில் உடைவதைப்போல மனிதனின் நீர்க்குமிழி வடிவங்களும் வாழ்க்கைக்குள் உடைகின்றன. இந்த நீர்குமிழியின் பெயர் ஆணவம். மேலும் நிச்சயமாக அது பிறக்கிறது, இறக்கிறது.

பிறப்புக்கும் இறப்புக்குமிடையே நிகழ்வதற்கு பெயர் ஆணவம். ஆகையால்தான் ஆணவத்தோடு இருப்பவர்கள் வாழ்க்கையை அறிவதில்லை. நீ வாழ்க்கையை அறிய விரும்பினால்.... நீ ஆணவத்திலிருந்து விழித்துக் கொள்ள வேண்டும். நீர்குமிழி ஆறு மட்டுமே இருக்கிறது, அது இல்லையென்பதை மறந்துவிட்டது.

92.

அன்பு.

எப்போதெல்லாம் ஒரு தேவை இருக்கிறதோ அப்போதெல்லாம் என்னை அழை. நான் வருவேன்.

இப்போது இதுவொரு உடலியல் உறவு மட்டுமல்ல. ஆத்மாவின் நேரடியான உறவு உள்ளது. முதலில் அது உனது கனவுகளில் இருக்கும். பிறகு நீ கண்களை திறந்திருக்கும்போதும் நீ விழித்திருக்கும்போதும் என்னைக் காண்பாய். ஆனால் காரணமில்லாமல் அழைக்காதே. ஆர்வம் காரணமாகவோ உளவியல் காரணமாகவோ அழைக்காதே.

ஒரு வேலையைச் செய்ய ஊசி போதும் எனும்போது
ஒரு வாளை உபயோகப்படுத்தக்கூடாதல்லவா?

93.

அன்பு.

புரிந்துகொள்ளப்படக் கூடியது அன்பல்ல. மேலும் எல்லாவற்றிக்கும் மேல் புரிந்து கொள்ளுதல் அனைத்துமல்ல. புரிந்து கொள்ளுதலை கடந்து நிறைய உள்ளது. புரிந்து கொள்ளுதலை கடந்தது ஆழமானது. புரிந்து கொள்ளுதல் என்பது மேல் மட்டத்திலுள்ளது.

புரிந்து கொள்ளுதல் எப்பொழுதும் மேலேயே உள்ளது. அதனால்தான் புரிந்து கொள்ளுதலோடு நின்றுவிடும் மனிதனை விட அதிக முட்டாள் யாருமில்லை.

அலைகளை புரிந்து கொள்ளலாம், ஆனால் கடல் புரிந்து கொள்ளுதலை கடந்தது. எனவே நிச்சயமாக புரிந்து கொள். ஆனால் புரிந்து கொள்ளுதலை உனது முடிவாக எடுத்துக் கொள்ளாதே. அதனைக் கடந்தும் பார்த்துக்கொண்டேயிரு. அதனைக் கடந்தும் சென்று கொண்டேயிரு.

புரிந்து கொள்ளுதலைக் கடந்து செல்லுதலே காலப்போக்கில் சத்தியத்தைப் புரிந்து கொள்ளுதலாக மாறுகிறது.

94.

அன்பு.

பிரபஞ்சத்தின் கைகளில் தன்னை ஒப்படைத்தபின் அங்கு செல்வதற்கு எதுவும் மிச்சமில்லை. பின் அது அனைத்தும் தாமாகவே நிகழத் தொடங்கிவிட்டது என்பதைப் போன்றது.

இப்போது உனது வாழ்வில் இது நிகழத் தொடங்கியிருக்கிறது என்பதில் மகிழ்ச்சி கொள். நீந்துதல் கைவிடப்பட்டு மிதத்தல் தொடங்கியுள்ளது. நான் இருப்பின் இந்த நிலையை சந்நியாசம் என்றழைக்கிறேன்.

ஆறு உன்னை கடலிடம் அழைத்து போய்க் கொண்டேயிருக்கிறது. எனவே ஏன் நீந்தவேண்டும்? ஏன் முயற்சி செய்யவேண்டும்? ஏன் முயற்சிக்க வேண்டும்?

இந்த முயற்சியற்ற தன்மை நளினமுள்ளது. ஆனால் இதற்குப் பொருள் செயலற்ற தன்மையல்ல. மிதத்தலும் ஒரு செயல்தான். ஆனால் மிதக்கும்போது செய்பவர் இருப்பதில்லை. செய்பவர் இல்லாமல்

செயல் இருக்கும்போது அது செயலற்ற செயல். ஆனால் செயலில்லாமல் இருக்கும்போது செய்பவர் இருந்தால், அது செயலற்றதன்மையல்ல. செயலற்ற செயல் என்பது பிரபஞ்சத்திடம் தன்னை ஒப்படைக்கும் செயல்.

95.

அன்பு.

ஒருவர் தன்னுடைய உள்பலத்தை தானாகவே பெருக்கிக் கொள்ள முடியாது. அது தனது காலணிகளைப் பிடித்து தன்னையே தான் தூக்க முயற்சிப்பதைப் போன்றது.

பிரபஞ்சத்திடம் சரணடைவதன் மூலமாக உள்பலம் வளர்கிறது.
சரணடைவதைத் தவிர பலத்திற்கு வேறு எந்த வழியுமில்லை. அடைவதற்கு மறைவதைத் தவிர வேறெந்த வழியுமில்லை. விதை மறைந்து ஒரு மரமாகிறது. ஆணவம் இறக்கும்பொழுது இருப்பு வெளிப்படுகிறது.
ஆணவம் பலவீனம், இருப்பு பலம்.

சுயபலம் என்ற வார்த்தை சரியல்ல. சுயமே பலம்.

96.

அன்பு.

ஏதோவொரு காரணத்திற்காக வாழ்பவர்கள் எப்பொழுதும் வழி தவறித்தான் போகிறார்கள். அவர்களுடைய வாழ்வு ஒரு சுமையாகிறது. ஏனெனில் காரணம் எப்போதும் நாளைக்கானது, வாழ்வது இப்போதுள்ளது.

தேவையில்லாத பதட்டங்களை வளர்க்காதே. தேவையில்லாத முரணபாட்டை வளர்க்காதே. எதிர்காலத்திலிருந்து நிகழ்காலத்தை உருவாக்க முயற்சி செய்யாதே - ஏனெனில் அது சாத்தியமில்லை. எதிர்காலம் நிகழ்காலத்திலிருந்து வெளிவரட்டும். அது மிகவும் தன்னிச்சையாக வருகிறது. ஆகவே நீ செய்வதற்கு எதுவுமிருக்காது.

நீ வெறுமனே இன்று வாழ். இன்று வாழ்வதே போதுமானது. நியூமேன் நான் தொலைவிலிருக்கும் காட்சியை காணவேண்டுமென்று கேட்கவில்லை. ஒரு காலடி எனக்கு போதுமானது என்று பாடியுள்ளார். ஆமாம். அது அப்படித்தான். இன்று எப்போதும் இறப்பதற்கு சரியாக இருந்ததில்லை. இறப்பதற்கு நாளை தேவை.

அதனால்தான் நாளைக்காக வாழ்பவர்கள் வாழ்வதில்லை. இறக்க மட்டுமே செய்கிறார்கள். இன்று இப்போது முற்றிலுமாக முழுமையாக வாழ். நாளையை அதுவே கவனித்துக்கொள்ளும்.

97.

அன்பு.

நாம் பார்க்கமுடிகிற கண்களைத்தவிர பிற கண்களுமுள்ளன.
அவைகளின் மூலமாக நான் உன்னைக் கண்டேன்.

நாம் பார்க்க முடிகிற காதுகளைத் தவிர வேறு காதுகளும் உள்ளன.
அவைகளின் வழியாக நான் உன்னைக் கேட்டேன்.

உடலினால் அல்ல, இதயத்தினால் நான் உன்னைத் தொட்டேன்.

நீ தியானத்திற்குள் நகர்ந்தால் உன்னால் இவை அனைத்தையும் புரிந்துகொள்ள முடியும். பிரபஞ்சமும் முடிவற்றதாக தொடக்கமற்று, முடிவற்று புலங்களை கடந்துள்ளது. இவை அனைத்துக்குமான தொகுப்பு பெயர்தான்
கடவுள்தன்மை என்பதாகும்.

நீ தொடங்க வேண்டுமென்று நான் விரும்பும் பயணம் அதுதான்.
தயாராகி வா. ஏனெனில் முடிவில் என்னிடம் வருவதற்கு
எந்த காரணமும் இல்லை.

அன்பு.

முன்னால் நகர்ந்து சென்று கொண்டேயிரு. பயப்படாதே. நான் உன்னுடன் இருக்கிறேன். பிரபஞ்சம் உன்னுடன் இருக்கிறது. வேறென்ன வேண்டும்? உனது மனம் தூய்மையாகவும் வெகுளியாகவும் இருக்கிறது. தியானம் உனக்குள் வெடிக்கும் கணம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. உள்ளே என்ன நிகழ்ந்தாலும் அவை எல்லாமும் உன்னை அந்த கணத்திற்கு தயார் படுத்துகின்றன. தடைகளாக தோன்றுபவை தடைகளல்ல. அவை சோதனைகள்.

பாதையில் ஒருவர் எதிர்கொள்ளும் பாறைகளெல்லாம் எதிரிகளல்ல, அவை நண்பர்கள். அவைகளை படிகற்களாக மாற்றிக்கொள்ள முடியும். அவைகள் படிகற்களாக மாறுவதற்காக பாதையில் உள்ளன. பிறகு தேவைப்பட்டால் நான் உன்னை தள்ளியும் விடுவேன். ஆனால் அவை அனைத்தையும் என்னிடம் விட்டுவிடு. நீ அதைப்பற்றி கவலைப்பட தேவையில்லை.

99.

அன்பு.

சமுதாயமென்பது ஒரு மக்களின் சேர்க்கை மட்டுமே.
அதனால்தான் முடிவில், அடிப்படையில் சமுதாயம் மக்களுடைய மனதின்

பிரதிபலிப்பு மட்டுமே.

தனிமனிதனின் மனம் ஓய்வற்று இருந்தால் சமுதாயம் அமைதி நிறைந்ததாக இருக்கமுடியாது. அதற்கு வேறெந்த மாற்றுவழியும் இல்லை, எந்த குறுக்குவழியும் இல்லை.

தனிமனிதன் நிலைமாற்றமடைய தியானமே யுக்தி. இன்னும் அதிகமான மக்கள் தியானத்திற்குள் நுழைய நுழைய ஏதாவதொன்று நிகழக்கூடும். அதிகமான மக்கள் பரவசத்தினுள் நுழையும்பொழுது மட்டுமே ஏதாவது நிகழக்கூடும்.

பிரபஞ்த்திற்குள் ஒதுங்கிக் கொள்வது மட்டுமே ஒரே வழி.

100.

அன்பு.

எல்லோருடைய நினைவுகளும் என்னுடன் இருக்கிறது. அது வருவதில்லை. அது எப்போதும் அங்கில்லையென்றால் அது திரும்பி வரவேண்டும். மேலும் வருவதில் வலி இருக்கும். ஏனெனில் வருவதில் போவதும் மறைந்துள்ளது.

இருப்பதில் அங்கு பரவசமுள்ளது. பிறவி அங்கு வருவதுமில்லை. போவதுமில்லை. ஒருவேளை இதனை புரிந்து கொள்ள முடியாமல் போகலாம்.

இதை யாராவது என்னிடம் சொல்லியிருந்தால் நானும் புரிந்து கொண்டிருக்கமாட்டேன். வெறுமனே புரிந்துகொள்ள முயல்வதன் மூலம் புரிந்துகொள்ள முடியாதது ஏராளம் உள்ளது. மாறாக அது இன்னமும் சிக்கலாகி விடுகிறது.

நான் விஷயங்களை அவை இருப்பதைப்போலவே கூறுகிறேன். நான் யாரையும் நினைவில் வைத்துக்கொள்வதில்லை. ஆனாலும்கூட நினைவு இருக்கிறது. அது இதயத்துடிப்பைப்போல. நான் அவைகளை கவனிக்கிறேனோ இல்லையோ இதயம் துடித்துக்கொண்டே இருக்கிறது. அல்லது சுவாசத்தைப்போல நான் வேண்டுமென்று சுவாசிக்கிறேனோ இல்லையோ சுவாசம் தொடர்கிறது. அதைப்போலவேதான் எனது நினைவுகளும். அதனால்தான் யாராவதொருவர் என்னை உங்களுக்கு நினைவிருக்கிறதா என்று கேட்கும்பொழுது எனக்கு பிரச்சனையாகிவிடுகிறது. நான் இப்போது என்ன சொல்லவேண்டும் என்று நினைத்துப்பார்க்கிறேன்.

ஆமாம் என்பது சரியானதல்ல, இல்லை என்பதும் சரியானதல்ல, அதனால்தான் நான் சிரித்துவிட்டு மௌனமாகி விடுகிறேன். ஆனால் நீ சிரிப்பதற்கோ மௌனமாக இருப்பதற்கோ கூட வாய்ப்புத்தராமல் என்னை எழுத்தில் கேட்டிருக்கிறாய்.

அன்பு.

முழுவருடமும் ஓடிவிட்டது. இப்போதுதான் ஒரு கடிதமெழுத உனக்கு துணிச்சல் வந்ததா?

நான் உன்னை உனது கனவுகளில் அழைத்தேன். நீ நிச்சயமாக அதைக் கேட்டிருப்பாய். நீ இன்னமும் அதைப் புரிந்துகொள்ள வில்லையா?

அழைப்பு உன்னை எழுப்புவதற்காக தரப்பட்டது. அழைப்பு உனது தூக்கத்தை கலைப்பதற்காக தரப்பட்டது. இப்போது எழுந்து நட. நீ நடக்காவிட்டால் சேருமிடம் வெகுதொலைவிருக்கும். நீ நடந்தால் அது மிகவும் அருகில் இருக்கும். அருகில் கூட அல்ல.... ஏனெனில் நெருக்கமாக இருப்பதும் ஒரு தொலைவுதான். உண்மையில் நீதான் சேருமிடம். நட..... உன்னைக் கண்டறி.

102.

அன்பு.

பாக்தாத்திலிருக்கும் ஒரு முடிதிருத்துபவன் மிகுந்த சிரமத்திலிருந்தான். அவனுடைய கடைக்கு வரும் அனைவரும் ஒரு மந்திரவாதி தனது

கோட்டையில் சிறை வைத்திருக்கும் ஒரு அழகான இளவரசியைப் பற்றி பேசுகிறார்கள்.

இளவரசியை விடுதலை செய்பவர் எவரோ, அவர் அவளை திருமணம் செய்து கொள்வது மட்டுமல்ல....அவளுடைய முழு ராஜ்ஜியத்திற்கும் வாரிசாகிவிடுவார். ஆனால் இளவரசியை விடுவிப்பது மிகவும் கஷ்டமான விஷயமாக இருந்தது. கோட்டை ஒரு அடர்ந்த காட்டின் ஆழமான உட்பகுதியில் இருந்தது.

விடுவிக்கச்சென்ற நூறுபேரில் 99 பேர் காட்டுவிலங்குகளால் தாக்கப்பட்டனர். கோட்டை ஒரு மலையின் உச்சியில் அமைந்திருந்தது. காட்டு விலங்குகளிட மிருந்து தப்பித்தவர்களில் நூற்றில் 99 பேர் அரக்கர்கள் மேலிருந்து உருட்டிவிடும் பாறைகளின் கீழ் நசுக்கப்பட்டனர். அரக்கர்களிடமிருந்து தப்பித்தவர்கள் கோட்டைக்கதவில் அவர்கள் நுழையும்போது எழுந்த தீயில் சாம்பலாகினர். ஒரு சில அதிர்ஷ்டச்சாலிகள் காட்டை கடந்துவிட்டனர். அவர்களில் ஒரு சிலர் அரக்கர்களைக்கூட கடந்து சென்றுவிட்டனர். ஆனால் இதுவரை ஒருவர் கூட கதவைக்கடந்து செல்வதில் வெற்றிபெறவில்லை. முடிதிருத்துபவரால் இனிமேலும் தாங்கமுடியவில்லை. ஒரு மனிதனின் பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? அவன் தன்னிடமிருக்கும் அனைத்தையும் விற்றுவிட்டு அழகான இளவரசியைத் தேடி புறப்பட்டான். ஆனால் அவன் ஆச்சரியப்படும் விதமாக காட்டில் அவன் எந்த

காட்டுவிலங்குகளையும் பார்க்கவில்லை. அவன் நன்றி சொல்லும்விதமாக முன்னால் சென்றான். வியக்கும்படியாக பாறைகள் உருட்டும் அரக்கர்கள் எங்கும் காணப்படவில்லை. நம்பிக்கையும், வேட்கையும் நிறைந்து அவன் கோட்டையை நோக்கி ஓடத் தோடங்கினான். அவன் கதவைக் கடந்துவிட்டான். ஆச்சரியகரமாக எந்த நெருப்பும் வரவில்லை. அவன் தலைநிமிர்ந்து திரும்ப திரும்ப நன்றிகூறினான். அவனுக்கு முன்னால் சிம்மாசனம் இருந்தது. அதில் அவன் சிறு வயதிலிருந்து கதைகளில் கேள்விப்பட்ட இளவரசி அமர்ந்திருந்தாள். பயத்துடன் அவன் முன்னே சென்றான். பிறகு கோட்டை சிரிப்பால் எதிரொலிக்கத் தொடங்கியது.

இப்போது பயப்படாதே. ஏனெனில் கண்டறிவதற்கு என்ன இருக்கிறது என்று ஒரு குரல் சொன்னது. அவன் சிம்மாசனத்தின் முன் நின்றிருந்தான். ஆனால் அங்கு அழகான, இளமையான பெண் உட்கார்ந்திருக்கவில்லை. அதற்கு பதிலாக ஒரு வயதான பெண் இருந்தாள். அவளும் இறந்திருந்தாள்.

அவன் தான் அந்தக் கதையை குறைந்தபட்சம் 60 வருடங்களாக கேட்டுக்கொண்டிருப்பதை முற்றிலுமாக மறந்துவிட்டான்.

அன்பு.

சுயம், பிரபஞ்சத்தின் சுயம். அல்லது சுயமற்ற தன்மை. ஜைன, இந்து, புத்த மத வார்த்தைகள் அனைத்தும் சத்தியத்தின் ஒரு பகுதியை மட்டுமே வெளிப்படுத்துகின்றன. சத்தியத்தை ஒருபோதும் அதன் முழுமையில் வெளிப்படுத்தமுடியாது. ஏனெனில் வார்த்தைகள் மிகவும் குறுகியவை, மற்றும் சிறியவை.

எனவே வார்த்தைகளில் சிக்கிக் கொள்ளாதே உனக்கு எது சரியென்று உணர்கிறாயோ உனக்கு எது பொருந்துகிறதோ வெறுமனே அதனை தேர்ந்தெடு.

ஒரு வார்த்தையை தேர்ந்தெடுக்காதது உனது ஆன்மீகப் பாதையை தடைசெய்யாது.

உண்மையில் வார்த்தைகள் மீது கொடுக்கப்படும் அழுத்தமே தடை. யூதர்களுக்கு கடவுள் என்பதற்குரிய வார்த்தை 'யாவே அல்லது யெக்கோபா....'அதன் பொருள் பெயரில்லாதது, பெயரற்றது.

சத்தியத்திற்கான தேடுதலுக்கு கொள்கைகளோடும் புனிதநூல்களோடும் கோட்பாடுகளோடும் ஒரு தூரத்து உறவு கூட இல்லை. எனவே புனித நூல்களை தவிர்ப்பது நல்லது.

இல்லாவிடில் நீ எதைத் தேடுகிறாய் என்பதை தவற விட்டு விடுவாய்.

சாட்சி பாவத்தில் கவனத்தை வை. எண்ணங்கள் அல்லது உணர்வுகளாக இருந்தாலும் செயல்கள் அல்லது எதிர் செயல்களாக இருந்தாலும் அவை அனைத்திற்குமொரு சாட்சியாக மாறிவிடு. உனது வாழ்வின் ஓடை உணர்வற்றதாக இல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்.
விழிப்புணர்வின் மீது தியானம் செய். விழிப்புணர்வுதான் தியானம்.
மிச்சமிருக்கும் அனைத்தையும் பிரபஞ்சத்திடம் அல்லது 'யாவே' யிடம் பெயரற்றவரிடம் விட்டுவிடு. உனது மிச்சமிருக்குமொரு கேள்விக்கு நான் பதில் கூறமாட்டேன். ஏனெனில் உனது பாதையைப் பொறுத்தமட்டில் அது உபயோகமற்றது.

அந்தக் கேள்வி தவறு. அதற்கு எந்த பதிலும் இல்லை என்பதல்ல. ஏனெனில் வெறுமனே சத்தியத்தைத் தேடுமொரு சாதகனுக்கு அது சம்பந்தமற்றது என்பதினாலேயே.

104.

அன்பு.

நிச்சயமாக சத்தியத்தைத் தேடு. ஆனால் தேடும்போது மறைந்துவிடுபவர் மட்டுமே சத்தியத்தைத் தேட முடியும்.

ஒருவருடைய சுயம் முற்றிலும் மறைந்தால் மட்டுமே சத்தியம் அதன் முழுமையில் தோன்றும்.

சத்தியம் வெளிப்படுவதற்கு அதற்கு உள்வெளி வேண்டுமல்லவா? அந்த வெளியை உனக்குள் உருவாக்கு. நீ உன்னாலேயே நிறைந்திருந்தால்..... சத்தியம் எங்கு வரும்? காலியாக இரு; வெறுமையாக இரு. பிறகு சத்தியத்தின் கடல் தன்னிச்சையாக அந்த வெறுமையை நிரப்பும்.

கபீர், "தேடித்துழாவு என்னுடைய அன்பு நண்பனே! கபீர் என்பவன் கரைந்துவிட்டான்" என்று பாடியிருக்கிறார். தம்மை தொலைத்துவிட்டவர்களே சத்தியத்தை கண்டடைகிறார்கள் என்று நான் கூறுகிறேன்.

105.

அன்பு.

வாழ்க்கை தர்க்கமற்றது. அதனால்தான் இறந்த விஷயங்கள் மட்டுமே தர்க்கத்தை பற்றிக் கொண்டிருக்கும். வாழ்வு ஒரு புதிர். ஆகவே அது சிந்தனையின் எல்லா எல்லைகளையும் மறைமுகமாக உடைத்துவிடும்.

வாழ்க்கை துருவங்களிலானது. பிறந்தது யாவும் இறந்தே தீரும். ஆகவே இறப்பை தவிர்க்க விரும்பும் யாரும் பிறப்பது இல்லை.

மதங்கள் பிறக்கின்றன, இறக்கின்றன நிறுவனங்கள் பிறக்கின்றன, அழிகின்றன ஆனால் அதுதான் அவைகளின் தலையெழுத்து.

.

குறிப்பிட்ட கால இடைவெளியில் அனைத்திற்கும் இதுதான் விதி.

ஆகவே பழையனவற்றை புதைத்த விடு புதியனவற்றை பிறக்க விடு.
இதைத் தவிர வேறு வழியில்லை. உறுதியாக இன்று புதிது என இருப்பது நாளை பழையன என மாறும். பின் அதுவும் புதைக்கப்படும்.
ஒருநாள் கிழவர்களாகி விடுவார்கள் என்பதற்காக குழந்தைகள் பிறக்காமல் தடுப்பது முறையல்ல. இறந்தவர்களை புதைத்தால்
அவர்கள் திரும்பவும் குழந்தைகளாக வந்துவிடுவார்கள் என்பதற்காக அவர்களை புதைக்காமல் இருப்பதும் சரியல்ல.

106.

அன்பு.

நீ தேடிக் கொண்டிருப்பதை உறுதியாக அடைந்துவிட முடியும்.

நதி கடலை கண்டுவிடும். தாகம் தண்ணீரை கண்டுவிடும் விளையாட்டுத்தன்மை கடவுளை கண்டறிந்துவிடும்.

கடவுள்தன்மை அருகேதான் இருக்கிறது, ஆனால் நமக்குத்தான் தாகமில்லை. உன்னுடைய தாகத்தை எழுப்பு.

நீ தவிக்க ஆரம்பித்துவிட்டால், பின் அங்கே ஒருகணம்கூட தாமதமிருக்காது.

107.

அன்பு.

நீ இருளை பார்க்கிறாய், இல்லையா? அதை முழுமையாக பார். அதிலிருந்து தப்பி ஓடாதே. அதில் வாழ், அதிலேயே எழு. நீ தப்பி ஓடிக் கொண்டிருப்பதால் நீ சோர்வடைந்து விட்டாய்.

இருளிலிருந்து தப்பி ஓடுவது ஒளியை கொண்டு வராது. மேலும் இருளை அதிகப்படுத்தும். இது இருளைப் பற்றிய கேள்வி அல்ல. இது தூங்கிக் கொண்டிருப்பதை பற்றிய கேள்வி. எழுந்திரு. இருள் விலகி விடும். எழுவதே ஒளி. ஆகவே எழுந்து கொள். இருளையே பொருளாக கொள். எழு. இருளின் மீது தியானம் செய் எழு.

108.

அன்பு.

துணிச்சலை வரவழைத்துக் கொள்ள வில்லையென்றால்
ஒருவர் திரும்பி வந்தாக வேண்டும். அதில் எந்த கேள்வியும் இல்லை. ஆஹா!
இதுபோல பலமுறை நிகழ்ந்தாகி விட்டது. ஆனால் அங்கும் நீ இருந்தாய்,
எழாமல் அமர்ந்திருந்தாய். முழுமையாக மறந்துபோய்விட்டதே.
மறதி என்பது எவ்வளவு அருமையான இனிப்பான விஷம்.

109.

அன்பு.

சமுதாயம் நேரிடையாக மாற்றப்பட முடியாது. ஏனெனில் சமுதாயம் ழ்வற்ற ஒரு கட்டமைப்பு மட்டுமே. தனிப்பட்ட மனிதர்களோடு ஒருங்கிணைந்த ஒரு கூட்டமைப்பு மட்டுமே. தனிப்பட்ட மனிதர்கள் மட்டுமே நிலைமாற்றமடைய முடியும். ஏனெனில் தனிமனிதர்களிடம் மட்டுமே தன்னை தானாகவே மாற்றம் செய்துகொள்ளக் கூடிய தன்னுணர்வு உள்ளது. தானாகவே நிகழாத ஒரு நிலைமாற்றம் ஒரு நிலைமாற்றமே அல்ல. திணிக்கப்பட்ட நிலைமாற்றம் எப்போதும் நீடிப்பதில்லை. மனிதன் பலமுறை அந்த அறிவியல் பூர்வமற்ற அந்த விதமான முயற்சியை செய்து பார்த்துவிட்டான். முடிவு எப்போதும்

தோல்வியாகவே இருந்துவந்துள்ளது. தனிமனிதனே அடிப்படை அங்கம். எல்லா முயற்சியும் அவனிடம் மட்டுமே குவிந்திருக்க வேண்டும். மேலும் இதில் எல்லோரும் தன்னிடமே தொடங்கக் கூடிய ஆதாயம் உள்ளது. எப்போதெல்லாம் விஷயங்கள் மற்றவர்களிடம் தொடங்குகின்றனவோ - தொடக்கத்தில் எவ்வளவு அஹிம்சையானதாக தோன்றினாலும் - அது வன்முறையே. அதனால்தான் நான் எப்போதும் சமுதாயத்தை விட்டுவிட்டு உன்னைப் பிடித்துக்கொள் என்று கூறுகிறேன். ஏனெனில் சமுதாயத்தை மாற்றுவதற்கு அதை தவிர வேறு வழியில்லை.

110.

அன்பு.

அனுபவங்கள் ஆழப்படும். முழு இதயத்துடன், பிடிவாதத்துடன் வெறுமனே முயற்சி செய். நீ கடவுள்தன்மையை நோக்கி ஒரு அடி எடுத்துவைத்தால் பிறகு அது தவறான அடியாக இருந்தாலும்கூட அது ஒருபோதும் வீணாக போகாது! சரியான அடி என்பதைப் பற்றி கேள்வி எழுவது கூட இல்லை. நடந்து பார். மதம் என்றால் பரிசோதனை செய்வதே. வெறும் நம்பிக்கை கொள்வதல்ல. மதம் அனுபவப்படுதல் வெறும் நம்பிக்கை அல்ல.

111.

அன்பு.

கடல் நதியை அழைப்பது போலவே நான் உன்னை அழைத்துள்ளேன். இந்த அழைப்பு உனது இருப்பில் உள்ள அழைப்பின் அதிர்வாகும். அது அதிரமுடிகிறது, ஏனெனில் நீ எப்போதும் அதற்குரிய ஒரு தாகத்தைக் கொண்டிருக்கிறாய். இப்போது தாமதம் செய்யாதே. ஏற்கனவே போதுமான அளவு தாமதம் ஆகிவிட்டது!.இப்போது தியானத்திற்குள் நுழை. ஏனெனில் அங்கு, அங்கு மட்டுமே, என்னுடனான சந்திப்பு நிகழமுடியும். என்னுடன் மட்டுமல்ல, எல்லாவற்றுடனும். எல்லாவற்றுடனும் மட்டுமல்ல, உன்னுடனும்.

112.

அன்பு.

அன்பில் ஒருவர் மூழ்க வேண்டும். ஏனெனில் மூழ்குபவர் மட்டுமே பிழைப்பார். அன்பில், பிர்ர்த்தனையில், கடவுள்த்தன்மையில், மூழ்குவதே கரையாகும். இப்படி அதனை புரிந்துகொள். நீ உன்னை பாதுகாத்துக் கொண்டால் நீ மூழ்கிவிடுவாய். நீ மூழ்குவதற்கு உன்னை விட்டுவிட்டால்

நீ பிழைத்துக் கொள்வாய். எப்படியிருந்தாலும் நீ மூழ்கும்வரை ....அதை எப்படி புரிந்துகொள்ளக்கூட முடியும்?

113.

அன்பு.

உனது இரண்டாவது கடிதம். அன்பில், பிரார்த்தனையில் கிறுக்குத்தனமான ஒன்று. இந்த வழியில் மட்டுமே இது நிகழும். இருப்பின் பறவை அறியப்படாத பயணத்தில் பறக்கத்தொடங்குகிறது. தொடங்குவதற்கு தகுதியான ஒரே பயணம் இதுதான். மற்ற அனைத்தும் அலைச்சல்கள்தான். ஆனால் அலைச்சல் ஒருவிதமான பாதுகாப்பு உணர்வைத் தருகிறது, ஏனெனில் எல்லாவற்றையும் விட அது அறிந்த தெரிந்த பாதைகளில் மட்டுமே. அறியபடாததில் அபாயம் உள்ளது. பாதுகாப்பற்றதில் அபாயம் உள்ளது. ஆஹா! ஆனால் அறியப்படாததில் மட்டுமே வாழ்க்கை உள்ளது. ஒரு கல்லறை எப்போதும் ஆபத்தைக் கடந்ததாகவே உள்ளது. அதனால்தான் நாம் வாழ்வதற்கு முன்னே நாம் அனைவரும் இறந்துவிடுகிறோம்.

114.

அன்பு.

நாளையைப் பற்றி சிந்திக்காதே. எதிர்காலம் எதிர்காலத்தை கவனித்துக் கொள்ளட்டும். ஒரு தியானிப்பவனுக்கு இன்றே போதுமானது. இப்போதே போதுமானது. இந்தக் கணத்தில் மட்டும் வாழ். இந்தக் கணத்தைக் கடந்து கிறுக்குத்தனம் மட்டுமே உள்ளது. ஏனெனில் உண்மையில் கணமே நித்தியமானது. மேலும் ஒருவருக்கொருவர் அன்பாக இருங்கள். நட்புத்தன்மையை பகிர்ந்துகொள்ளுங்கள். ஒரு கணவன் மனைவி என்பதன் பொருள் இதுதான். அன்பு வளர வளர காமம் தானாகவே மறைந்துவிடும். இருவரும் மற்றவரில் தெய்வீகத்தை காணுங்கள். பிறகு நீ உடலை பார்க்கமாட்டாய். ஒருவரையொருவர் ஆழமாக பாருங்கள். பிறகு நீ அழிவுறுவதை பார்க்கமாட்டாய். காமத்தில் பங்குதாரர்களாக இருப்பவர்கள் ஞானத்தில் பங்குதாரர்களாக ஆகமுடியாவிட்டால் பிறகு வாய்ப்பு தவற விடப்பட்டு விட்டது என்பதை நன்றாக தெரிந்துகொள்.

115.

அன்பு.

மரணத்தின் மீது தியானம் செய். மரணத்தைப்பற்றி தியானம் செய். நீ மரணத்தை தவிர்த்தால்  அங்கு பயம் உள்ளது. நீ மரணத்திலிருந்து தப்பித்தால் அங்கு பயம் உள்ளது. நீ மரணத்தை நேரிடையாக சந்திக்கும்பொழுது அங்கு பயம் இல்லை. மரணத்தை தியானத்தில் மட்டுமே நேரிடையாக சந்திக்க முடியும். மரணத்தை அறிந்த ஒருவருக்கு மரணமற்ற தன்மையின் கதவுகள் திறக்கும்.

116.

அன்பு.

பயம் உன்னைப் பிடித்துக் கொண்டிருக்க வில்லை. நீதான் பயத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீ அதனை கைவிட்டால் மட்டுமே அது விடும்.
நீ சாத்தியமற்றதை விரும்புகிறாய். நீ அதனை கைவிடாமல் அந்த பயம் உன்னை விட்டு போகவேண்டுமென விரும்புகிறாய். இது ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. இது நிகழப் போவதும் இல்லை. அதனை விட்டுவிட்டுப் பார். பிறகு நீ சிரிப்பாய்.

117.

அன்பு.

தியானத்தில் தற்செயல் ஒருமிகவும் அபூர்வமான விஷயம். சிலசமயங்களில் அங்கு பயணி இருப்பார். படகிருக்காது. சில சமயங்களில் அங்கு பயணி படகு

இரண்டும் இருக்கும். ஆனால் நதியிருக்காது. சிலசமயங்களில் பயணி படகு நதி எல்லாமும் அங்கிருக்கும். படகோட்டுபவன் அங்கிருக்கமாட்டான். சிலசமயங்களில் பயணி படகு நதி படகோட்டுபவன் என எல்லாமும் அங்கிருக்கும். ஆனாலும் கூட பயணம் நடைபெறாது. நீ இந்த கடைசி நிலையில் இருக்கிறாய். இனிமேலும் தாமதம் செய்யாதே. ஏனெனில் இப்படிப்பட்ட ஒரு தற்செயல் கலைவதற்கு அதிகநேரம் எடுக்காது.

118.

அன்பு.

கற்றுக்கொள். எல்லா அனுபவங்களிலிருந்தும் ஏதோவொன்றைக் கற்றுக்கொள். இனிப்போ, கசப்போ எல்லா அனுபவங்களும் வாழ்வை செழுமையாக்குகின்றன. காலப்போக்கில் அனுபவங்கள் இருப்பதில்லை. விவேகம் மட்டுமே இருக்கிறது. எனவே உனது கவனத்தை காலப்போக்கில் நிலைத்திருப்பதன் மீது மட்டுமே வை. அனுபவத்தின் மலர்கள் மறைந்துவிடும். அதனால்தான் விவேகத்தின் நறுமணத்தை அதிலிருந்து எடுத்துக் கொள்ளாதவர்கள் காலப்போக்கில் கையில் ஒன்றுமில்லாதவர்களாக ஆகிவிடுகின்றனர்.

119.

அன்பு.

உலகத்தைப் பற்றி கவலைப்படாதே. ஏனெனில் ஒருவருடைய சொந்த கவலையே போதுமானதாக இல்லையா? மற்றவர்களைப் பற்றி யோசிக்காதே. ஏனெனில் ஒருவரைப் பற்றி யோசிப்பது எப்போதாவது முடிவை அடைந்திருக்கிறதா? மதத்திற்கு என்ன நிகழும்? இது உண்மையான கேள்வி அல்ல. தனக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது இது மட்டுமே உண்மையான கேள்வி.

உன்னுடைய சொந்த தியானத்திற்கு நேரிடையாக தொடர்பு இல்லாத விஷயங்களைக் கேட்காதே. ஏனெனில் அப்படிப்பட்ட விஷயங்களுக்கு முடிவே இல்லை. ஆனால் உனக்கொரு முடிவுள்ளது. மேலும் உன்னுடைய முடிவிற்கு நீ வருவதற்கு முன்பு முடிவற்றதை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

120.

அன்பு.

நிச்சயமாக எல்லாமும் தயாராக உள்ளது. வெறும் ஒரு பொறி மட்டுமே தேவை. ஒருமுறை நெருப்பு பிடித்துவிட்டால் அது அணையாது. இது அணையக்கூடிய நெருப்பு அல்ல. ஏனெனில் இது ஒரு பொருளுலக நெருப்பு அல்ல. இது கடவுள்தன்மையின் நெருப்பு. எரித்துவிடு. எனவே எதுவும் மிச்சமில்லாதிருக்கட்டும். சாம்பல் கூட இல்லாமல் போகட்டும். அவ்வாறு எரிக்கப்பட்டு விடுவதே மஹாநிர்வாணம்.

அன்பு.

வாழ்வில் அனைத்தும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் புரிந்து கொள்ளுதல் மிகவும் சிறியது. வாழ்க்கை எல்லையற்று பரந்து விரிந்தது. மேலும் என்ன இருக்கிறது? அறிவின் பிச்சைப்பாத்திரத்துள் கடல் அடங்கவில்லையெனில் அது கடலின் தவறல்ல. புரிந்து கொள்ளுதலில் நின்றுவிடாதே. புரிந்துகொள்ளுதல் தேவை. ஆனால் அது போதுமானதல்ல. அறிவு நிச்சயமாக ஒரு சிறிய ஒளியேற்றப்பட்ட தீவு. ஆனால் அந்த தீவு அரையிருட்டியிருக்கும் ஒரு கடலில் உள்ளது. அந்தக் கடல் முழுவதும் ஒளியேற்றப்படாத இன்னமும் பெரிய கடலின் ஒருபகுதி.

அறியப்படாததன் முன் அறியப்பட்டது ஒன்றுபோலில்லை. அறியமுடியாததன் முன் அறியபடாதது ஒன்றுமேயில்லை. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்ததைத்தான் நான் கடவுள்தன்மையென்று அழைக்கிறேன்.

அன்பு.

வாக்குவாதம் அறிவிலிருந்து வருகிறது. அறிவிற்குள் வாக்குவாததிற்கு எல்லையேயில்லை. சிந்தனை இருக்கும் வரை வாக்குவாதம் இருக்கும். ஏனெனில் சிந்தனை என்பது இருமை. அதனால்தான் அப்படிப்பட்ட வாக்குவாதங்களுக்கு முடிவு வேதங்களிலிருந்தோ, பைபிளிலிருந்தோ, குரானிலிருந்தோ வராது. வார்த்தைகளிலிருந்தும், புனித நூல்களிலிருந்தும், கோட்பாடுகளிலிருந்தும் வரும் வாக்குவாதங்களுக்கு முடிவேயில்லை. தியானத்தில் எண்ணத்தைக் கடந்து இருமையற்ற தன்மை எதிர்கொள்ளப்படுகிறது.

அது அதுமட்டும்தான். உரையாடல் அதற்கு முன்பு உரையாடல் நிகழ்வதில்லை. எனவே தியானத்தைத் தேடு. மௌனத்தைத் தேடு. ஞானத்தைத் தேடு.

123.

அன்பு.

ஒரு தாகமிருக்கும் இடத்தில் ஒரு வழியிருக்கும். தீர்மானத்தோடு இருந்தால் கனவுகள் கூட உண்மையாகி விடுமல்லவா? தீர்மானம் இருந்தால் கனவுக்கும் உண்மைக்குமிடையே இடைவெளி எங்கேயுள்ளது?

124.

அன்பு,

நிச்சயமாக மதம் நித்தியமானது. தொடக்கமற்றது, முடிவற்றது. ஆனால் மதப்புனித நூல்கள் அப்படியல்ல. மதரீதியான புனிதநூல்கள் எப்போதும் காலத்திற்குள் உள்ளன. அவை தற்காலிகமானவை. சத்தியம் காலத்தைக் கடந்தது. ஆனால் வார்த்தைகள் அப்படியல்ல. அதனால்தான் மதம் கூறப்படுகிறது, ஆனாலும் அதைக் கூறமுடியாது. விட் ஜென்ஸ்டீன் இருவிதமான உரையாடல்கள் பற்றி கூறியுள்ளார். கூறுவது மற்றும் காட்டுவது. மதரீதியான உரையாடல் இரண்டாவது வகையைச் சார்ந்தது. மதத்தன்மையை சொல்லமுடியாது. காட்ட மட்டுமே முடியும். வறிய புனிதநூல்கள் சொல்ல மட்டுமே செய்கின்றன. காட்டுவது வார்த்தைகளின் வல்லமைக்குள் அடங்கியதல்ல. ஆமாம், ஒரு மனிதன் காட்டமுடியும். அதனால்தான்

மதத்தன்மையுள்ள மக்கள் இருக்கிறார்கள். ஆனால் மதத்தன்மையுள்ள நூல்களில்லை. ஏனெனில், ஒரு மனிதன் ஒரே சமயத்தில் காலத்திற்குள்ளும் காலத்தைக் கடந்தும் இருக்கமுடியும். ஆனால் வார்த்தைகளுக்கும் புனிதநூல்களுக்கும் அந்த வல்லமையில்லை. அதனைக் கூறிய பிறகு வார்த்தைகளும், புனிதநூல்களும் வீணானவையல்ல. ஏனெனில் அவைகளின் மூலம் வார்த்தைகளின் பயனற்றதன்மை தெரியவருகிறது. அதனால்தான் அவைகளிலிருந்து விடுதலையடைவதே வார்த்தைகளற்ற பயணத்தின் தொடக்கம்.

125.

அன்பு.

பிரபஞ்சத்தின் கைகளிலுன்னை விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. வாழ்வின் உச்சகட்ட பிரச்சனைகளைப் பொறுத்தவரை மனிதன் இயலாதவன். இந்த இயலாத தன்மையை சரியாக புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ள முயற்சி செய். அது மட்டுமே சரணாகதி. சரணாகதியே தீர்வு. நீ சரணடையும்வரை நீ தோற்கடிக்கப்படுவாய். எனவே தோற்றுவிடு. நீயே உன்னை தோற்கடித்துக்கொள். மரணத்தால் தோற்கடிக்கப்பட காத்திருக்காதே. தன்னாலேயே தோற்கடிக்கப்படுவதே வெற்றிக்கான வழி.

126.

அன்பு.

ஒருவர் அடிக்க வேண்டுமென்றால் ஏன் பலமாக அடிக்கக்கூடாது? சிறிய அடிகள் போதாது. மனிதனுடைய உறக்கம் ஆழமானது. ஒருவேளை அதுவொரு உறக்கமென்பதை விட அதிகமாக ஒரு உணர்வற்ற தன்மை. வேறென்ன? அடிகளைப் பொறுத்தவரையில்கூட மனிதன் நேர்எதிரான அர்த்தங்களைப் புரிந்துகொள்வதில் திறமைவாய்ந்தவன். உன்னுடைய உறக்கத்தை கலைக்காத அர்த்தங்கள் அதனை ஆழப்படுத்தும். விஷத்தை மருந்தாகப் பயன்படுத்தலாம். ஆனால் மருந்தை விஷமாகக்கூட பயன்படுத்தலாம். இல்லையா?

127.

அன்பு.

தியானத்தைத் தவிர வேறுபாதையில்லை. அல்லது மாறாக இருக்கும் பாதைகளெல்லாம் தியானத்தின் வெவ்வேறு உருவங்களே.

பிரார்த்தனையும் தியானம்தான் வழிபாடும் தியானம்தான் பூஜையும் தியானம்தான் யோகாவும் தியானம்தான் சங்கரரின் தத்துவ விசாரமும்

தியானம்தான் அறிவும் தியானம்தான் பக்தியும் தியானம்தான் கர்மாவும், சந்நியாசமும் தியானம்தான்.

தியானம் என்பதன் பொருள் ஒரு மௌனமான எண்ணங்களற்ற மனதின் தூய்மையான நிலை. நீ இந்த நிலையை எப்படியடைகிறாய் என்பது முக்கியமல்ல. அடைவதுதான் முக்கியம். நீ எந்த பாதையின் மூலம் நீ ஆரோக்கியமடைகிறாயென்பது இரண்டாம் பட்சம். ஆரோக்கியமடைகிறாய் என்பதே முக்கியமானது.

128.

அன்பு.

பயணம் நீண்டது. ஏனெனில் சேருமிடம் அருகிலுள்ளது. நாம் தொலைவிலுள்ளதைப் பார்க்கிறோம். ஆனால் நமது கண்கள் ஒருபோதும் நமக்கருகில் இருப்பதைப் பார்ப்பதில்லை. தொலைவிலிருந்து வருமொரு அழைப்பை உணர்கிறோம். அது ஆணவத்திற்கு ஒரு சவாலாக மாறுகிறது. ஆனால் அருகிலிருப்பது வெறுமனே மறக்கப்பட்டு விடுகிறது. அப்படித்தான் இருப்பு மறக்கப்பட்டுவிட்டது. அப்படித்தான் கடவுள்தன்மை மறக்கப்பட்டு விட்டது. அதனால்தான் நமக்கு மிகவும் அருகிலிருப்பதற்கு சென்று சேர்வதற்குரிய பயணம் மிகுந்த தொலைவுடையதாகிவிட்டது.அதைப்

புரிந்துகொள். பிறகு நீ முற்றிலும் நடக்க வேண்டியதேயில்லை. இதனை அடையாளம் கண்டுகொள். பிறகு நீ ஏற்கனவே சேருமிடத்தில்தான் நின்றுகொண்டிருக்கிறாய் என்பதைக் கண்டறிவாய்.

129.

அன்பு.

ஆம், நிச்சயமாக நான் திரும்பிவிட்டேன். நான் உன்னை சிகரங்களிலிருந்து அழைத்தேன். ஆனால் என்னுடைய குரல் உன்னை வந்தடையவில்லை. அல்லது அது வந்தடைந்தும் அதை உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே ஒரேயொரு வழிதான் உள்ளது. நான் உன்னுடைய பள்ளத்தாக்கிற்கு திரும்பிவந்து உன்னுடைய சொந்த மொழியை பேசுவது. ஆனால் இதையாவது உன்னால் புரிந்து கொள்ள இயலுமா? அல்லது நீ புரிந்துகொண்டாலும்கூட நீ இதை தவறாகப் புரிந்து கொள்வாயா? நீ இதையேதான் கிருஷ்ணரிடமும் செய்தாய். நீ இதையேதான் புத்தரிடமும் செய்தாய். எனவே என்னிடம் வித்தியாசமாக எதுவும் நிகழப்போவதில்லை என்பதை நான் அறிவேன். ஆனால் நீ இன்னமும் சோர்வடையவில்லையென்றால் நான் ஏன் சோர்வடையவேண்டும்? நான் அழைத்துக்கொண்டே இருப்பேன். நீ எனது சிகரங்களுக்கு வரவில்லையெனில் வரவேண்டாம். ஆனால் ஒளிவீசும் சிகரங்கள் பற்றிய செய்திகளை உனக்களிக்கும் நம்பிக்கையுடனும்

பள்ளத்தாக்கிலுள்ள இருளின் காரணமாக உனக்கிருக்கும் குருட்டுத்தன்மையை அழிக்கும் நம்பிக்கையையுடனும் நான் நிச்சயமாக உனது பள்ளதாக்குகளுக்கு வரமுடியும். நீ என்னுடன் சண்டை போடுவாய் என்பதை நன்கு அறிவேன். ஏனெனில் உன்னுடன் நீண்டகாலமாக இருக்கும் நோய்களும்கூட உன்னுடைய நண்பர்களாகி விட்டனர்.

நீ அறியாத ஒளியை நீ எப்படி நம்புவாய்? மேலும் உனக்கு என்னைத் தெரியாது. நீ எப்படி என்னை நம்பமுடியும்?

130.

அன்பு.

உன்னுடைய முன்னேற்றம் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உன்னுடைய காமசக்தி மேல்நோக்கி நகர தயாராகிவிட்டது. அதுதான் பிரச்சனையாக இருந்தது. இப்போது அது தீர்ந்துவிட்டது. இப்போதிருந்து தியானத்தின் பரிமாணம் வேறுபட்டிருக்கும். இப்போதுவரை தியானம் கூட ஒரு போராட்டமாக இருந்தது. இப்போது அது ஒரு கைவிடுதலாகி விடும். இப்போது நீ நீந்த வேண்டியதில்லை, இப்போது நீ மிதக்கலாம். பரவசமாக அமைதியாக ஓய்வாக நீ எங்கும் செல்ல வேண்டியதில்லை என்பதுபோல

நீ எங்கு சென்று சேர்கிறாயோ அதுவே சேருமிடம் என்பதுபோல மிதக்கலாம். இப்போது நீ மூழ்கினாலும்கூட அது கரையாக இருக்கும்.

131.

அன்பு.

நீ ஏதாவதொன்றை பிரபஞ்சத்திடம் விட்டுவிடும்போது அதனை முழுமையாக விட்டுவிடு. ஆனந்தம், ஆனந்தமின்மை அனைத்தையும் பிரபஞ்சத்திடம் விட்டுவிடு. எடையில்லாமலாகு. புரிந்து கொள்ளுதலை பிடித்துக்கொள்ளாதே. அதையும் அழித்துவிட்டு அறியாதவனாகிவிடு. ஏனெனில் முடிவில் புரிதல்தான் அதிகபட்ச எடை. காலப்போக்கில் புரிந்து கொள்ளுதலின் பாதையில் எழுவதற்கு புரிந்துகொள்ளுதலே மிகப் பெரிய தடை. நீ பல பிறவிகளாக புரிந்து கொள்ளுதலுக்கு பல வாய்ப்புகளை அளித்துள்ளாய். நீ எதை ஈட்டியுள்ளாய்? வாழ்வினுடைய மர்மத்தின் கதவுகள் புரிந்துகொள்ளுதலுக்கு மூடியுள்ளன. ஆனால் அறியாதவர்களுக்கு எப்போதும் திறந்துள்ளன. எங்கு தர்க்கத்திற்கு சுவர் உள்ளதோ, அங்கு அன்பிற்கு ஒரு கதவுள்ளது. எங்கு அறிவு தோல்வியடைகிறதோ, அங்கு இதயம் வெற்றியடைகிறது.

132.

அன்பு.

மதத்தன்மை தேவை. மதங்களல்ல. ஏனெனில் மதத்தன்மை ஆன்மீக தன்மை உடையது. ஆனால் மதங்கள் அரசியலாக மாறிவிட்டன. மதத்தன்மை அன்பைப் போன்றது. தனிப்பட்டது, தனித்துவமானது. ஒரு அமைப்பல்ல, ஆனால் ஒரு தேடுதல். நீ அதனை அனுபவிக்க விரும்பினால் உனக்குள்ளே தேடு. நீ அதனை இழக்க விரும்பினால் உனது கவனத்தை மற்றவர்களுக்கு கொடு. நீ அதனை அனுபவிக்க விரும்பினால் உனக்குள்ளே தியானத்தோடு, பிரார்த்தனை தன்மையோடு, வழிபாட்டோடு, தோண்டு. அதன்மூலம் அருகில், மிகவும் அருகில் உள்ளது. ஆனால் அவர்களுக்கு அருகில் அவர்களுடைய விழிப்புணர்வை கொண்டு வராதவர்கள் எப்படி கடவுள்த்தன்மைக்கு அருகில் அதனைக் கொண்டு செல்வார்கள்?

133.

அன்பு.

ஒரு உறவு உள்ளது. இப்போது மட்டுமல்ல, பல பிறவிகளாக மிகவும் பழமையான ஒன்று. அதனால்தான் உன்னால் அழைப்பை கேட்க முடிந்தது.

அதனால்தான் உன்னால் மொழியை புரிந்து கொள்ள முடிந்தது. அதனால்தான் உன்னால் நம்பகத்தன்மை கொள்ள முடிந்தது. மேலும் மெதுமெதுவாக அனைத்தும் உனது நினைவின் மேல்மட்டத்திற்கு திரும்ப வரும். அது ஏற்கனவே தொடங்கிவிட்டது. நினைவு இறப்பதில்லை. அது மறக்க மட்டுமே படுகிறது. பிறவிகளின் அடுக்கடுக்கான நினைவுகள் உணர்வற்ற மனதில் இருக்கின்றன. அவை எழுந்து உன்னை விழுங்கிவிடும். அவைகளைக் கண்டு பயப்படாதே. அவைகளைப் பற்றி கவலைப்படாதே. அவைகள் திரும்ப எழுவது ஆரோக்கியமானது, வாழ்த்துக்குரியது.

134.

அன்பு.

கிறுக்கனாகாமல் நீ எப்படி தெய்வீகத்தை சந்திக்கமுடியும்? சந்திப்புக்குரிய ஒரே முன் நிபந்தனை கிறுக்கனாதல்தான். அது உன்னை அழைத்தது என்று உன்னை ஆசீர்வதிக்கப்பட்டவனாக கருதிக்கொள். அது உன்னை பைத்தியமாக்கும். அது உன்னை சிதறடிக்கும். கடல் நதியை அழைப்பதுபோல அது உன்னை அழைத்துள்ளது. நதி அதனுடைய காதலனை சந்திக்க ஆடிக்கொண்டு பாடிக்கொண்டு செல்வதைப்போல நீ செல்ல வேண்டும். நதி பயமின்றி அறியாதவற்றுள், அறிமுகமில்லாதவற்றுள் ஓடுவதைப்போல நீ ஓடவேண்டும். முடிவில் நதி கரைகளின் மேலிருக்கும் அதன் பிணைப்பை விட்டுவிட்டு கடலுக்குள் மறைவதைப்போல நீயும் மறையவேண்டும்.

135.

அன்பு.

உனது இதயத்துள் அடக்கப்பட்ட வலி உள்ளது. அடக்கப்பட்ட கண்ணீர் உள்ளது. தியானத்தில் அந்த வலி வெடிக்கும், கண்ணீர் வழியும். இப்படித்தான் நீ உன்னுடைய இருப்பை ஒரு பாறையைப்போல இறுக்கியிருக்கும் அந்த எடையிலிருந்து விடுபடுவாய். எனவே அழுவதற்கு கஞ்சத்தனப்படாதே. தயங்காதே, யோசிக்காதே. அழு. உனது இதயம் நிறைவு கொள்ளும் வரை அழு. உனது முழு இருப்புடன் அழு. வலி கரைந்து ஓடட்டும். கண்ணீரில் குளித்தபிறகு நீ கிணறாவாய். நீ அவற்றை நிறுத்தியிருப்பதாலேயே நீ நலமில்லாமல் இருக்கிறாய்.

136.

அன்பு.

கங்கை அருகிலிருந்தால் அது கங்கையாக இருப்பதில்லை. தொலைவு பார்வையை தருகிறது. நமது கண்கள் அருகிலிருப்பதற்கு மூடியே இருக்கின்றன. அதனால்தான் கடவுள்தன்மை பார்க்கப்படுவதில்லை.

அது மிகவும் தொலைவில் இருப்பதால் அல்ல. அது புலனாகாமல் இருப்பதால் அல்ல. ஆனால் அருகில் இருப்பதைவிட அருகில் இருப்பதாலேயே அது பார்க்கப்படுவதில்லை. மனிதன் அவனுடைய குருட்டுத்தன்மையை அதன் புலனாகாத தன்மையாக நினைத்துக்கொண்டு நிறைவுடன் இருக்கிறான். விரைவில் நானும் வெகுதொலைவுக்கு சென்றுவிடுவேன். நான் சென்றாக வேண்டும். ஏனெனில் எனது நேரமும் கடன் வாங்கப்பட்டதுதான். பிறகு உன்னால் என்னை சரியாக பார்க்கமுடியும். ஏனெனில் தொலைவு பார்வையளிக்கிறது. விரைவில் அந்தக் கரைக்கு அழைத்துச் செல்லகூடிய படகு இந்த கரையில் நங்கூரமிட்டு விடும். என்னை அனுப்பியவர்களின் அழைப்பு வந்துவிடும். பிறகு உன்னால் என்னை சரியாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும். நான் விடைபெறும் கணத்தில் உனது மனதிற்கு எந்த சந்தேகங்களும் இருக்காது. கடந்ததற்குள் மறையும் ஒருவர் மீது நம்பகத்தன்மை எழும். சந்தேகங்கள் மனதின் பாதுகாப்பு ஏற்பாடுகள். நம்பிக்கையில்லா தன்மை அதன் பாதுகாப்பு. ஒருவேளை நீ எனது அருகில் இருக்கும்போது ஏற்றுக்கொள்ள முடியாததை நான் தொலைவில் இருக்கும்போது உன்னால் ஏற்றுக்கொள்ள இயலலாம். ஆனால் நான் அருகிலிருக்கும்போதே நீ அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இல்லாவிடில் உனது இதயம் அதிகமாக வருத்தப்படும். நீ தேவையில்லாமல் நிறைய கண்ணீரில் மூழ்கி விடுவாய்.

137.

அன்பு.

இல்லை, நான் அவ்வளவு விரைவாக போகமாட்டேன். நான் எந்த வேலைக்காக வந்திருக்கிறேனோ, அல்லது அனுப்பப்பட்டிருக்கிறேனோ, அந்த வேலையை முடித்துவிட்டுதான் செல்வேன். ஆனால் நான் விரைவாக சென்றுவிட மாட்டேன் என்பதன் பொருள் நீ அவசரப்பட தேவையில்லை என்று பொருளல்ல. நீ தாமதப்படுத்தினால் பிறகு எனது அப்புறமும் கூட விரைவே என்பதாக நிரூபிக்கப்பட்டு விடும். நீ விரைந்தால் என்னுடைய விரைவுகூட தாமதமாகிவிடும். யோசி! யோசிப்பதால் என்ன வந்துவிடும்? உன்னை நோக்கி சிறிது நட.

138.

அன்பு.

சத்தியத்தை அடைவதற்கு பாதைகள் கணக்கற்றவை. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் எந்த பாதை பொருத்தமானது என்பது அவனைப் பொறுத்ததே. அதனால்தான் ஒருவருக்கு சரியாக இருப்பது வேறு ஒருவருக்கு வேறொருவருக்கு முற்றிலும் தவறாக இருக்கலாம். அதனால்தான் மற்றவர்களை பொறுத்தவரை அமைதியான மெல்லிய பொறுமை தேவை. ஒருவருடையதே அனைவருக்கும் பொருந்திவிடும் என்று

நினைப்பது அபாயகரமானது. இந்த உண்மையின் வெளிப்பாட்டை நான் பலமுகம் கொண்ட உண்மையென்ற தத்துவத்தில் பார்க்கிறேன்.

சிந்தனை சார்ந்த மனிதனுடைய பாதை, உணர்ச்சி சார்ந்த மனிதனுடைய பாதையல்ல. வெளியே செல்லும் மனிதனுக்கு எது கதவாக உள்ளதோ - அது உள்ளே செல்லும் மனிதனுக்கு ஒரு சுவர். அறிவின் பயணத்தை மேற்கொள்ளும் ஒருவன் காலப்போக்கில் தியானத்தை அவனுடைய படகாக்கிக்கொள்கிறான்.

அன்பின் பயணத்தை மேற்கொள்ளும் ஒருவன் பிரார்த்தனைத்தன்மையை அவனுடைய படகாக்கிக் கொள்கிறான். தியானமும், பிரார்த்தனையும் ஒரே இடத்தைத்தான் அடைகின்றன. ஆனால் அவைகளின் வழி முற்றிலும் வேறானது.

நீ உன்னுடைய பாதையை தேர்ந்தெடுத்துக்கொண்டு மற்றவர்களைப்பற்றி கவலைப்படாமல் இருப்பது சரியானதே. ஏனெனில் தன்னை புரிந்துகொள்வதுகூட மிகவும் கடினமாக இருக்கும்பொழுது பிறகு மற்றவரை புரிந்துகொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருக்கும்.

அன்பு.

தனிமை ஒரு வாழ்வின் நிதர்சனம். ஒருவர் அதிலிருந்து விழித்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவர் அதை தவிர்க்கமுடியாது. அது எப்போதும் நம்முடன் ஒரு நிழலைப் போலவுள்ளது.

ஒரு நிழல் குறைந்தபட்சம் இருளிலாவது துணையாகிறது. ஆனால் தனிமை இருளில் தன்னை அதிகத் தீவிரத்துடன் வெளிப்படுத்திக் கொள்கிறது. இருளில் மனிதன் ஒருவேளை இருளைக் கண்டு பயப்படுவதைவிட அதிகமாக தன்னுடைய தனிமையைக் கண்டு பயப்படுகிறான். எனவே தனிமையிலிருந்து ஓடாதே, தவிர்க்காதே. அதற்கு பதிலாக அதனை வாழ். அது இருக்கிறது. அதனை தழுவிக் கொள்.

நீ இருப்பதை நிராகரித்தால் துன்பத்தைத் தவிர வேறெதுவும் ஏற்படாது. இருப்பதை ஏற்றுக்கொள்வதே ஒரே பரவசம். மேலும் அது மட்டுமே மதத்தன்மை.

அன்பு.

மாலை வந்துவிட்டது. கதிரவன் மறைந்துவிட்டது. குரு சீடனிடம், உள்ளே சென்று புனிதநூலை அலமாரியில் வை என்று கூறினார். சீடன் சென்றான். ஆனால் பயந்துகொண்டே உடன் திரும்பி வந்து அன்புக்குரிய குருவே அலமாரியில் ஒரு பாம்புள்ளது என்றான். குரு, பாம்பை விரட்ட மந்திரம் இதுதான். போய் இதை உச்சரி. பாம்பு மறைந்துவிடும் என்று பதிலளித்தார். சீடன் சென்று அந்த மந்திரத்தைச் உச்சரித்தான். ஆனால் இன்னும் அதிக பலத்தோடு திரும்பி வந்து அன்புக்குரிய குருவே மந்திரத்தை விட பாம்பு அதிக சக்தியுடையதாய் உள்ளது. நான் மந்திரத்தை ஜெபித்தேன். ஆனால் பாம்பு எங்கிருந்ததோ அங்கேயே இருக்கிறது என்று கூறினார். குரு, நீ ஒருவேளை அதனை நம்பிக்கையோடு செய்திருக்கமாட்டாய் என்று பதிலளித்தார். சீடன் திரும்பவும் சென்றான். அவன் திரும்பவும் மந்திரத்தை உச்சரித்தான். ஆனால் எப்போதுமிருந்ததை விட அதிக பயத்துடன் திரும்பி ஓடிவந்து அன்பிற்குரிய குருவே நான் அதனை நம்பிக்கையுடன் உச்சரித்து பார்த்தேன். ஆனால் இன்னமும்கூட பாம்பு அங்கிருந்து நகரவில்லை என்றான். குரு, மந்திரத்தை விட்டுவிட்டு ஒரு விளக்கை எடுத்துச்செல் என்று பதிலளித்தார். சீடன் அலமாரியில் இருந்து அவன் கையில் ஒரு கயிறுடன் சிரித்துக்கொண்டே திரும்பி வந்தான்.

காமஇச்சைகளோடு சண்டை போடாதே. எந்த ஆசையோடும் சண்டை போடாதே. சண்டை போடும் மந்திரம் வேலை செய்யாது. விளக்கு.... வெறுமனே தியானமெனும் விளக்கை எடுத்துச் செல் அது மட்டுமே உதவும். இருட்டில் பார்க்கப்படும் வாழ்வின் சக்தி ஆசை. ஆசை இருளில், அறியாமையில் பார்க்கபடுவதாகும். தியானத்தின் ஒளியில் ஆசையெனும் பாம்பு காணப்படுவதில்லை. தியானத்தின் ஒளியில் நீ இருப்பதை அறிவாய். அறியாமையின் இருளில் அல்லது தியானமற்ற குருட்டுத்தன்மையில் கண்டிப்பாக இல்லாததை மட்டுமே நீ பார்ப்பாய். தியானத்தின் விளக்கை ஏற்றிவிட்டு உள்ளே செல். மேலும் பாம்பு அங்கு இல்லையென்று சொல்லிக்கொண்டு நீ சிரித்துக்கொண்டே வெளிவரும் கணத்திற்காக நான் காத்திருப்பேன்.

141.

அன்பு.

அறியாமையின் காரணமாக ஆசீர்வாதங்கள் கூட சாபங்களாகி விடுகின்றன. மேலும் புரிந்துகொள்ளுதலின் மூலமாக சாபங்கள் கூட ஆசீர்வாதங்களாகி விடுகின்றன. அதனால்தான் உண்மையான கேள்வி சாபங்களைப் பற்றியதோ,

ஆசீர்வாதங்களைப் பற்றியதோ அல்ல. உண்மையான கேள்வி முட்களை மலர்களாக மாற்றமடையச்செய்யும் இரசவாதத்தை அறிந்திருப்பது பற்றியது. ஒரு இரசாயனமாற்றத்திற்கு உட்பட்டால் கரி ஒரு வைரமாகிறது. சந்நியாசம், கரி போன்ற தன்னுணர்வை வைரங்களாக மாற்றும் அப்படிப்பட்ட ஒரு செயல்பாடு.

நான் உனக்கு சந்நியாசத்தின் இரசவாதத்திற்குரிய அடிப்படைச் சாவியை வெளிப்படுத்துகிறேன். நான் அதனை நேரிடையாக சொல்லமாட்டேன். நான் கண்டிப்பாக அதனைக் கூறுவேன். ஆனால் நீயும் அதற்காகத் தேட வேண்டும். ஏனெனில் ஒரு மறைமுக குறியீடு அந்த சாவியை வெளிப்படுத்துவதில் ஒரு அத்தியாவசிய பகுதியாகும். சில சிறந்த மந்திரங்கள் நேரடியாக சொல்லப்பட முடியாதவை. அல்லது அவை சொல்லப்பட்டால் அவைகளை புரிந்துகொள்ள முடியாது. அல்லது அவைகள் புரிந்துகொள்ளப்பட்டால் அவைகளின் உள்ளார்ந்த கவிதை தொலைந்துவிடும். அந்த கவிதைதான் அவைகளின் ஆத்மா.

தினமும் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் ஏக்நாத் கோதாவரி நதியில் குளிப்பது வழக்கம். அவர் குளித்துவிட்டு வெளியே வந்தவுடன், யாரோ ஒருவர் அவர் மீது துப்புவார். ஏக்நாத் சிரித்துக்கொண்டே இன்னொரு முறை குளிப்பார். தன்னைத்தானே மதக்குரு என்று நியமித்துக் கொண்டவர்கள் ஒரு மனிதனை இதனைச் செய்ய நியமித்திருந்தனர். ஆனால் ஒரேயொரு நிபந்தனை மட்டுமே

இருந்தது. ஏக்நாத் கோபமடைந்தால் மட்டுமே அவனுக்கு பணம் கிடைக்கும். ஒருநாள், இரண்டு நாட்கள், ஒரு வாரம், இரண்டு வாரங்கள் அந்த மனிதனின் முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டன. முடிவில் அவன் ஒரு கடைசி முயற்சி செய்தான். ஒருநாள் அவன் ஏக்நாத் மீது 107 முறை துப்புவான்.

ஏக்நாத் ஒவ்வொருமுறையும் சிரித்துக்கொண்டு இன்னொருமுறை குளித்தார். பிறகு அந்த மனிதன் 108 வது முறை துப்பினான். ஏக்நாத் சிரித்துவிட்டு இன்னொருமுறை புதிதாக குளித்தார். பிறகு அவர் திரும்பிவந்து அவன் திரும்பவும் துப்பக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் அவன் எதிரில் வந்து நின்றார். ஆனால் அந்த மனிதன் உண்மையிலேயே சோர்வாக இருந்தான். திரும்ப திரும்ப துப்பியதின் காரணமாக அவன் வாய் உலர்ந்து போய்விட்டது.

ஏக்நாத் ஒரு பிரார்த்தனை நிறைந்த இதயத்துடன் சிறிதுநேரம் காத்திருந்துவிட்டு, பிறகு உனக்கு எப்படி வார்த்தைகளால் நன்றி கூறுவேன். முன்பு கோதாவரியின் மடியின் பரவசத்தை ஒரேயொரு முறையான் அனுபவித்தேன். ஆனால் உநது நல்லெண்ணத்தின் காரணமாக நான் அதை இருமுறை பெற தொடங்கினேன். மேலும் இன்றையைப்பற்றி என்ன சொல்வது?

கோதாவரியில் 108 முறை குளிக்கும் ஆசீர்வாதத்தை பெற்றேன். வேலை உன்னுடையது. ஆனால் அதன் கனிகளை நான்தான் அடைந்தேன் என்றார்.

அன்பு.

சக்தியில் நம்பகத்தன்மை கொள்வது சக்தியை விட சக்தி வாய்ந்தது.
சக்திக்கு தானாகவே எந்த வாழ்க்கையும் இல்லை.
அதன் மீது நம்பிக்கை வைப்பதே அதற்கு வாழ்வை தருகிறது.

சக்தி தானாகவே இருக்கும்பொழுது அது வெறும் ஒரு உடல்.
அதனை மதிப்பதிலேயே அதற்குஉயிர் வருகிறது. நம்பகத்தன்மையற்ற சக்தி வாழ்வற்றது மட்டுமல்ல, நம்பகத்தன்மையற்ற சக்தி தற்கொலை மனப்பான்மை கொண்டது.இது ஏனெனில் படைப்பில் ஈடுபடாத சக்தி அழிவில் ஈடுபடுகிறது. மேலும் எல்லாவற்றிற்கும் முதலில் தன்னைத்தானே அழித்துக்கொள்ள தொடங்குகிறது. இது ஏனெனில் உபயோகப்படுத்தப்படாத சக்தி அதனையே பழிவாங்கிக் கொள்கிறது. தன்மீது நம்பிக்கையற்றதன்மை சக்தியை பயனுள்ள, படைப்பாற்றல் மிக்க பரிமாணங்களில் ஓட அனுமதிப்பதில்லை.

நான் உன்னைப் பார்க்கும்பொழுது எனக்கு எப்பொழுதும் மகாபாரதத்திலிருந்து ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வரும்.

கர்ணனுக்கும் அர்ஜூனனுக்கும் இடையிலான போர் மிகப்பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுள்ளது. ஏனெனில் அது சூரியனுக்கும் இந்திரனுக்கும் இடையே நடக்கும் போர். சூரியனோடு ஒப்பிட்டால் இந்திரன் யார்? ஆனால் எது நடக்குமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அது நடக்கவில்லை. மேலும் எது நடக்காது என்று தோன்றுகிறதோ அது நடந்துவிட்டது. கர்ணன் மிக மோசமாக தோற்கடிக்கப்பட்டான். அவன் சல்லியனை தோரோட்டியாக கொண்டதாலேயே இது நிகழ்ந்தது. சல்லிய என்பதன் பொருள் சந்தேகம். கர்ணா என்பதன் பொருள் காது.

எல்லா சந்தேகங்களும் உன் காதுகளின் மூலமாகவே உள்ளே நுழைகின்றன. உனது காதுகள்தான் சந்தேகத்தின் கதவுகள். சல்லியன் கர்ணனிடம் நீ எப்படி அர்ஜூனனை தோற்கடிப்பாய் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார். எனவே கர்ணன் தோற்கடிக்கப்பட்டான், சந்தேகம் வென்றது. சல்லியனை தவிர்த்துவிடு. உன்னுடைய தோரோட்டியாக சல்லியனை வைத்திருக்கக்கூடிய தேவை முற்றிலும் இல்லை.

அன்பு.

வெகு காலத்திற்கு முன்பு, அரேபியாவில் ஒரு ஆச்சரியப்படத்தக்க வியாபாரி இருந்தான். அவன் ஒருபோதும் தோல்வியை அறிந்ததில்லை. அவன் தொட்டதெல்லாம் பொன்னானது. அவன் ஒருவிதமான மந்திரவாதியென்று மக்கள் நினைத்தனர். அவன் அப்படித்தான். ஏனெனில் அவன் ஒரு பயணம் கிளம்பும்பொழுது அவனுடைய சுகமான மாளிகையை விட்டு ஒரு குறிப்பிட்ட காலம் போயிருந்தால் புதிய புதையல்களோடு சுமையேற்றப்பட்டு அவனுடைய ஒட்டகங்கள் திரும்பி வரும்.

சில சமயங்களில் அவை வைரங்களாலும், முத்துக்களாலும் நிறைந்திருக்கும் சில சமயங்களில் அவை தங்கம் மற்றும் தங்தாசுகளால் நிறைந்திருக்கும். சிலசமயங்களில் மிகவும் அழகான பெண்களால் நிறைந்திருக்கும். பிறகு ஒருநாள் இந்த அற்புதமான வியாபாரி ஒரு புத்தகத்தில் தன்னுடைய வெற்றியின் ரகசியத்தை வெளியிட்டுள்ளதாக வதந்தி பரவியது. இயல்பாகவே ஆயிரக்கணக்கான மக்களின் கூட்டம் அவன் வீட்டுவாசலில் குவிந்தது. அந்த வியாபாரி, தன்னுடைய வெற்றியின் ரகசியத்தை அந்த புத்தகத்தில் வெளியிட்டுள்ளதாக ஒப்புக் கொண்டது மட்டுமல்ல, அவனே அந்த மந்திரப்புத்தகத்தை 50 வருடங்களாக தொடர்ந்து படித்துவருவதாக கூறினான்.

முடிவில் அவன் நீங்கள் என்னுடைய அறிவுரையை பின்பற்றினால் உங்களுடைய வாழ்க்கையும் என்னுடைய வாழ்க்கையைப்போல ஆச்சரிமானதாக மாறும். ஆனால் அவன் அந்த புத்தகத்தை திறந்து கூட்டத்திற்கு காண்பித்தபோது அவர்கள் அதைப் பார்ப்பதற்கு கிட்டத்தட்ட பைத்தியம் போல அலைந்தனர்.

ஏழு வார்த்தைகள் மட்டுமே அந்த புத்தகத்தில் திரும்ப திரும்ப எழுதப்பட்டிருந்தது. நான் அந்த ஏழு வார்த்தைகளை உனக்கு சொல்ல விரும்புகிறேன். அவை, என்ன நிகழ்ந்தாலும் எப்பொழுதும் மேலும் ஒருமுறை முயற்சி செய்.

144.

அன்பு.

இப்பொழுது நீ எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனாலும் நீ இங்கிருப்பாய். வெளி எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. காலம் இனியொரு சுவராக இருக்காது. உடலியல் தொலைவு தொலைவை உண்டாக்காது. உடலியல் அருகாமை அருகாமையை உண்டாக்காது. நீ முற்றிலும் வேறுபட்ட ஒரு பரிமாணத்தில் நுழைந்திருக்கிறாய்.

பரிமாணமற்ற பரிமாணம். அங்கு பெருக்கமில்லை, இருமையில்லை. நான் மட்டுமே அங்கு இருக்கிறது. வெளியிலிருந்து புலனாகக்கூடிய நான் அல்ல. மற்றவரின் எல்லைக்கோட்டில் தொடங்கும் நான் அல்ல. ஆனால் அதற்கு மாறாக மற்றவராகவும் இருக்கும் நான். தத்துவமஸி, சுவதகேது அதுவும் நான். சுவதகேது.

145.

அன்பு.

துணிச்சலை ஏற்படுத்திக்கொள். துணிச்சலென்பது ஏற்கனவே அங்கிருக்கும் ஏதோவொன்றல்ல. அதற்குமாறாக துணிச்சலாக இருப்பதிலிருந்து பிறப்பது. பயமும் ஏற்கனவே அங்கு இருப்பதல்ல. துணிச்சலை ஏற்படுத்திக்கொள்ளுதன் காரணமாக ஏற்படும் சிக்கலே அது.

துணிச்சலை ஏற்படுத்திக்கொள்ளாத தன்மையை நீ ஏற்கனவே அனுபவித்திருக்கிறாய். உனது இருப்பின் மீது மேகம் போல படர்ந்திருக்கும் பயமே அதற்கு போதுமான சாட்சி. இப்போது துணிச்சலை ஏற்படுத்திக் கொள்ளுதலை அனுபவி. ஒருபுறம் துணிச்சலின் கதிரவன் எழுகிறது. மறுபுறம் பயத்தின் மேகம் மறைந்து கொண்டிருக்கிறது. பயமற்றதன்மையே ஆத்மா என்பதை நினைவில் கொள்.

அன்பு.

புலனாகாததை எவ்வாறு பார்ப்பதென்று நீ கேட்டிருக்கிறாய். புலனாவதற்கு கவனத்தைக் கொடு. வெறுமனே பார்க்காதே கவனத்தைக்கொடு. அப்படியென்றால், நீ ஒரு மலரை பார்க்கும்பொழுது உன்னுடைய முழு இருப்பும் கண்களாகட்டும். பறவைகளைக் கேட்கும்பொழுது உன்னுடைய முழு உடல் ஆத்மா காதுகளாகட்டும். ஒரு மலரை பார்க்கும்பொழுது சிந்திக்காதே. பறவைகளை கேட்கும்பொழுது யோசிக்காதே.

உன்னுடைய முழு தன்னுணர்வும் பார்க்கவோ, கேட்கவோ, நுகரவோ, சுவைக்கவோ தொடரவோ படட்டும். ஏனெனில் மேலோட்டமான நுண்ணுனர்வின் காரணமாகவே புலனாகாதது புலப்படுவதில்லை. அறியப்படாதது, அறியப்படாததாகவே இருக்கிறது. உனது நுண்ணுணர்வை ஆழப்படுத்து. நுண்ணுணர்வில் வெறுமனே நீந்தாதே. அதனுள் மூழ்கு. இதை நான் தியானமென்று அழைக்கிறேன். மேலும் தியானத்தில் பார்க்கப்படுபவை மறைந்துவிடுகின்றன. முடிவில் பார்ப்பவனும் மறைந்துவிடுகிறான். பிறகு பார்ப்பது மட்டுமே மிச்சமிருக்கிறது. இந்த பார்ப்பதில் புலனாகாதது புலப்படத்

தொடங்குகிறது. அறியப்படாததுஅறிந்து கொள்ளப்படுகிறது. அது மட்டுமல்ல..... அறிந்து கொள்ள முடியாததுஅறிந்து கொள்ள கூடியதாகிறது.

நான் எழுதிக் கொண்டிருப்பதைப்பற்றி யோசிக்கத் தொடங்காமல் இருக்க வேண்டுமென்பதை நினைவில் கொள். செயல்படு. எதுவும் எப்பொழுதும் கோட்பாடுகளை உருவாக்குபவர்களால் அடையப்பட்டதில்லை. தானே பார்ப்பதைத் தவிர அங்கு வேறெந்த கதவுமல்ல.

147.

அன்பு.

ஷோசி என்ற ஒரு அற்புதமான குரு இருந்தார். அவர் 'டோபுக்கு' கோவிலில் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த நாளிலிருந்து அது நிலைமாற்றம் அடைந்தது. நாள் வரும், போகும், இரவு வரும், போகும். ஆனால் கோவில் அசைவற்று மௌனமாக இருக்கும். அந்தக் கோவில் ஒரு ஆழமான மௌனத்தில் மூழ்கியது. அதிலிருந்து ஒரு சின்ன சப்தம் கூட எழவில்லை. அங்கு நூல்களிலிருந்து சூத்திரங்கள் ஜெபிக்கப்படவில்லை. அங்கு பிரார்த்தனையோ, வழிபாடோ நடக்கவில்லை. கோவிலின் மணிகள்கூட அசைவற்று இருந்தன. யாரும் அவைகளை தொடவில்லை. ஏனெனில் ஷோசியின் சீடர்கள் தியானத்தைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை. ஆண்டுக்கணக்கில் இது

அப்படியே இருந்தது. மக்கள் பக்கத்தில் ஒரு கோவில் இருக்கிறது என்பதையே மறந்துவிட்டார்கள். நூற்றுக்கணக்கான சன்னியாஸிகள் அங்கே இருந்தார்கள். ஏகப்பட்ட விஷயங்கள் நடந்தன. ஆனாலும் அங்கு மௌனமும் வெறுமையும் மட்டுமே இருந்தது. சிறந்த விஷயங்கள் அங்கே நிகழ்ந்தன. சுயத்தை உணரும் விளக்குகள் அங்கே ஏற்றப்பட்டன. ஞானமலர்கள் மலர்ந்தன. ஆனாலும் மௌனமும் வெறுமையும் மட்டுமே இருந்தது. பிறகு ஒருநாள் கோவில் மணிகள் ஒலிப்பதையும் புனிதநூல்களில் இருந்து சூத்திரங்கள் ஜெபிக்கப்படுவதையும் மக்கள் கேட்டனர். இந்த நம்பமுடியாத நிகழ்வு எவ்வாறு நிகழ்ந்தது? அவர்கள் கோவிலை நோக்கி ஓடினர். முழு நகரமும் அதன் வாசலில் கூடியது. ஷோசி இந்த உலகத்தை விட்டுச் சென்றுவிட்டார். நூல்களில் இருந்து சூத்திரங்கள் ஜெபிக்கப்பட்டன. மணிகள் அவருடைய இரந்த உடலின் மீது ஒலிக்கப்பட்டன, மக்கள் திகைப்படைந்தனர். ஆனால் அது மிகவும் சரியானது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் கோவில் உயிரோடு இருந்தவரை அது மௌனமாக இருந்தது

148.

அன்பு.

தியானம் என்பது செயலும் செயலற்ற தன்மையும் சேர்ந்தது. செயலுக்கு எதிராக இல்லாத ஒரு செயலற்றதன்மை. மேலும் செயலற்ற தன்மையை

மையமாக கொண்ட ஒரு செயல். செய்பவர் என்ற உணர்வு உள்ளே இல்லாதபோது, இந்த ஆச்சரியகரமான நிலையில் எல்லாமும் தானாகவே நிகழத் தொடங்குகிறது. சாட்சிபாவத்தில் இருப்பு செய்பவன் இல்லாமலாகி விடுகிறான்.

ஹோதேய் என்று ஒரு ஞானி இருந்தார். அவருடைய வகையில் அவர் ஒருவர்தான். எந்த குருவாவது வேறொருவரின் வகையில் இருந்திருக்கிறார்களா? அவருக்கென எந்த ஆசிரமும், எந்த கோவிலும், எந்த மடாலயமும், எந்த சீடர்களும் இல்லை. சாலைகள் தான் அவருடைய வீடு, அவருடைய ஆசிரமம், அவருடைய கோவில், அவருடைய மடாலயம். தோளில் பையை வைத்துக்கொண்டு அவர் நாள்முழுவதும் சாலையில் சுற்றுவார். அவருடைய பையில் இனிப்புகள், பழங்கள், விளையாட்டு பொம்மைகள் நிறைந்திருக்கும். அவர் அவற்றை குழந்தைகளுக்கு கொடுத்துவிட்டு அவர் அவர்களுடன் ஆடிபாடி சிரிப்பார். தியானத்தின் விதைகளை அவர்களுக்குள் போடும் கதைகளை அவர் அவர்களுக்கு சொல்வார். அவருடைய இருப்பில் குழந்தைகள் தியானத்தில் விழுவார்கள். அவர் சாலையில் நின்ற இடமெல்லாம் புனித இடமானது. பயணிகள் மதிப்பளித்தும் மௌனமாகவும் கடந்து செல்வர். ஹோதேய் ஒரு வாழும் தியானமாக இருந்தார். அவர் இருந்த இடமெல்லாம் கோவிலானது. பயணிகளிடம் அவர் தியானத்திற்கு ஒரு காசு என்று கேட்பார். அவருடைய பை விரைவில் காசுகளால் நிறைந்துவிடும். சிலசமயங்களில் சிலர்

கோவிலுக்கு வந்து மதத்தை பற்றி மக்களிடம் பேசுமாறு அழைப்பர். அவர் சிரித்துக்கொண்டே கோவிலுக்கு தயவுசய்து ஒரு காசு என்று கேட்பார். அவருடைய எல்லா வீட்டையும் அடைந்திருந்தது, அவர் எந்த கிராமத்தை கடந்து சென்றாலும் சரி, குழந்தைகள் அவருடைய செய்தி பரப்புபவர்களாகி விட்டனர். அவர்களின் முகத்தில் கடந்ததின் சுடர் வீசியது. மேலும் தனித்துவ பரவசத்தின் மலர்கள் அவர்களுடைய கண்களில் மலர்ந்தன. ஹோதேய் ஒரு இடத்தைக் கடந்தால் அப்போது ஒரு சிரிக்கும் தியானத்தை செய்தார். மெதுமெதுவாக மக்கள் அவருடைய பெயரை மறந்துவிட்டு அவரை சிரிக்கும் புத்தர் என அழைக்கத்தொடங்கினர். ஒருநாள் ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு மத பண்டிதர் அவரை வழியில் நிறுத்தி தியானம் என்றால் என்ன என்று  கேட்டார். அவர், ஹோதேய் புனித நூல்களை எடுத்துக்காட்டி தியானத்தைப்பற்றி ஒரு விளக்கம் தருவார் என எதிர்பார்த்தார். ஆனால் அதற்கு பதிலாக ஹோதேய் வயிறு குலுங்க சிரிக்கத் தொடங்கினார். பின் அவருடைய பையை கீழே வைத்துவிட்டு கண்களை மூடி தியானத்தினுள் மறைந்துவிட்டார். ஆனந்தகண்ணீர் அவருடைய கண்களில் இருந்து வழியத் தொடங்கியது. அந்த இடத்தில் அவருடைய உடல் மட்டுமே இருந்தது. அவர் வேறுதளத்திற்கு சென்றுவிட்டார். ஆம், அவர் கொடுத்ததே சரியான விடை. ஆனால் அந்த பண்டிதர் அதனை புரிந்துகொள்ள வில்லை. எல்லாவிதங்களிலும் ஒரு பண்டிதனை விட அறியாமை நிறைந்த ஒரு மனிதனை கணடறிவது கடினம். எனவே பண்டிதர் ஹோதேயை குலுக்கி, அவருடைய தியானத்தைக் கலைத்து

திரும்பவும் நடைமுறையில் தியானம் என்றால் என்ன என்று கேட்டார். ஏதோ ஹோதேய் கூறிய விடை நடைமுறையற்றது என்பதைப்போல. ஹோதேய் திரும்பவும் சிரித்துவிட்டு, தன்னுடைய பையை எடுத்து தோளில் வைத்துக்கொண்டு, பண்டிதரை வாழ்த்தும் வகையில் குனிந்து வணங்கிவிட்டு தன்னுடைய பயணத்தை தொடர்ந்தார். அவர் செல்லும் காலடிசத்தம். அவருடைய மௌனத்தின் அதே அமைதியை கொண்டிருந்தது. இதுதான் இரண்டாவது கேள்விக்கு அவரது பதில்.

149.

அன்பு.

குறியீடுகள் மங்களகரமாக உள்ளன. மேலும் வாய்ப்பு விலைமதிப்பற்றது. பிரபஞ்சத்திடம் சரணடைந்து விட்டு தொடர்ந்து செல். இருள் முற்றிலும் மறைந்துபோய் இந்த பிரகாசமான ஒளி மட்டுமே இருக்கும்வரை இந்த ஒளி வளர்ந்து கொண்டே இருக்கும். அங்கு அறியாமையை தவிர வேறு இருள் எதுவுமில்லை. அறியாமை இல்லாத இடத்தில் இருளில்லை. ஆணவமில்லை. கடல் மட்டுமே இருக்கிறது. துளி இருப்பதில்லை. இப்போது மலர்களில்லாமல் மணம் பொழிவதைப் போல இசை கருவிகளற்ற ஒரு இசை உன்மீது பொழியும். சத்தமற்ற சத்தம் அருகிலேயே உள்ளது. தொடர்ந்து செல்.
ஒரு பிரார்த்தனை நிறைந்த இதயத்துடன் முன்னால் சென்று கொண்டேயிரு. குறியீடுகள் மங்களகரமானவை, மேலும் வாய்ப்பு விலைமதிப்பற்றது.

அன்பு.

தியானத்தின் பரவசம் தனித்துவமானது, அந்த பரவச அனுபவம் மறு உலகத்தை சார்ந்தது. எப்போதும் மூடியிருக்க போகின்றன என்பது போல தோற்றமளித்த கதவுகள் திரும்பவும் திறந்திருக்கின்றன. மேலும் முன்பு ஊடுருவ முடியாத இருளாக இருந்ததின் மீது ஒரு நட்பு முறையிலான கதிரவன் பிரகாசிக்கிறான். இதயத்தின் இதழ் திடீரென ஒரு மலராக மாறிவிட்டது. இருப்பின் உள்ளார்ந்த தந்திகளில் ஓசையற்ற இசை இசைக்கப்படுகிறது. ஒவ்வொரு மூச்சும் நடனமாடுகிறது. உடல் மனதின் ஒவ்வொரு அணுவும் பாடுகிறது. நன்றியுணர்வுடன் இரு. ஆனந்தத்தால் நிறைந்திரு. பிரபஞ்சத்திற்கு நன்றி கூறு. உன்னுடைய முழு இருப்பும் பிரபஞ்சத்தின் கருணை எல்லையற்றது என்பதை கூறட்டும்.